பஞ்சலட்சணம்

தி. செல்வக்கேசவராய முதலியார், M.A.

தொகுத்துக் கோர்த்தது.

"எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார்க் காணி னிலையாம்."

சென்னை:
கி. க. அ. சங்கத்தார் அச்சுக்கூடம்.

1921.

முகவுரை

நன்னூல் தன்னளவில் எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் தர்க்க ரீதியாக உணர்த்துவதாயினும், அது பல விஷயங்களை இதரேதரமாக உரைத்தலால், இலக்கணம் கற்கப்புகுகின்ற மாணுக்கர்கள், பின் அறியத்தக்கவைகளை முன்னும், முன் அறியத்தக்கவைகளைப் பின்னுமாக அறிதல்வேண்டி இடர்ப்பட்டு, இலக்கணமென்ருல் முகஞ்சுளிப்பா ராகின்றனர். நினைவில் வைப்பது அவசியமில்லாத பல சூத்திரங்களையும் உரையையும் உதாரணங்களையும் சில பண்டிதர்கள் உருவிடும்படி வலியுறுத்தலால் மாணுக்கர்களுக்கு இலக்கணமென்பது விருப்பமில்லாத வேப்பம்பழ மாகின்றது. பிரயோகித்துக் காட்டப் பலவிதத்தில் பயில்விக்காமல், சில விதிச்சூத்திரங்களை உருவிடும்படி வலியுறுத்தினுல், மாணுக்கர் நன்னூலைக் கையால் தீண்டவும் அஞ்சுவாராகின்றனர். ஆகவே, எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் கற்பிக்கத்தக்க முறையாக நன்னூல் சூத்திரங்களை வகைப்படுத்தித் தொகுப்பது இவ்விலக்கணச் சுருக்கத்தின் நோக்கம். நன்னூலில் உள்ளபடியே உரையையும் உதாரணங்களையும் படித்தறியுமாறு சூத்திரங்களின் எண்கள் வலப்பக்கத்தில் இட்டிருக்கின்றன.

வசனநடையைப் போற்றற்குரிய இக்காலத்தில் வாக்கியங்களின் முடிபிலக்கணத்தை அறிவது ஒருதலை. இது பழைய இலக்கணங்களில் ஓரிடத்தில் ஒரு சீராக உரைத்திருப்பதில்லை. நன்னூலில் பல விடங்களில் உரைத்துள்ள சூத்திரங்களை ஓரிடமாகச் சேர்த்து வகைப்படுத்திக்கொள்ளின் வாக்கியலக்ஷணம் ஏறக்குறைய ஒழுங்காகும். இது செய்வதும் இவ்விலக்கணச் சுருக்கத்தின் ஒருபுடை நோக்கம்.

எழுத்தும் சொல்லும் உணர்ந்தார் செய்யுளிலக்கணமும் அணியிலக்கணமும் அறிவது முறை. சூத்திரங் காட்டி இடர்ப்படுத்தாமல் இவைகள் வசனமாகவே விளக்கியிருக்கின்றன. இவையெல்லாம் அறிவது பொருளின் பொருட்டாதலால், அது இறுதியில் ஒருவாறு மிகச் சுருக்கமாகச் சேர்த்திருக்கிறது.

சுருக்கமான இப்பஞ்சலக்ஷணத்தை உணர்ந்தவர், பின் நன்னூல் விருத்தியுரை தொல்காப்பியவுரை முதலியவற்றை எளிதில் கற்கலாகும்.

1903 ஆ அச்சிட்ட இச்சுருக்கம் இப்பொழுது சில நீக்கியும் சில சேர்த்தும் பதிக்கப்பெற்றுள்ளது.

1918. தி. சே.

புதிய பதிப்பின் முகவுரை

இலக்கணங் கற்குமுறையைச் சுருக்கமாக வகைப்படுத்திய அவ்வளவே முன் பதிப்பைத் தொகுத்த நோக்கம். சில குறிப்புக்களையும் உதாரணங்களையும் அங்கங்கே காட்டுவது இந்நூலைப் பெரிய பாடசாலை வகுப்புகளில் கற்பிப்பதற் கேற்ற நல்ல சர்தனமாகுமென்று நண்பரான இயற்றமிழாசிரியர் சிலர் வற்புறுத்தினர். அது செய்வதோடு, மாணுக்கர்களுக்கு உதவியான சில விஷயங்களும் சில அநுபந்தங்களும் அங்கங்கே தொடர்புபடுத்தியிருக்கின்றன.

எவ்விதத்திலாவது பிள்ளைகள் எளிதில் இலக்கணங் கற்றுத் தமிழைப் போற்றுதல் வேண்டுமென்பதே இந்நூலை அச்சிடுதலான விருப்பம். தமிழர்க்கு உதவியாகத் தமிழ் வல்லவர்கள் செய்வது ஒரு தலையான பல வேலைகள் ஏற்பட்டுவருகின்றன. அது செய்யாத வரையில் அவர்கள் பாஷாபிமானமும் தேசாபிமானமும் இல்லாதவர்களென்று பழிக்கப்படுவர். இப்பழியை ஒழிக்கும் பொருட்டுத் தமிழிலக்கிய விலக்கணங்களை மாணவர்கள் எளிதிலறிந்து பயின்று புலமை நிரம்பும்படி செய்வது இயற்றமிழாசிரியர்களைப் பொறுத்த கடமை. இக்கடமையைக் கடைபோகச் செலுத்துமாறு தமது அறிவாற்றலாலும் அனுபவ சித்தியாலும் தோன்றுகின்ற முறைகளை இவர்கள் மேலும் மேலும் பின்பற்றுவாராக. இது செய்யாவிடின் இவர்கள் கூலிக்கு மாரடிப்பவரே யாவர்.

1921. தி. சே.

பஞ்சலட்சணம்.

I. எழுத்து—Orthography.

எழுத்து

மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே. (நன்.—58)

குறிப்பு.—மொழிமுதற்காரணம் ஆம் ஒலி—சொல்லுக்கு முக்கிய காரணமாகிய ஒலி.

அணுத்திரள் ஒலி—அணுத்திரளின் காரியமாகிய ஒலி.

அணு—செவிப்புலனும் அணு: அது ஒலிநுட்பம்.

எழுத்துக்கு முதற்காரணம் அணுக்கூட்டம்: மொழிக்கு முதற் காரணம் எழுத்து.

எழுத்தாவது, சொல்லுக்கு முக்கிய காரணமும் அணுத்திரளின் காரியமுமாகிய ஒலி. அது முதலெழுத்தென்றும் சார்பெழுத்தென்றும் இரண்டு வகையினை யுடையது.

"எழுத்தாவது தன்னையே உணர்த்தியும் சொற்கு இயைந்தும் நிற்கும் ஓசை. கடலொலி சங்கொலி முதலிய ஓசைகள் பொருளுணர்த்தாமையாலும், முற்கு வீளை இலதை முதலியன பொருளுணர்த்தினவேனும் எழுத்தாகாமையானும் அவை ஈண்டுக் கொள்ளப் படா"—நச்சினார்க்கினியர். முற்கு—கெற்சிதம்—முழக்கம். வீளை—சத்தம். சீழ்க்கை—நாவின் நுனியைக் கோலி ஊதும் ஒருவகை ஒலி. முற்கு வீளை இலதையென்பன அடிநாவடியிற் காட்டப்படும் ஒலிக் குறிப்பு.

முதலெழுத்து

உயிரு முடம்புமா முப்பது முதலே. (59)

அம்முத லீரா றாவி: கம்முதல்
மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர். (63)

குறிப்பு.—ஆவி—உயிர். அகர முதலிய பன்னிரண்டும் உயிர் போலத் தனித்து நடக்கும் வன்மையுடைமையால் உயிர் எனப்பட்டன.

ககரமுதலிய பதினெட்டும், உயிரோடு கூடியல்லது நடக்கும் வன்மையில்லாத உடல் (மெய்) போல, அகரத்தோடு கூடியல்லது நடக்கும் வன்மையின்மையால் மெய்யெனப்பட்டன.

அ இ உ எ ஒக்குறி லைந்தே. (64)
ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔநெடில். (65)
அ இ உம்முதல் தனிவரிற் சுட்டே. (66)

குறிப்பு.—அகரம் தூரப்பொருளையும், இகரம் சமீபப்பொருளை யும், உகரம் எதிர்முகமின்றிப் பின்னிற்கும் பொருளையும் சுட்டும். உகரம் நடுவிலுள்ள பொருளைச் சுட்டும் என்றும் சிலர் கூறுவர்.

எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்
ஏயிரு வழியும் வினவா கும்மே. (67)

எவன்—யாவன்: எக்கொற்றன்—யாங்ஙனம்.
கொற்றனா—கொற்றனோ.
ஏவன்—கொற்றனே.

வல்லினம் கசட தபற என வாறே. (68)
மெல்லினம் ஙஞண நமன என வாறே. (69)
இடையினம் யரல வழள என வாறே. (70)

குறிப்பு.—இம்மூவகை யெழுத்துக்களும், வலி மெலி இடை யென்றும், வன்கணம் மென்கணம் இடைக்கண மென்றும், வல் லெழுத்து மெல்லெழுத்து இடையெழுத் தென்றும், வன்மை மென்மை இடைமை யென்றும் பெயர் பெறும்.

வல்லென்றொலித்தலாலும் வல்லெனத் தலைவளியாற் பிறத்த லாலும் வல்லெழுத்தாயிற்று. மெல்லென்றிசைத்தலாலும் மூக்கின் வளியாற் பிறத்தலாலும் மெல்லெழுத்தாயிற்று. இடைநிகர்த்தாய் ஒலித்தலாலும் இடைநிகர்த்தாய் மிடற்றுவளியாற் பிறத்தலாலும் இடையெழுத்தாயிற்று.

சார்பெழுத்து

உயிர்மெய் ஆய்தம் உயிரள பொற்றள
பஃகிய இ உ ஐ ஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத்தாகும். (60)

குறிப்பு.—சார்பெழுத்தாவது, முதலெழுத்துக்களைப்போல் தனித்து நடத்தலின்றிச் சார்ந்துவரும் எழுத்து (சார்பு—சார்தல்). தம்மொடு தாம் சார்ந்தும் மொழியைச் சார்ந்தும் வருகிற முதன்மையில்லாத எழுத்து. உயிரளபெடை—ஒற்றளபெடை—குற்றியலிகரம்—குற்றியலுகரம்—ஐகாரக்குறுக்கம் — ஔகாரக்குறுக்கம் — மகரக்குறுக்கம் என்பவை முதலெழுத்தின் விகாரமேயன்றி வேறெழுத்தல்லாமையாலும், ஆய்தம் உயிரெழுத்துமாகாது மெய்யெழுத்துமாகாது அவைகளுக்கு வேறு மாகாது வருதலாலும், சார்பெழுத்துக்கள் அப்பிரதானமாயின.

உயிர்மெய்.

புள்ளிவிட் டவ்வொடு முன்னுரு வாகியும்
ஏனை யுயிரோ டுருவு திரிந்தும்
உயிரள வாயதன் வடிவொழித் திருவயிற்
பெயரொடு மொற்றுமுன் னாய்வரும் உயிர்மெய். (89)

குறிப்பு.—உயிர்மெய் உயிரும் மெய்யுமாகிய இரண்டிடத்துப் பிறந்த எழுத்து. அவை ககரமுதல் னௌகாரமீறாய்க் கிடந்த இருநூற்றுப்பதினாறு. பன்னீருயிரும் பதினெண் மெய்யொடுங் கூடப் பன்னிரு பதினெட்டு இருநூற்றுப் பதினாறும். மெய்களெல்லாம் உயிரோடு கூடி உயிர்க்குங்கால் அம்மெய்கள் புள்ளிவடிவம் நீங்கி

அகரத்தோடு கூடுங்கால், அவ்வடிவைத் தம்முள் அடக்கிப் பழைய வடிவாகியும்,

ஆகாரத்தோடு அதன் குறிவடிவே அருகே காலாகியும், ணகர றகர னகரமாகிய இம்மூன்றும் அதன் கீழ் வளைந்த வடிவாகியும்,

இகரத்தோடு அதன் குறியாகிய மேல் விலங்கு வடிவாகியும்,

ஈகாரத்தோடு அம்மேல் விலங்குடன் அதன் உறுப்புக்குறி வளைந்த புள்ளி வடிவாகியும்,

உகரத்தோடு ககர — டகர — மகர — ரகர — ழகர — ளகரமாகிய இவ்வாறும் உகரத்தின் தலைக்குறியாகிய கீழ்விலங்கு வடிவாகியும், ஙகர — சகர — பகர — யகர — வகரமாகிய இவ்வைந்தும் அதனிடை வடிவாகியும், ஞகர — ணகர — தகர — நகர — லகர — றகர — னகர இவ்வேழும் அதன் கீழ்வடிவாகியும்,

ஊகாரத்தோடு ககரமொன்றும் அதன் முதல் வடிவாகியும், மற்றையவைந்தும் அதன் தலையின் சுழி வடிவாகியும், ஙம்முதலைந்தும் அதன் தலையின் வளைந்த வடிவாகியும், ஞம் முதலிய வேழும் அதனுறுப்பு வடிவாகியும்,

எகர ஏகாரத்தோடு அவற்றின் முதற்குறியாகிய கோடு வடிவாகியும்,

ஐகாரத்தோடு அதன் குறியாகிய இருகோடு இணைந்த வடிவாகியும், அஃதன்றி ண — ள — ல — ன ஆகிய இந்நான்கும் அதனிடையின் வடிவாகியும்,

ஒகர ஓகாரத்தோடு முன்னர் அவற்றின் முதற்குறியாகிய கோடு வடிவொடு அருகே அவற்றின் கால் வடிவாகியும், ணகர — றகர — னகரமாகிய மூன்றும் அவற்றின் வளைந்த வடிவாகியும்,

ஔகாரத்தோடு முன்னர் அதன் முதற்குறியாகிய கோடு வடிவோடு அருகே அதனுறுப்பு வடிவாகியும் நிற்க இவற்றைத் தொல்லாசிரியர் மெய்யும் உயிரும் வேறாக எழுதாது இவ்வாறு குறியிட்டெழுதினர்.

இவை மெய் முன்னாகவும் உயிர் பின்னாகவும் உச்சரிக்கப்படும்.

மெய்கள் தம்மேலேறிய உயிரினளவே தமக்களவாகிவரும். இருவயின்பெயர் — உயிரும் மெய்யுமாகிய இரண்டிடத்தும் பிறந்த உயிர்மெய் என்னும் பெயர்.

மெய்களின் ஏறிய உயிர்களின் குறிகள்.

அ	○	இப்புள்ளி யொழிவு	க
ஆ	ா	— பின்கால்	கா
	◡	— கீழ்ப்பிறை	ணா
இ	ி	— மேல்விலங்கு	கி
ஈ	ீ	— சுழிமேல்விலங்கு	கீ
உ	◡	— கீழ்விலங்கு	கு
	⌐	— இறங்குகீற்று	சு
	ு	— மடக்கேறுகீற்று	ணு
ஊ	ூ	— பின்வளை தலைக்கீற்று	கூ
	◡	— இறங்கு கீற்றுக் கீழ்விலங்கு	சூ
	ூ	— மடக்கேறு கீற்றுக்கால்	ணூ
எ	ெ	— முன்கோடு	கெ
ஏ	ே	— முன்சுழிக்கோடு	கே
ஐ	ை	— முன்னிணைக்கோடு	கை
	ை	— முன் வளைதலைக் கீற்று	ணை
ஒ	ெ — ா	— முன்கோடு—பின்கால்	கொ
	ெ — ◡	— முன்கோடு—கீழ்ப்பிறை	ணொ
ஓ	ே — ா	— முன்சுழிக்கோடு—பின்கால்	கோ
	ே — ◡	— முன்சுழிக்கோடு—கீழ்ப்பிறை	ணோ
ஔ	ெ — ள	— முன்கோடு—பின்கோட்டுக்கால்	கௌ

"உருவுதிரிந் துயிர்த்தலாவது, மேலுங் கீழும் விலங்குபெற்றும், கோடுபெற்றும், புள்ளிபெற்றும், புள்ளியுங்கோடும் உடன்பெற்றும், உயிர்த்தலாம். கி — கீ முதலியன மேல்விலங்கு பெற்றன. கு — கூ முதலியன கீழ்விலங்கு பெற்றன. கெ — கே முதலியன கோடு பெற்றன. கா — ஙா முதலியன புள்ளி பெற்றன. அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதினர். மகரம் உட்பெறு புள்ளியை வளைத்தெழுதினர். கொ — கோ — ஙொ — ஙோ முதலியன புள்ளியுங்கோடும் உடன்பெற்றன....உயிர்மெய் என்பது உம்மைத்தொகை" என்று நச்சினர்க்கினியர் உரைத்திருக்கிறார்.

ஆய்தம் — குற்றெழுத்தின் முன்னதாய் உயிரொடுகூடிய வல்லெழுத்தாறன் மேலிடத்தாய் வரும் மூன்று புள்ளி வடிவாகிய எழுத்து.

சூலாயுத வடிவாய் எழுதப்பட்டதால் இது ஆய்தம் என்று பெயர் பெற்றது.

எஃகு — கஃசு — கஃடு — கஃது — கஃபு — கஃறு — அஃகான் — மஃகான்—வெஃகாமை—அஃகி என்றிங்ஙனம் வரும். இது தனிநிலை யெனவும் பெயர் பெறும் (தனிநிலை — ஒன்றையும் சார்ந்துவராமை). மூன்று புள்ளி வடிவாய் எழுதப்படுதலால் முப்புள்ளி எனவும் பெறும். இது அஃகேனம் என்றும் வழங்கும்.

இப்படி ஆய்தம் எங்கும் குற்றெழுத்துக்கும் வல்லெழுத்துக்கும் நடுவேயே வரும்.

குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே. (90)

உயிரளபு — உயிரளபெடை. ஒற்றளபு — ஒற்றளபெடை. அஃகிய இ — இகரக்குறுக்கம்-குற்றியலிகரம். அஃகிய உ — உகரக்குறுக்கம்—குற்றியலுகரம். அஃகிய ஐ —ஐகாரக்குறுக்கம். அஃகிய ஔ — ஔகாரக்குறுக்கம். அஃகிய மஃகான்—மகரக்குறுக்கம். அஃகிய தனிநிலை — ஆய்தக் குறுக்கம். இவற்றின் இலக்கணம் பின்னல் வேண்டிய இடங்களில் கூறப்படும்.

சார்பெழுத்துக்கள் "சார்ந்துவரல் மரபின் மூன்று" என்பதும் "அவைதாம், குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தமென்ற முப்பாற் புள்ளியும்" என்பதும் தொல்காப்பியம்.

- எழுத்து.
  - முதலெழுத்து.
    - உயிர்.
    - மெய்.
  - சார்பெழுத்து.
    - உயிர்மெய்.
    - ஆய்தம்.
    - உயிரளபெடை.
    - ஒற்றளபெடை.
    - குற்றியலிகரம்.
    - குற்றியலுகரம்.
    - ஐகாரக்குறுக்கம்.
    - ஔகாரக்குறுக்கம்.
    - மகரக்குறுக்கம்.
    - ஆய்தக்குறுக்கம்.

சந்தியக்கரம்.

அம்முன் இகரம் யகர மென்றிவை
எய்தின் ஐயொத் திசைக்கும் அவ்வோடு
உவ்வும் வவ்வும் ஔவோ ரன்ன. (125)

குறிப்பு.—சந்தியக்கரம் (இணையெழுத்து) என்பார் "ஒத்து எய்தின் ஐ (இசைக்கும்) என முடிப்பர்.

"அகர இகரம் ஐகாரமாகும்"; "அகர உகரம் ஔகாரமாகும்"; "அகரத் திம்பர் யகரப் புள்ளியும், ஐ யெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்" என்பன தொல்காப்பியம்.

இங்ஙனம் சில வெழுத்துக்கள் கூடிச் சில வெழுத்துக்கள்போல இசைத்தலால் இவை எழுத்துப்போலி எனவும் படும். இங்ஙனங் கொள்வார் "இவை ஒத்திசைக்கும்" என முடித்துக் கொள்வர்.

எழுத்துக்களின் உருவம்.

தொல்லை வடிவின எல்லா வெழுத்தும். ஆண்
டெய்தும் எகர ஒகர மெய் புள்ளி. (98)

குறிப்பு.—"மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்" என்றும், "எகர ஒகரத் தியற்கையு மற்றே" என்றும் (மகரமானது ப் என்பது) "உட்பெறு புள்ளி உருவாகும்மே" என்றும் தொல்காப்பியம் கூறுதலால், மெய்யெழுத்துக்களும் எகரமும் ஒகரமும் மகரமும் அவர் காலத்துக்கு முன்னரே க் ங் என்றும், எ என்றும் ஒ என்றும் ப என்றும் வழங்கியிருந்தன. நன்னூலார் காலத்துக்கு முன்னரே மகரம் உட்பெறு புள்ளியை வளைத்தெழுதலாயிற்று. அதனால் அவர் அதைக் கூறிற்றிலர்.

"எ ஒ என்னும் உயிர்க் குற்றெழுத்தும், இவ்விரண்டு மேறின கெ — கொ முதலிய உயிர்மெய்க் குற்றெழுத்தும், க் — ங் முதலிய மெய்யெழுத்தும் மேலே — ο — இப்படி ஒரு புள்ளியிட் டெழுதப் படும்" என்று சொல்லி, அதன்கீழ் எவன் — ஒப்பு — கெண்டை — கொண்டை என்பனவற்றைக் காட்டியுள்ளார், தாம்செய்து கி — பி — 1828 — ம் ஷூ அச்சிட்ட இலக்கண வினாவிடையில் தாண்டவராய முதலியார் என்னும் பெரும்புலவர். பின்னும், நெடுங்கணக்கினுள் முற்காலத்து வழங்கின வரிவடிவிற்கும் இக்காலத்தில் வழங்கும் வரி வடிவிற்கும் வேறுபாட்டை

இக்காலத்தில்			முற்காலத்தில்
கா	....	....	கo
கொ	....	....	கெo
கௌ முதலிய		....	கெo‖
ம	....	....	ப (மேலே o)
ஊ	....	....	உo‖

எனக் காட்டியிருக்கிறார்.

தமிழிற் சிறப்பெழுத்தும் பொதுவெழுத்தும்.

> ற ன ழ எ ஒவ்வும், உயிர் மெய்யும் உயிரள
> பல்லாச் சார்பும் தமிழ். பிற பொதுவே. (150)

குறிப்பு.—தமிழில் உள்ள முதலெழுத்தை வடமொழி யெழுத் தோடு ஒத்திட்டுப் பார்க்கு மிடத்தில் இருபத்தைந்து எழுத்துக்கள் தமிழ்க்கும் வட மொழிக்கும் பொதுவானவை என்பதும், எ—ஒ—ழ—ற—ன—என்னு மைந்தும் தமிழ்க்கே உரிய சிறப்பெழுத்துக்கள் என்பதும் விளக்கமாகும். இவ்வைந்தனுள்ளும் ழகரம் வேறெந்த மொழியிலும் வழங்குவதில்லை. வடமொழியே தமிழ்மொழிக்கு மூலபாஷை என்று நம்பிய சுவாமிநாததேசிகர் தமது இலக்கணக்கொத்தில் "அன்றியும் ஐந்தெழுத்தாலொரு பாடையென், றறையவே நாணுவர் அறிவுடை யோரே", எனக் கூறியது தமிழ்க்கேயுரிய சிறப்பெழுத்துக்களை நோக் கியே. வடமொழி நெடுங்கணக்கிலிருந்து தமிழில் வந்து வழங்குகிற எழுத்துக்களும் சில உண்டு. அவை ஜ—ஶ—ஷ—ஸ—ஹ—க்ஷ என்பவை. உ-ம். புஜம்—பாஶம்—மேஷம்—வாஸம்—மஹாராஜன்—பக்ஷம்.

தமிழ் நெடுங்கணக்கில் உள்ள மிகையும் குறையும். — தமிழ் மொழிகளின் உச்சாரணத்துக்கு அவசியமான ஒலிகள் நாற்பது. வரி வடிவில் அவற்றைக் குறிப்பதற்கு உள்ள எழுத்துக்கள் முப்பத்தொன்றே. ஆகவே மற்ற ஒன்பதொலிகளுக்கும் ஒன்பது தனிவேறெழுத்துக்கள் இன்மை தமிழ் நெடுங்கிற்கு ஒரு குறையே என்னலாம். தமிழேயான சொற்களில் வல்லெழுத்துக்களை எடுத்தொலிப்பதற்கான குறிகள் இல்லை. இனமான மெல்லொற்றையும் சில இடையெழுத்தையும் அடுத்துவரும் வல்லினம் எடுத்தொலிப்பதே இயற்கையாதலால் அவ்விதமான குறிகள் வேண்டுவனவல்ல. மெல்லின இடையினங்களை அடுக்காமல் தனியாகவே க ச ப என்பவை புகுதல் வசித்தான் வருபவன் என்ற சொற்களிற்போல வேறு புதிய ஒலிகளாக உச்சரிக்கப்பெறும். உரிய எழுத்துக்களில்லாமை குறையே. இணையெழுத்தாகக் கொள்ளினும் எழுத்துப்போலியாகக் கொள்ளினும் ஐகார ஔகாரங்கள் மிகையே என்னலாம். ஐகார ஔகாரங்களையும் அவை ஊர்ந்துவரும் உயிர்மெய்களையும் ஒழிப்பினும் தமிழ் இடர்ப்படாது. ங—ஞ இரண்டு தவிர ஙகரவருக்கத்தில் மற்றையவெல்லாம் மிகையே. நகரமும் னகரமும் பிறப்பளவில் வெகுவாய் வேறுபடாமையாலும், இரண்டும் மெல்லினமே யாகையாலும், இவ்விரண்டும் வேண்டா, ஒன்றே அமையாதோ எனின், நகரம் தகரத்துக்கே இனமாய்த் தந்நகரமென்றும் னகரம் றகரத்துக்கினமாய் றன்னகரமென்றும் வழங்கப்படுவனவாயின: னகரத்தோடு தகரமும் நகரத்தோடு றகரமும் மயங்குதலில்லை. ஒன்றே கொண்டால், முந்நூறு—முன்னூறு எந்நாடு—என்னுடு என்னும் தொடர்மொழிகளில் சந்தியிடர்ப்பாடு உண்டாகும்; பொருட்டெளிவுங் கெடும். ஆதலால் இரண்டும் வேண்டும் என்பதே விடை. இடையின ரகரம் வல்லின றகரம் ஆகிய இரண்டில் ஒன்றை ஒழித்து விடலாமே எனினும் இவ்வித இடர்ப்பாடுகளோடு தனிமொழிகளில் பொருண்மலைவும் உண்டாமாதலால் அங்ஙனம் ஒழிப்பது ஆகாது.

ஹிந்துஸ்தானி — பாரஸீகம் — இங்க்லீஷ் முதலான பாஷைகளிலிருந்து தமிழில் வந்துவழங்குதலான சொற்களை வரிவடிவில் அமைத்துக்காட்டத் தமிழ் நெடுங்கணக்கில் போதிய எழுத்துக்கள் இல்லை.

தமிழ் நெடுங்கணக்கின் வரலாறு.—தமிழெழுத்துக்களும் கிரந்த எழுத்துக்களும் தேவநாகரியெழுத்துக்களிலிருந்தோ அதற்கு முந்திய அசோக மகாராஜனுடைய சிலா சாசன வெழுத்துக்களிலிருந்தோ உண்டானவை என்பதும், தென்னுடுகளில் பனையேடுகளில் எழுத்தாணிகொண்டெழுதும் வழக்கத்தால் அவை உருவு திரிந்தன என்பதும், சிலருடைய கொள்கை. மலையாளத்தில் உள்ள யூதரும் ஸிரியன் கிறிஸ்தியரும் பெற்றுள்ள ராஜ சாசனங்கள் தமிழ்மொழியில்

எழுதியுள்ளன. அந்த சாசனங்களில் ஒன்று கி—பி 774 ஞூத்தில் ஏற்பட்டது. தமிழ் நெடுங்கணக்கின் மிகப் பழமையான வரிவடிவில் அவை எழுதியிருக்கின்றன. அவற்றை வட்டெழுத்தென்பர் சாசன சர்ச்சை செய்வோர். அவ்வடிவு ஏறக்குறைய கி—பி பத்தாவது நூற்றூண்டில் வழக்கிழந்ததாகக் காண்கிறது. அப்பால் ராஜசாசனங்களாகிய கல்வெட்டுகளைக் கோலெழுத்தென்பர் (கோல் — செங்கோல்).

அகத்தியர் தமிழ்நாட்டில் புகுதற்கு முன்னரே தமிழில் இயல் இசை நாடகமான இலக்கிய விலக்கணங்கள் வழங்கியிருந்ததனால், தமிழ் நெடுங்கணக்கு வேறு நெடுங்கணக்கினின்றும் பிறந்ததன்றென்பதே துணிவு. அதற்குப் போதிய சான்றுகள் உள்ளன. மிக்க வீரத்துடனே போர்புரிந் திறந்த வீரனது ஞாபக சின்னமாகக் கல் நடுதல் என்று முற்காலத்தில் தமிழ் நாட்டில் ஓர் ஐதிகம் உண்டு. அதாவது கழல்வீரர் நீண்ட கல் ஒன்று கொண்டுவந்து அதனை மஞ்சனமாட்டி மடையும் மதுவும் மலரும் முதலியன கொடுத்து விழாநடத்திக் கல்லில் இறந்த வீரனது பெயரும் பீடும் எழுதி ஓரிடத்தில் நடுதலாம். இந்த ஐதிகத்தால் தமிழர் அசோகனுக்கு முந்தியே தமிழ் நெடுங்கணக்குடையார் என்பது விளங்கும்.

கடைச்சங்கக்காலத்து நிகண்டாகிய திவாகரம்

"பெயரெழுத்து முடிவெழுத்து வடிவெழுத்துத் தன்மை
யெழுத்தென எழுத்தின் பெயரியம் பினரே"

என்றும், அக்காலத்து நிகண்டாகிய பிங்கலந்தையும்

"வடிவுபெயர் தன்மைமுடிவு நான்கெழுத்தே"

என்றும் உரைக்கின்றன. அவற்றுள் வடிவெழுத்தென்பன பூர்வ எகிப்தியர் வழங்கியதுபோன்ற சித்திரக்குறிகள்.

பெயரெழுத்தென்பன சீனர்போல ஒவ்வொரு பெயரை உணர்த்துதற்கு இட்டு வழங்கும் சங்கேதக் குறிகள்.

தன்மையெழுத்தென்பன குணங்கள் சக்திகள் முதலியவற்றைக் குறித்தற்கு வழங்கிய அடையாளங்கள்.

பூர்வ எகிப்தியர்கள் விவேகத்தைக் கண்ணும் எறும்பும், அறிவின்மையை ஈயும், நன்றியின்மையை விரியன் பாம்பும், வெற்றியைக் கருடனும், தந்திரத்தை நரியுமாகக் குறித்து வழங்கியது இதற்கு உதாரணம். முடிவெழுத்தென்பன வினை நிகழ்ச்சியை உணர்த்தும் வாக்கியங்களைக் குறிக்க வழங்கிய அறிகுறிகள். இரண்டு அல்லது பல பிராணிகளின் அவயவங்களை ஒன்றாகக் கலந்து ஒருருவம் அமைத்து ஒரு விஷயத்துக்கே குறியாக வழங்குவது எகிப்தியர் முறை.

மேற்கூறியதுபோலவே யாப்பருங்கல விருத்தியானது "உருவே யுணர்வே ஒலியே தன்மையென" மற்றோர் எழுத்துவகை காட்டி, அவற்றுள்

காணப்பட்ட உருவமெல்லாம்
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவி லோவியன் கைவினை போல
எழுதப் படுவது உருவெழுத் தாகும்"

என்றும்,

கொண்டஓர் குறியால் கொண்ட வதனை
உண்டென் றுணர்வது உணர்வெழுத் தாகும்

என்றும்,

இசைப்படு புள்ளின் எழாஅலொடு புணர்ந்து
செவிப்புல னாவது ஒலியெழுத் தாகும்

என்றும்,

முதற்கா ரணமும் துணைக்கா ரணமும்
துணைக்கா ரணத்தொடு தொடரிய உணர்வும்
அவற்றொடு புணர்ந்த அகத்தெழு வளியின்
மிடற்றுப் பிறந் திசைப்பது தன்மையெழுத்தே

என்றும் விளக்குகின்றது. [இவை செந்தமிழ்ப் பத்திரிகையிற் கண்டவை.]

மாத்திரை (இன்னதென்பது)

இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை. (100)

எழுத்துக்களின் மாத்திரை.

மூன்றுயிரள. பிரண்டாம் நெடில். ஒன்றே
குறிலோ டையெளக் குறுக்கம் ஒற்றள(பு).
அரையொற் றிஉக் குறுக்கம் ஆய்தம்.
கால்குறள் மஃகான் ஆய்த மாத்திரை. (99)

மாத்திரைக்குப் புறநடை.

ஆவியும் ஒற்றும் அளவிறந் திசைத்தலும்
மேவும் இசைவிளி பண்டமாற் றாதியின். (101)

எழுத்தியலுக்கு அநுபந்தம்

தொல்காப்பியம்

எழுத்துக்களது பெயரும் முறையும் தொகையும்.

எழுத்தெனப்படுப
அகரமுதல்
னகர இறுவாய் முப்பஃ தென்ப,
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே.

குறிப்பு.—சார்ந்துவரல் மரபின்மூன்று = சார்ந்துவருதலைத் தமக்கு இலக்கணமாகவுடைய மூன்று (சார்பெழுத்து மூன்று). அலங்கடை = அல்லாத விடத்து.

சார்பெழுத்துக்களது பெயரும் முறையும்.

அவைதாம்
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தமென்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோரன்ன.

குறிப்பு —முப்பாற்புள்ளி = மூன்று கூற்றதாகிய புள்ளிவடிவு. எழுத்து ஓர் அன்ன—(முற்கூறிய) முப்பதெழுத்தோடு ஒரு தன்மைய வாய் வழங்கும்.

மாத்திரைக்கு அளவு.

கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே.

குறிப்பு.—இயற்கைமகன் தன் குறிப்பினன்றி, இரண்டிமையும் ஒருகாற்கூடி நீங்கின காலக்கழிவும் அ எனப் பிறந்த ஓசையது தோற் றக் கேட்டுக் காலக்கழிவும் ஒக்கும். அதுபோலவே நொடித்தற்றொழி லிற் பிறந்த ஓசையது தோற்றக்கேட்டுக் காலக்கழிவும் அ எனப் பிறந்த ஓசையது தோற்றக்கேட்டுக் காலக்கழிவும் ஒக்கும். அவ்வே—அவ் விரண்டே. மாத்திரை—எழுத்தின் மாத்திரைக்கு அளவு.

"நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறு" என்பது ஆணைகூறுதல் (ஆணை—சான்றோர் கட்டளை).

குற்றெழுத்து.

அவற்றுள், அ இ உ,
எ ஒ என்னும் அப்பா லைந்தும்
ஓரளபிசைக்கும் குற்றெழுத் தென்ப.

நெட்டெழுத்து.

ஆ ஈ ஊ, ஏ ஐ,
ஓ ஔ என்னும் அப்பாலேழும்
ஈரளபிசைக்கும் நெட்டெழுத்தென்ப.

சுட்டு.

அ இ உ அம்மூன்றும் சுட்டு.

வினா.

ஆ ஏ ஓ அம்மூன்றும் வினா.

உயிர்.

பன்னீரெழுத்தும் உயிரென மொழிப.

மெய்.

னகர இறுவாய்ப்
பதினெண் ணெழுத்தும் மெய்யென மொழிப.

தனிமெய்யின் அளவு.

மெய்யின் அளவே அரையென மொழிப.

குறிப்பு.—அளவு – மாத்திரை.

சார்பெழுத்துக்களின் அளவு.

அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே.

குறிப்பு.—அவ் இயல் நிலையும்–முற்கூறிய அரைமாத்திரையாகிய இயல்பின் கண்ணே நிற்கும்.

புள்ளிபெறுபவை.

மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்.
எகர ஒகரத் தியற்கையும் அற்றே.

உயிர்மெய்.

புள்ளியில்லா எல்லா மெய்யும்
உருவுருவாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனையுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீரியல உயிர்த்த லாறே.

குறிப்பு.—உருவுருவாகி புள்ளிபெறுகின்ற காலத்து இயல்பாகிய அகர நீங்கிய வடிவே வடிவாகிநின்று, ஆயீரியல – அவ்விரண்டு இயல்பினையுடைய (ஆயீர் = அ + ஈர்). உயிர்த்தலாறு – ஒலிக்கும் முறைமை.

உயிர்மெய்யின் ஓசை நிற்கும் முறை.

மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே.

உயிர்மெய்யின் அளவு.

மெய்யோடியையினும் உயிரியல் திரியா.

வல்லெழுத்து.

வல்லெழுத்தென்ப க ச ட த ப ற.

மெல்லெழுத்து.

மெல்லெழுத் தென்ப ங ஞ ண ந ம ன.

இடையெழுத்து.

இடையெழுத் தென்ப ய ர ல வ ழ ள.

II. சொல்—Etymology.

சொல்லின் பொதுவிலக்கணம்.

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே.

(தொல்-சொல்-பெயரியல்—1.)

குறிப்பு.—"சொல்லாவது எழுத்தினான் ஆக்கப்பட்டு இருதிணையும் பொருட்டன்மையும் ஒருவன் உணர்தற்குக் கருவியாம் ஓசை. பொருட்டன்மையாவது மக்கட்டன்மையும் இயங்குதிணைத்தன்மையும் நிலைத்திணைத்தன்மையுமாம். கருவியாவது அப்பொருட்டன்மையை ஒருவன் உணர்தற்கு அவ்வோசை கருவியாய்நிற்றல்."—நச்சினார்க்கினியர்.

"சொல்லென்பது எழுத்தினான் ஆக்கப்பட்டுத் திணையறிவுறுக்கும் ஓசை: தன்னை உணர நின்றவழி எழுத்தெனப்படுந் தான் இடைநின்று பொருளுணர்த்தியவழிச் சொல்லெனப்படும்."—இளம்பூரணர் (உரையாசிரியர்).

பவணந்தியும் சொல் இன்ன தென்பதை "எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருடரின் பதமாம்" (128) என்று கூறினார். அச்சொற்றான் தனிமொழியும் தொடர்மொழியுமென இருவகைப்படும். தனிமொழி பொருள் விளக்குமாற்றைத் தொல்காப்பியர் "நிலம் தீ நீர் வளி விசும்போடைந்தும், கலந்தமயக்கம் உலகமாதலின், இருதிணை ஐம்பால் இயனெறி வழாஅமைத், திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்" என மரபியலில் விளக்கினார். தொடர்மொழி, இருமொழித்தொடரும் பன்மொழித்தொடருமென இருவகைப்படும்.

"உயர்திணை யென்மனார் மக்கட்சுட்டே; அஃறிணை யென்மனார் அவரல பிறவே, ஆயிருதிணையின் இசைக்குமன்சொல்லே" எனத் தொல்காப்பியர் சொல்லும் பொருளும் வரையறுத்துணர்த்தினார். அச்சொற்கள் பொருளுணர்த்துமாற்றைப் "பொருண்மை தெரித்தலும் சொன்மை தெரித்தலும், சொல்லினாகும் என்மனார் புலவர்" என்றும் "தெரிபுவேறு நிலையலும் குறிப்பிற்றோன்றலும், இருபாற்றென்ப பொருண்மைநிலையே" என்றும் கூறினார்.

இவற்றையெல்லாந் தொகுத்துப் பவணந்திமுனிவர்

"ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்று
இருதிணை ஐம்பாற் பொருளையும் தன்னையும்
மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே" (259)

என்றார்.

மூவகைமொழி.

ஒருமொழி ஒருபொருளனவாம் தொடர்மொழி
பலபொருளன. பொது இருமையும் ஏற்பன. (260)

இருதிணை.

மக்கள் தேவர் நரகர் உயர்திணை.
மற்றுயி ருள்ளவும் இல்லவும் அஃறிணை. (261)

ஐம்பால்.

ஆண் பெண் பலரென முப்பாற் றுயர்திணை. (262)

ஆண்பால் விகுதி—அன்—ஆன்—மன்—மான்—ன்.
பெண்பால் விகுதி—அள்—ஆள்—இ—ள்.
பலர்பால் விகுதி—அர்—ஆர்—கள்—மார்—ர்—இர்.

ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை. (263)

ஒன்றன்பால் விகுதி—து.
பலவின்பால் விகுதி—அ—வை—கள்—வ்.

மூவிடம்.

தன்மை முன்னிலை படர்க்கைமூ விடனே. (266)

வெளிப்படை குறிப்பு.

ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி
ஆகுபெயர் அன்மொழி வினைக்குறிப்பே
முதலொகை குறிப்போ டின்னபிறவும்
குறிப்பிற் றருமொழி. அல்லன வெளிப்படை. (269)

சொல்லின்வகை.

அதுவே,—

இயற்சொல் திரிசொ லியல்பிற் பெயர்வினை
எனவிரண் டாகும்: இடையுரி யடுத்து
நான்குமாம், திசை வடசொ லணுகாவழி. (270)

குறிப்பு.—இயற்சொல் திரிசொ லியல்பிற் பெயர்வினை = இயற்சொல்லும் திரிசொல்லுமென்னும் தன்மையையுடைய பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும். இங்ஙனமே இடையுரி என்பவற்றோடும் "இயற்சொல் திரிசொலியல்பின்" என்பதை ஒட்டிக்கொள்ளவேண்டும். கொள்ளவே, சொல்லானது, பெயரியற்சொல்—பெயர்த்திரிசொல், வினையியற்சொல்—வினைத்திரிசொல், இடையியற்சொல்—இடைத்திரிசொல், உரியியற்சொல்—உரிந்திரிசொல் என எண்வகைப்படுமென்பதும், திசைச்சொல்லும் வடசொல்லும் சேர்ந்தவிடத்துப் பத்துவகைப்படுமென்பதும் பெறப்படும்.

இயற்சொல்.

செந்தமிழாகித் திரியாது யார்க்கும்
தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல். (271)

குறிப்பு.—செந்தமிழ் = செந்தமிழ் நிலத்துமொழி. இயற்சொல் = இயல்பாற் பொருளுணரும் சொல்.

பெயரியற்சொல்—மண்—பொன்.
வினையியற்சொல்—நடந்தான்—வந்தான்.
இடையியற்சொல்—அவனை—அவனால் என்பவற்றில் ஐ—ஆல்.
உரியியற்சொல்—அழகு—அன்பு.

திரிசொல்.

ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்
பலபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
அரிதுணர் பொருளன திரிசொல் லாகும்.

குறிப்பு.—திரிசொல் = இயற்சொல்லின் வேறுபட்ட சொல். திரிதல்—வேறுபடுதல். வேறுபடுதல் என்றது இயற்சொல்போல இயல்பால் உணரப்படாது அரிதின் உணரப்படுதல்.

கிள்ளை-சுகம்-தத்தை என்பன கிளி என்னும் ஒரு பொருள் குறித்த பலபெயர்த் திரிசொல்.

வாரணம் என்பது யானையும் கோழியும் சங்கு முதலாகிய பல பொருள் குறித்த ஒருபெயர்த் திரிசொல்.

படர்ந்தான்—சென்றான்—ஏகினான் என்பன போயினான் என்னும் ஒருபொருள் குறித்த பலவினைத் திரிசொல்.

சேறும்—வருதும் என்பவற்றுள் றும்—தும் என்னு விகுதிகள் தன்மைப்பன்மை யெதிர்காலம் என்னும் ஒருபொருள் குறித்த பல

விடைத்திரிசொல். கொல் என்பது ஐயமும் அசைநிலையுமாகிய பல பொருள் குறித்த ஓரிடைத்திரிசொல்.

சால—உறு—தவ—நனி—கூர்—கழி என்பன மிகுதி என்னும் ஒரு பொருள் குறித்த பலவுரித் திரிசொல். கடி என்பது காப்பு—கூர்மை—அச்சம்—கரிப்பு—விளக்கம்—சிறப்பு—மணம் முதலிய பலபொருள் குறித்த ஓருரித்திரிசொல்.

திசைச்சொல்.

செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினில் தமிழொழி நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொல் என்ப. (273)

குறிப்பு.—செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிருநிலம்—பன்னிரண்டு கொடுந் தமிழ்நாடு. அவை:—

தென்பாண்டி குட்டம் குடம்கற்கா வேண்பூழி
பன்றி அருவா அதன்வடக்கு—நன்றாய
சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்.

[புனனாடு—சோழநாடு. தென்பாண்டி—செந்தமிழ்ப் பாண்டிநாட்டிற்குத் தென்றிசையிலுள்ளது.]

தென்பாண்டியில்	— ஆ — எருமை	— பெற்றம்	என்று வழங்கும்
	— சோறு	— சொன்றி	”
குட்டநாட்டில்	— தாய்	— தள்ளை	”
	நாய்	ஞெள்ளை	
குடநாட்டில்	— தந்தை	— அச்சன்	”
கற்கா	— வஞ்சர்	— கையர்	”
வேணாட்டில்	— தோட்டம்	— கிழார்	”
பூழி	— சிறுகுளம்	— பாழி	”
	நாய்	ஞமலி	
அருவா	— செய்	— செறு	”
	சிறுகுளம்	— கேணி	”
அருவாவடதலையில்	— புளி	— எகின்.	”
	குறுணி	— குட்டை	”
சீதநாட்டில்	— எடா	— எலுவன்	”
	தோழி	— இகுளை	
	தம்மாமி	— தந்துவை	”

தமிழ் நிலத்தைச்சூழ்ந்த பதினேழ் நிலம்:—

சிங்களம் சோனகம் சாவகம் சீனம் துளுக்குடகம்
கொங்கணம் கன்னடம் கொல்லம் தெலுங்கம் கலிங்கம் வங்கம்
கங்கம் மகதம் கடாரம் கவுடம் கடுங்குசலம்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதினேழ்புவி தாமிவையே.

அந்தோ என்பது சிங்களம். எருத்தைப்பாண்டில் என்பதும் செப்பு என்பதும் தெலுங்கு. மாமரத்தைக் கொக்கு என்பது துளுவம். கரைய—சிக்க—குளிர என்பன கன்னடம் (கருநடம்).

திசைச் சொற்கள்.

அரபி.

அகாலத் – நியாயஸ்தலம்
அசூர் – Head-quarters
அமல் (அமுல்) – management
அயன் – actual
அலாக் (அலாயிதா) – separately
அஜுமத் – that which is common, பொது.
ஆசாமி – person
இசாரா – குத்தகை
இஜாரா – rent
இஜாராதார் – renter
இரிசால் – remittance
இலாகா – jurisdiction
உசூர் – Head-quarters
கஸ்பா – The head station in a taluq.
கசாலா – distress
கஜாஞ – treasury
கஜான்ஜி – treasurer
கவாபு (கவாப்) – roasted meat
கமாம்சு – business
காடிகாஞ – stable
காஜி – நியாயாதிபதி
காயம் – permanent

அரபி—(தொடர்ச்சி.)

காய்தா – order, உத்தரவு
கிஸ்திபேரீஸ்து – bariz
கைது – imprisonment
கைதி – prisoner
சராப் – a shroff
சிம்டா – மயிர்பிடுங்குங் கருவி
ஜப்தி – seizure
ஜாஸ்தி – increase
ஜில்லா – district
டபேதார் – Duffadar
தர்ஜமா – translation
தாலுகா – Taluk
திவானி – a place of justice
தேவடி – palace
நகதா – நகது – ready money
நகதி – a monied man
நகல் – copy, duplicate
நாஜூக் – neatness
நாமா – a deed or a bond
நிக்கா – marriage or second marriage.
நொக்கு (நிருக்கு) – price fixed.
பசலி – Mohammedan official revenue year.

திசைச் சொற்கள்—(தொடர்ச்சி).

அரபி—(தொடர்ச்சி.)

பசல் ஜாஸ்தி – இரட்டைவரி
பிஸ்மில்லா – by the grace of the all merciful.
பியூன் – Peon
பீகம் – பேகம் – Princess, a lady of rank.
மஸ்நட் – musnud, throne.
மாமூல் – custom
முகதா – in presence of
முன்சிப் – (munsiff)
முசாபரி – முசாபர் – travelling
மோல்வி – மௌல்வி – Moulvi, a learned Muhammadan teacher.
ரயத்து – cultivator, (ryot)
லாயக் – fitness
வகாலத் – agency, proxy
வசூல் – collection

பாரசீகம்.

அர்ஜி – petition
ஆப்காரி – revenue from spirituous liquors.
உமேதா – waiting
கசாயிக்காரன் – butcher
கடுதாசி – paper
கமான் – (an arch) வளைவு
கம்பி
கம்மி – deficiency, குறைவு
காம்ரா – a room
கார்பார் – management
கிஸ்திபந்த் – A written rule showing when the kist becomes due.

பாரசீகம்—(தொடர்ச்சி.)

கில்லேதார் – commandant of a fort.
கைராத் – anything given in charity.
கோஷா – அந்தப்புரம்
சர்பரா – provision, providing.
சிபாய் – a soldier
சிபாரிசு – recommendation
சிப்பந்தி – establishment
சிரஸ்ததார் – A native head man in a Collector's cutchery.
சுபேதார்
சுமார் (சிமார்) – average
சோப்தார் – வெள்ளித்தடிக்காரன்
டகாயத் – dacoity
தஸ்தாவேஜ்—documents, vouchers.
தஸ்தூரி—privileges, சுதந்தரம்
பக்கிரி—சந்யாசி
பந்தோபஸ்த்—securing
பேஷ்—best
பேஷ்கஷ்—tribute
பேஷ்கார் – an officer of revenue inferior to tahsildar.
மாஜர்நாமா—a memorial
முனிஷி—a teacher of language.
மேஜை – a table
ரஸ்தா—road
ரவாணு—a permit to pass goods free of duty.
ராப்தா—thoroughfare
லங்கர்காணு—தர்ம சத்திரம்

திசைச் சொற்கள்—(தொடர்ச்சி).

இந்துஸ்தானி.

அசல் – a very excellent thing; the original.
அசூர்–Head-quarters
அந்தஸ்த் – order, condition
அபின் – opium
அலுவா – ஓர் பலகாரம்
அம்பாரி – a howda
அர்க்கார்–messenger
அஸ்திரி–a living
ஆஜர் – ஆசர் – readiness
இஸ்திரி–ironing of clothes
உக்கா
உசார் (உஷார்)– Watchfulness
உசூர்–Head–quarters
கலாயி-lining of copper vessels
கவாத்–drill of soldiers
கார்கானு – establishment, a workshop.
கிச்சிடி
குடாக் – உக்கா
குமஸ்தா – a clerk
கும்மட்டம் – a globe-lantern of paper.
குல்லா – a cap
கொறடா – a horse-whip
கோட்டா – mocking
சபாஸ்
சப்ஜா – The seeds of the குசும்பா tree.
சவாரி – a ride, a drive
சாலக் – finery, daintiness
சால்வை – shawl
சானிகை – an earthen dish
சிராய் – trousers

இந்துஸ்தானி—(தொடர்ச்சி.)

செக்பந்தி – defining of boundaries.
சோட்டா – a club, a rod,
சௌக்காரி –
ஜமுக்காளம் – a carpet
ஜமிக்கி – a female ear ornament.
ஜவாப் – answer
ஜவான் – a peon
ஜல்தி – swiftness
ஜோத்தி – slippers
ஜோடு – a pair
டப்பால் (தபால்) – the Post
டவாலி –
டாப்பு – a list
டாணு –
டீக்கா –
டீக்கு
தாவல் – proof
தண்டா – trouble
தயார் – readiness
தர்பார் – government, durbar
துபாஷி – an interpreter
துப்பட்டா – a sheet
தொப்பி – hat
தோப்பரு – a leather bag or bucket.
நபர் – an individual
நபாப்
நிகா (aim)
நிஜார்
பக்கா – greatness
பக்காளி – water carrier
பங்களா –

திசைச் சொற்கள்—(தொடர்ச்சி).

இந்துஸ்தானி—(தொடர்ச்சி.)

பங்கா – punkah
பசந்த் – anything pleasing to the eye.
பஞ்சா – palm of the hand
பஞ்சாயத்து
பஸ்தி – a commodious place
பஜாரி – a harlot
பட்டா – a deed of lease
பத்தாய் – distilled liquors
பல்லா – பல்லாய், an earthen vessel.
பாத்தியா – an annual funeral rite.
பாரா – watching, custody
பாவா
புலௌ
பைசல் – adjustment
பைசா–one-twelfth of an anna
மகமல் – velvet
மசாலா – condiments
மாகாணம் – a province
மாசூல் – produce
மோஹ்ரு – மொகரா – a gold coin
ரஜா – leave
ராஜி – consent, சம்மதம்
ருஜு – proof
ரூபா – a rupee

போர்ட்யுகேசியம்.

அமார் (a cable)
அலமாரி
கக்குசு (privy)
கிராம்பு (cloves)
குசினி (kitchen)
சாவி (key)

போர்ட்யுகேசியம்—(தொடர்ச்சி).

ஜன்னல் (window)
பாதிரி (priest)
லேஞ்சு (handkerchief)

இங்க்லீஷ்.

அண்டிமாண்ட் (on demand)
அப்பீல் (appeal)
ஆக்ட் (act)
ஆஸ்பத்ரி (hospital)
ஆபீஸ் (office)
ஆர்னீஸ் (harness)
இங்கி (ink)
இஞ்சின் (engine)
இஞ்சினீர் (engineer)
உயில் (will)
ஐஸ் (ice)
கலம் (column)
கலெக்ட்டர் (collector)
கவர்னர் (governor)
களர் (collar)
காபி (copy)
காப்டென் (கப்தான் – Captain)
காப்பி – coffee
கார்ட் (card)
கார்ட் (guard)
காலெஜ் (college)
கிரசணயில் (Kerosene oil)
கிரிமென்ட் (agreement)
கேஸ் (case)
கேட் (gate)
கோச் (coach)
கோட் (coat)
கோப்பை (cup)
கோர்ட் (Court)
கௌன் (gown)

திசைச் சொற்கள்—(தொடர்ச்சி).

இங்க்லீஷ்—(தொடர்ச்சி.)

க்லோப் (globe)
க்ராப் (crop)
க்ரோட்டன் (croton)
ஸப்பு (soap)
ஸம்மன் (summons)
ஸிவில் (civil)
ஸீக் (sick)
ஸீல் (seal)
ஸூப் (soup)
ஸ்டீமர் (steamer)
ஸ்டீல்பேனா (steel pen)
செக் (cheque)
ஷர்ட் (shirt)
ஷாப் (shop)
ஜட்ஜ் – (judge)
ஜெயில் (jail)
டாக்ட்டர் (doctor)
டிக்ரி (degree)
டீ (தேயிலை) tea
டோல்கேட் (tollgate)
ட்ராம் (tram)
ட்ரெஸ் (dress)
ட்ரெயின் (train)
தொராம் (drachm)
நெம்பர் (number)
நைஸ் (nice)
நோட் (note)
நோட்டீசு (notice)
பொட்லர் (butler)
பம்ப் (pump)
பாக் (pack)
பாங்கி (bank)
பிஞ்சினீர் (pensioner)
பிஞ்சின் (pension)
பிடிஷன் (petition)

இங்க்லீஷ்—(தொடர்ச்சி.)

பிஸ்கோத் (biscuit)
புருசு (brush)
பென்ஸில் (pencil)
பேனா (pen)
பைஸிகில் (bicycle)
பொக்லீஸ் (buckles)
பொத்தான் (button)
போலீஸ் (police)
ப்ராந்தி (brandy)
ப்ளீடர் (pleader)
மஸ்லின் (muslin)
மல் (mull)
மெம்பர் (member)
மோட்டார் (motor)
ரப்பர் (rubber)
ராங்கி (rank)
ரெஜிஸ்டர் (register)
ரெயில் (rail)
ரோஜா (rose)
ரோட் (road)
லாயர் (lawyer)
லைஸென்ஸ் (license)
லோகல் பண்ட் (local fund)

இதரமானவை.

உடிகலான் – Eau de Cologne
சிலுவை – The cross of Christ.
பீங்கான் – porcelain
பீப்பா – a cask
புதினா – an herb
போகணி – ஓர் பாத்திரம்
மேஸ்திரி – a foreman
மேஜோடு – stockings
வாத்து – a goose
லஸ்கார்

வடசொல்.

பொதுவெழுத்தானும் சிறப்பெழுத்தானும்
ஈரெழுத்தானும் இயைவன வடசொல். (274)

குறிப்பு.—பொதுவெழுத்தா லியைந்தன:—அமலம்—கமலம்—மேரு—காரணம்—காரியம். சிறப்பெழுத்தா லியைந்தன:—சுகி—போகி—சுத்தி. ஈரெழுத்தானும் இயைந்தன—அரன்—அரி—கடினம்—சலம்.

The Sanskrit contained in Tamil may be divided into three portions of different dates.

(1) The most recent portion was introduced by the three religious schools,—the school of the Saiva Sidhanta (the Philosophy of the Agamas), the School of Sankara Charya (Advaita), and the School of Sri Vaishnava founded by Ramanuja Charya (Visishtadvaita).–11th to 16th century. The Sanskrit derivatives introduced by these are pure unchanged Sanskrit.

(2) The school of writers by which the largest portion of the Sanskrit derivatives found in Tamil were introduced was that of the Jainas.—6th to 8th century. The Sanskrit derivatives are very considerably altered, so as to accord with Tamil euphonic rules.

(3) Tamil contains many derivatives belonging to the very earliest period of the literary culture of the language, —derivates probably of an earlier date than the introduction of Sanskrit into the other dialects. They appear to have been derived from oral intercourse with the first Brahminical priests, scholars, and astrologers, and probably remained unwritten for a considerable time. They are greatly corrupted.

வடமொழிகள்.

அக்கினி—தீ—நெருப்பு	அண்டம்—முட்டை
அங்குலம்—விரல்	அதரம்—(கீழ்) உதடு
அசம்—அஜம்—ஆடு	அத்தி—எலும்பு. (ஹத்தி)—கொலை
அசனம்—சோறு	அந்தகாரம்—இருள்
அசுவம்—குதிரை	அபத்தம்—பொய்
அஞ்சனம்—கறுப்பு—கருமை—மை	அயம்—இரும்பு

வடமொழிகள் —(தொடர்ச்சி.)

அரசன்—மன்னன்
அஸ்தமனம்—மாலை
அற்புதம்—புதுமை
ஆகாசம்—விண்
ஆகாரம்—உணவு
ஆக்கினை—கட்டளை
ஆசாரம்—ஒழுக்கம்
ஆசை—விருப்பம்
ஆரணியம்—காடு
ஆலசியம்—சோம்பல்
ஆலிங்கனம்—தழுவல்
இதம் (ஹிதம்) நன்மை
இந்தனம்—விறகு
இரத்தம்—செந்நீர்
இருதயம்—இரத்தாசயம்—மனம்
இரசம்—சுவை
உக்கிரம்—கொடுமை
உதயம்—காலை,
உதரம்—வயிறு
ஊரு—தொடை
ஒஷதி—மருந்து
ஔஷதம்—மருந்து
கஜம்—யானை
கட்கம்—வாள்
கண்டம்—கழுத்து
கதலி—வாழை
கந்தம்—மணம்
கபாலம்—மண்டை
கரம்—கை
கர்த்தபம்—கழுதை
கர்னம்—காது
காங்கை—வெப்பம்
கிரகம்—வீடு
கிரி—மலை
கிரீடம்—முடி
கிருதம்—நெய்
கிருபை—அருள்
கிருமி—புழு
குக்குடம்—கோழி
குணம்—இயல்பு
கூர்மம்—ஆமை
கோதண்டம்—வில்
கோபம்—சினம்—வெகுளி
சகித்தல்—பொறுத்தல்
சக்கரம்—ஆழி
சக்தி—வலி
சத்தம்—ஒலி
சத்தியம்—மெய்
சந்திரன்—திங்கள்
சந்தேகம்—ஐயம்
சத்திரம்—குடை
சமுத்திரம்—கடல்
சரணம்—கால்
சரீரம்—உடல்
சருமம்—தோல்
சர்ப்பம்—பாம்பு
சலம் (ஜலம்)—நீர்
சாகை—கிளை
சார்த்தூலம்—புலி
சிசு—குழந்தை
சிந்தூரம்—சிவப்பு
சிரசு—தலை
சிலை—கல்
சீக்கிரம்—விரைவு
சீதளம்—குளிர்ச்சி
சீலம்—ஒழுக்கம்
சீவன்—உயிர்
சுகம்—இன்பம்
சுவர்னம்—பொன்
சூரியன்—ஞாயிறு
சூலம்—கழு
சேடம் (சேஷம்)—மிச்சம்—எச்சில்

வடமொழிகள் —(தொடர்ச்சி.)

சேதம்—கேடு—நட்டம்—பிரிவு
சேனபதி—படைத்தலைவன்
சௌக்கியம்— இன்பம்
தடாகம்—ஏரி—குளம்
ததி—தயிர்
தந்தம்—பல்
தம்பம் (ஸ்தம்பம்)—தூண்
தாதா—கொடையாளி
தாது—நரம்பு
தாமிரம்—செம்பு
திரவியம்—செல்வம்
தீபம்—விளக்கு
தீரம்—கரை
துக்கம்—துயரம்
துவசம்—கொடி
தூமம்—புகை
தெய்வம்—கடவுள்
தேசம்—நாடு
நகம்—உகிர்
நதி—ஆறு
நவம்—புதுமை
நவநீதம்—வெண்ணெய்
நாசி—மூக்கு
நாபி—கொப்பூழ்
நாயகி—மனைவி
நாரிகேளம்—தேங்காய்
நித்திரை—தூக்கம்
நிந்தை—இகழ்ச்சி
நேத்திரம்—கண்
பருவம்—பொழுது
பர்வதம்—மலை
பலம்—பழம்
பயம்—அச்சம்
பந்து—உறவு
பரிசம்—தொடுதல்—ஊறு
பக்ஷி—பறவை
பாசம்—அன்பு—கயிறு
பாணம்—அம்பு
பார்யாள்—மனைவி
பாலியம்—இளமை
பானம்—குடிப்பது
பிதா—தகப்பன்
பிசாசம்—பேய்
பிரகாசம்—ஒளி
பிரவாகம்—வெள்ளம்
புட்(ஷ்)பம் பூ—மலர்
புத்தி—அறிவு
புத்திரன்—மகன்
பூமி—நிலம்
பூர்வம்—பழமை
போசனம்—உணவு
மகரம்—சுறு
மகிஷம்—எருமை
மசானம்—சுடுகாடு
மச்சம்—மீன்
மது—கள்
மதுரம்—இனிமை
மனம்—உள்ளம்
மரகதம்—பச்சை
மனுஷர்—மக்கள்
மாதா—தாய்
மாதுலன்—மாமன்
மாமிசம்—தசை—ஊன்
மாருதம்—காற்று
மார்ச்சாலம்—பூனை
மிருகம்—விலங்கு
மூஞ்சி—முகம்
மூலம்—வேர்
மூஷிகம்—எலி
மேதை—நிணம்

வடமொழிகள் —(தொடர்ச்சி.)

யாகம்—வேள்வி
யுத்தம்—போர்
ரதம்—தேர்
ரத்தம்—செந்நீர்
ராகம்—பண்
ரிஷபம்—எருது
ருசி—சுவை
ரோமம்—மயிர்
வஸ்திரம்—ஆடை
வருஷம்—மழை
வர்ணம்—நிறம்
வனம்—தோப்பு
வாகனம்—ஊர்தி
வாகு—தோள்
விசாலம்—விரிவு
விஷம்—நஞ்சு
விரதம்—நோன்பு
விருச்சிகம்—தேள்
விரோதம்—பகை
விவாகம்—மணம்
வீதி—தெரு
க்ஷீரம்—பால்
ஸ்நாநம்—குளித்தல்—நீராடல்

சொல்லுக்கு அநுபந்தம்

தொல்காப்பியம்.

சொல்லெனப்படுவ பெயரே வினையென்
றாயிரண்டென்ப அறிந்திசி னோரே.

குறிப்பு.—ஆயிரண்டு = அ + இரண்டு.

இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கிற் றோன்றும் என்ப.

குறிப்பு.—அவற்று வழிமருங்கின்—இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயர் வினைகளின்கண் தாம் தோன்றுதற்கு இடமாகிய இடத்தே. தாம் தோன்றுதற்கு இடமாவன அவன் அவள் உண்டான் உண்டாள் துவைத்தல் துவைக்கும் என்றாற்போல்வன. இடமல்லாதன மரம் மான் என்றாற்போல்வனவாகிய பெயரும் உண் தின் என்றாற்போல்வனவாகிய முதனிலைப்பெயர் தானே நிற்பனவும்.

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே.

குறிப்பு.—இயற்சொல்—இயல்பாகிய சொல். திரிசொல்—இயற்சொல் திரிந்துவருஞ் சொல். திசைச்சொல்—திசைக்கண் வழங்குஞ்

சொல். வடசொல் — ஆரியச்சொல். செய்யுளீட்டச் சொல் — ஒரு பொருண்மேல் நிகழும் செய்யுளை ஈட்டுதற்கு உரிய சொற்கள். பிற பாடைச் சொற்கள் ஈட்டுதற்கு உரியவன்றிச் சிறுபான்மை வருமாயின். அவை செப்பு குளிரு சிக்கு அந்தோ என்றாற் போல்வன.

அவற்றுள், இயற்சொற் றாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை இசைக்குஞ் சொல்லே.

குறிப்பு.—செந்தமிழ் நிலமாவது வையையாற்றின் வடக்கும் மருத யாற்றின் தெற்கும் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்குமாம்.

ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
இருபாற் றென்ப திரிசொற் கிளவி.

குறிப்பு —இயற்சொல்லைத் திரிக்குங்கால் தம்எழுத்துச் சிறிது நிற்பத் திரிப்பனவும், அவ்வியற்சொற் றம்மையே பிறசொற் கொணர்ந்து முழுவதூஉந் திரிப்பனவும் என இருவகையாம். கிளி மயில் என்பவற்றைக் கிள்ளை மஞ்ஞை எனச் சிறிதுநிற்பத் திரித்தும் அவற்றைத் தத்தை பிணிமுகம் எனப் பிறசொற்கொணர்ந்து முழுவதூஉந் திரித்துங் கூறுதல். மலைக்கு வெற்பு விலங்கல் விண்டு என்பன முழுவதூஉந் திரிந்தன. இவை ஒருபொருள் குறித்த வேறுசொல். உந்திஎன்பது யாழ்ப்பத்தலும் கொப்பூழும் தேர்த்தட்டும் கானியாற்றிடையும் உணர்த்துதல் முழுவதூஉந் திரித்தது. இது வேறுபொருள்குறித்த ஒருசொல். அளகென்பது கோழி கூகை மயில் என்னும் மூன்றுசாதியிற் பெண்பாற்கும் பெயராதலின் இதுவும் வேறுபொருள் குறித்ததாம். இவை முழுவதூஉந்திரிந்தன. இவையெல்லாம் பெயர்த்திரிசொல்.

கேட்டீவாயாயின்—செப்பீமன்—ஈங்குவந்தீத்தாய் — புகழ்ந்திகுமல்லரோ—என்மனார் — என்றிசினோர்—பெறலருங்குரைத்து என்பனபோல்வன வினைத்திரிசொல். இவை சிறிது நிற்பத் திரிந்தன.

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி.

குறிப்பு —செந்தமிழ் சேர்ந்த பன்னிருநிலம்—செந்தமிழ்நாட்டைச் சூழ்ந்த பன்னிரண்டு நிலம் அப்பன்னிரண்டையும் புறஞ்சூழ்ந்த பன்னிரண்டு நிலம்

பன்னிரு நிலமாவன:—பொங்கர்நாடு ஒளிநாடு தென்பாண்டிநாடு குட்டநாடு குடநாடு பன்றிநாடு கற்காநாடு சீதநாடு பூழிநாடு மலையமா

நாடு அருவாநாடு அருவாவடதலை எனத் தென்கீழ்பால் முதலாக வட கீழ்பால் ஈறாக எண்ணுக.

இப்பன்னிரண்டையுஞ்சூழ்ந்த பன்னிரண்டாவன சிங்களமும் பழந்தீவும் கொல்லமும் கூபமும் கொங்கணமும் துளுவும் குடகமும் கருநடமும் கூடமும் வடுகும் தெலுங்கும் கலிங்கமுமாம்.

வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே.

குறிப்பு.—அவை வாரி—மேரு—குங்குமம்—மணி—மானம்—மீனம்—வீரம்—வேணு—காரணம்—காரியம்—நிமித்தம்—காரகம் என்றாற்போலச் சான்றோர் செய்யுட்கண் வருவன.

இனி ஒழிந்தோர் செய்யுட்கண்வருவன கமலம்—அமலம்—மூலம்—கோபம்—ஞானம்—ஞேயம்—தமாலம்—தாரம்—திலகம்—நாமம்—யானம்—யோனி—உற்பலம் இவைபோல்வன பிறவுமாம்.

சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்.

குறிப்பு.—பொதுவெழுத்தான் இயன்றனவேயன்றி வடவெழுத்தான் இயன்ற வடசொல் சிதைந்துவரினும் பொருத்தமுடையன செய்யுளிடத்து நீக்கார்.

தந்திரம்—சூத்திரம்—விருத்தி—அருத்தாபத்தி—உத்தி என்றாற்போல்வன நூலுட் சிதைந்துவந்தன.

பங்கயம்—இடபம்—விசயம்—இருடிகள்—மேகம்—பந்தம்—மயானம்—விடம்—துங்கம்—பலம்—பாரம்—சர்ச்சனை—சாதி—சேனை—சித்தி—சாதனம்—அயன்—அரி—அரன்—ஆரம்—அருகம்—சிங்கம்—மோக்கம்—காமம்—பக்கம்—சூலம்—சதம்—போதகம்—போகம்—சுத்தம்—சலம்—மோகம்—யோகம்—வந்தனை—வேலை—சாலை—மாலை—உவமை—வனிதை—புரி—மேதினி—குமரி—நதி—அரங்கம்—இலங்கை—இயக்கன்—உலோபம்—உலோகம்—நிருத்தம்—கீதம்—வாச்சியம்—வச்சிரம்—அருத்தம்—கருமம்—கருப்பம்—காப்பியம்—பருப்பதம் என்றாற்போல்வன பின்னுள்ளோர் செய்யுட்கண் திரிந்து ஏற்கும் எழுத்துக்களான் மருவிவந்தன.

இனிச் 'சிதைந்தன வரினும்' எனப் பொதுப்படக் கூறியவதனால், ஆணை—வட்டம்—நட்டம்—கண்ணன் எனப் பாகதமாக்ச் சிதைந்தனவுங் கொள்க.

பெயர்ச்சொல்—(Nouns).

பெயர்ச்சொல் (இன்னதென்பது.)

இடுகுறி காரண மரபோ டாக்கம்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்று
வேற்றுமைக் கிடனுய்த் திணைபா லிடத்தொன்
றேற்பவும் பொதுவும் ஆவன பெயரே. (275)

குறிப்பு.—இடுகுறி மரபு. இடுகுறி யாக்கம்.
காரணக்குறி மரபு. காரணக்குறி யாக்கம்.
மரபு—தொன்றுதொட்டு வருவன. ஆக்கம்—தொன்றுதொட்டு வருதலின்றி நடுவிலே ஒருவரால் ஆக்கப்பட்டு வருவன.

தொழிலல காலந்தோற்று = வினையாலணையுங் காரணக்குறியொன்றும் காலங்காட்ட, அல்லாதன காலங் காட்டாதனவாகி.

தன்மை முன்னிலை படர்க்கைப் பெயர்கள்.

தன்மை யானுன் யாநாம். முன்னிலை
எல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ.
அல்லன படர்க்கை. எல்லா மெனல்பொது.

பன்னிரண்டு பொதுப்பெயர்.

தான்யா னுனீ யொருமை: பன்மைதாம்
யாநா மெலாமெலீர் நீயிர் நீர் நீவிர். (287)

தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் உரிய இடம்.

வினையின் பெயரே படர்க்கை. வினையா
லணையும் பெயரே யாண்டு மாகும். (286)

குறிப்பு.—வினையின் பெயர்—தொழிற்பெயர்.

- தன்மை
  - ஒருமை.
  - பன்மை.
- முன்னிலை
  - ஒருமை.
  - பன்மை.
- படர்க்கை
  - உயர்திணை,
    - ஆண்பால்.
    - பெண்பால்.
    - பலர்பால்.
  - அஃறிணை.
    - ஒன்றன்பால்.
    - பலவின்பால்.

படர்க்கைப் பெயர்ச்சொற்கள், பெரும்பான்மையாய், பொருள்—இடம்—காலம்—சினை—குணம்—தொழில் என அறுவகைப்படும். சிறுபான்மை, சுட்டு—வினு—பிற—மற்று என்னும் இடைச்சொற்களின் அடியாகவும் வரும்.

படர்க்கைப் பெயர்ச் சொற்கள்.

உயர்திணை.

	ஆண்பாற் பெயர்.	பெண்பால்.	பலர்பால்.
பொருள்	சுற்றம்—தமன்—நமன்—நுமன்	தமள்—நமள்—நுமள்	தமர்—நமர்—நுமர்
	எண்—ஒருவன்	ஒருத்தி	இருவர்
	குழூஉ—அவையத்தான்	அவையத்தாள்—அவையத்தி	அவையத்தார்
	வேறு—பொன்னன்—பொருளன்	பொன்னள்—பொன்னி.	
இடம்	குறிஞ்சி—வெற்பன்—பொருப்பன்	குறத்தி	குறவர்
	பாலை—மறவன்—எயினன்	மறத்தி—எயிற்றி	மறவர்
	முல்லை—இடையன்—ஆயன்	இடைச்சி—ஆய்ச்சி	இடையர்—ஆயர்
	மருதம்—ஊரன்—மகிழ்நன்	உழத்தி	உழவர்
	நெய்தல்—சேர்ப்பன்—துறைவன்	பரத்தி	பரதர்
	தேயம்—சோழியன்—கொங்கன்	சோழிச்சி—மலையாட்டி	சோழியர்—கொங்கர்
	ஊர்—கருவூரான்—மதுரையான்	கருவூராள்—கருவூரி	கருவூரர்
	வேறு—மண்ணகத்தான்—பாதலத்தான்	மண்ணகத்தாள்—மண்ணகத்தி	மண்ணகத்தார்
காலம்	வருடம்—மூவாட்டையான்—பிரபவன்	மூவாட்டையாள்	மூவாட்டையார்
	பருவம்—வேனிலான்—காரான்	வேனிலாள்.	
	மாதம்—தையான்—மாசியான்	தையாள்.	
	நாண்மீன்—ஆதிரையான்—ஓணத்தான்	ஆதிரையாள்	ஆதிரையார்
	வேறு—நெருநலான்—காலையான்	நெருநலாள்	நெருநலார்

படர்க்கைப் பெயர்ச் சொற்கள் —(தொடர்ச்சி).

உயர்திணை.

		ஆண்பாற் பெயர்.	பெண்பால்.	பலர்பால்.
சினை	உறுப்பு	திணிதோளன்—செங்கண்ணன்	திணிதோளாள்—தடங்கண்ணி	திணிதோளர்
		குழைக்காதன்—குறுந்தாளன்	குழைக்காதாள்—குழைக்காதி.	
		நெடுங்கையன்	குறுந்தாளாள்—குறுந்தாளி.	
	அளவு	பெரியன்—சிறியன்	பெரியள்	பெரியர்—சிறியர்
குணம்.	அறிவு	அறிஞன்—புலவன்	புலமையள்	புலவர்
	ஒப்பு	பொன்னைப்பான்—மணியனையான்	பொன்னைப்பாள்	பொன்னைப்பார்
	வடிவு	கூனன்—குறளன்	கூனள்—கூனி	கூனர்—குறளர்
	நிறம்	கரியன்—செய்யன்	கரியள்	கரியர்
	கதி	மானுடன்—தேவன்	மானுடத்தி	மானுடர்
	சாதி	அந்தணன்—வேளாளன்	பார்ப்பினி	அந்தணர்—வேளாளர்
	குடி	சேரன்—சோழன்—பாண்டியன்		சேரர்—சோழர்—பாண்டியர்
	சிறப்பு	ஆசிரியன்—படைத்தலைவன்	படைத்தலைவி	படைத்தலைவர்
	வேறு	நல்லன்—தீயன்	நல்லள்	நல்லார்—தீயார்
தொழில்	வினை	ஓதுவான்—ஈவான்	ஓதுவாள்—ஈவாள்	ஓதுவார்—ஈவார்
	வேறு	கணக்கன்—தச்சன்	தச்சிச்சி	கணக்கர்—தச்சர்
	சுட்டு	அவன், இவன்	அவள்	அவர்
	வினா	எவன்—யாவன்—ஏவன்	எவள்—யாவள்	எவர்—யாவர்—ஏவர்
	பிற	பிறன்	பிறள்	பிறர்
	மற்று	மற்றையான்	மற்றையாள்	மற்றையார்
		நம்பி—ஆடூஉ—விடலை—கோ—வேள்—குரிசில் தோன்றல்	தோழி—செவிலி—மகடூஉ நங்கை—தையல்.	

படர்க்கைப் பெயர்ச் சொற்கள் —(தொடர்ச்சி).

உயர்திணை.

ஆண்பாற் பெயர்.	பெண்பால்.	பலர்பால்.
வில்லி—வாளி—கிள்ளி—சென்னி—ஏந்தல்—செம்மல்—ஏனாதி—காவிதி—குடுமி—அண்ணல்......	பேதை—பெதும்பை—இகுளை..... மடந்தை—மாது—பாங்கி.......... பெண்டு—பெண்டாட்டி..........	மாந்தர்—மக்கள் மகார்—சிறார் வேளிர்.

அஃறிணை.

	ஒன்றன்பால்.	பலவின்பால்.
வினா	ஏது—ஏது—யாது	எவை—ஏவை—யாவை
சுட்டு	அது—இது—உது	அவை—இவை—உவை
பொருளாதி	குழையது—நிலத்தது—மூலத்தது—கோட்டது—குறியது—ஆடலது.	
சுட்டணையாய்தம்	அஃது—இஃது—உஃது	அவ்—இவ்—உவ்
எண்ணுகு பெயர்	ஒன்று	இரண்டு—மூன்று—பத்து—நூறு பல—சில
	பிற—பிறிது	பிற
	மற்று—மற்றையது	மற்றைய

விகுதி பெறுது உயர்திணை அஃறிணைகளில் ஆண்பால் பெண்பால்களை உணர்த்திவரும் பெயர்கள். ஆடூஉ—மகடூஉ—களிறு—பிடி—கடுவன்—மந்தி முதலியன.

இருதிணைப் பொதுப்பெயர் (விரவுப்பெயர்) — தந்தை—தாய், ஆண்—பெண், செவியிலி—செவியிலிகள், தான்—தாம் என வருவன.

அஃறிணை இருபாற் பொதுப்பெயர்.

பால்பகா வஃறிணைப் பெயர்கள் பாற்பொதுமைய (281)

குறிப்பு.—பால்பகா வஃறிணைப்பெயர்—ஒன்றன்பால் பலவின்பால் விகுதி பெறுதுவரும் அஃறிணைப்பெயர். யானை—மரம், முதலியன.

அநுபந்தம்

தொல்காப்பியம்.

பெயர்.

பெயரெனப் படுபவை தெரியுங் காலை
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்
அம்மூ வுருவின தோன்றலாறே.

பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா
தொழினிலை யொட்டும் ஒன்றலங் கடையே.

சொற்களுணர்த்தும் திணை.

உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே.

குறிப்பு.—மக்கட்சுட்டு—மக்களாகிய நன்குமதிக்கப்படும் பொருள் ஆயிரு—அ + இரு.

உயர்திணைப்பாலின் பாகுபாடு.

ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல்
பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி
அம்முப் பாற்சொல் உயர்திணை யவ்வே.

குறிப்பு.—அறிசொல்—அறிதற்குக் கருவியாகிய சொல்.

அஃறிணைப்பாலின் பாகுபாடு.

ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்
றாயிரு பாற்சொல் அஃறிணை யவ்வே.

குறிப்பு.—ஆயிருபாற்சொல்—அவ்விரண்டு கூற்றுச் சொல்.

ஆடூஉ வறிசொல்.

னஃகா னொற்றே ஆடூஉ வறிசொல்.

குறிப்பு.—னஃகானொற்று—னஃகானாகிய ஒற்றினை ஈறாகவுடைய சொல்.

மகடூஉவறிசொல்.

ளஃகா னொற்றே மகடூஉ வறிசொல்

பலரறி சொல்.

ரஃகா னொற்றும் பகர விறுதியும்
மாரைக்கிளவி உளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே.

குறிப்பு.—மாரைக்கிளவி—மார் என்னும் இடைச்சொல்லை ஈறுக உடைய சொல்.

ஒன்றறி சொல்.

ஒன்றறி கிளவி தறட ஊர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்.

பலவறி சொல்.

அ ஆ வஎன வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவறி சொல்லே.

உயர்திணைப் பெயர்.

அவனிவன் உவனென வரூஉம் பெயரும்
அவளிவள் உவளென வரூஉம் பெயரும்
அவரிவர் உவரென வரூஉம் பெயரும்
யான்யாம் நாமென வரூஉம் பெயரும்
யாவன் யாவள் யாவர் என்னும்
ஆவயின் மூன்றொ டப்பதி னைந்தும்
பாலறிவந்த உயர்திணைப் பெயரே.

குறிப்பு.—பாலறிவந்த—ஒருவன் ஒருத்தி பலர் என்னும் மூன்று பாலினையும் அறியவந்த.

ஆண்மை யடுத்த மகனென் கிளவியும்
பெண்மை யடுத்த மகளென் கிளவியும்
பெண்மை யடுத்த இகர விறுதியும்
நம்மூர்ந்து வரூஉம் இகர ஐ காரமும்
முறைமை சுட்டா மகனு மகளும்
மாந்தர் மக்கள் என்னும் பெயரும்
ஆடூஉ மகடூஉ ஆயிரு கிளவியும்
சுட்டு முதலாகிய அன்னும் ஆனும்
அவை முதலாகிய பெண்டென் கிளவியும்
ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ
அப்பதினைந்தும் அவற்றோ ரன்ன.

குறிப்பு.—பெண்மையடுத்த இகரவிறுதி—பெண்டாட்டியென்னும் சொல். நம்மூர்ந்து வரூஉம் இகர ஐகாரம்—நம்பி நங்கையென்னும் சொல். சுட்டு முதலாகிய அன்னும் ஆனும்—அன்னன் அனையன் அன்னான் அனையான். அவை முதலாகிய—அச் சுட்டெழுத்தை முதலாகவுடைய. ஒப்பொடுவரூஉங் கிளவி—ஒப்புமைப் பொருள் பற்றி வரும் பொன்னன்னான் பொன்னன்னாள் பொன்னன்னார்.

எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
அன்ன வியல என்மனார் புலவர்.

குறிப்பு.—எல்லாரும் — படர்க்கைப் பெயர்ச்சொல். எல்லீரும்—முன்னிலைப் பெயர்ச்சொல்.

நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே
வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள் பெயரே
பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே
கூடிவரு வழக்கின் நாடியற் பெயரே
இன்றிவ ரென்னும் எண்ணியற் பெயரோ
டன்றி யனைத்தும் அவற்றியல் பினவே.

குறிப்பு.—நிலப்பெயர் — அருவாளன்—சோழியன்.
குடிப்பெயர் — சேரமான்—மலையமான்—பார்ப்பார்—அரசர்—வணிகர்—வேளாளர்.
குழுவின்பெயர் — அவையத்தார்—அத்திகோசத்தார்—வணிககிராமத்தார்—மாகத்தார்.
வினைப்பெயர் — வருவார்—செல்வார்—தச்சர்—கொல்லர்—தட்டார்—வண்ணார்.
உடைப்பெயர் — அம்பர்கிழான் — பேரூர்கிழான்—குட்டுவன்—பூழியன்-வில்லவன்—வெற்பன்—சேர்ப்பன்.
பண்புகொள்பெயர் — கரியான்—செய்யாள்.

பல்லோர்க்குறித்த முறைநிலைப்பெயர் — தந்தையர்—தாயர்.
பல்லோர்க்குறித்த சினைநிலைப்பெயர் — பெருங்காலர்—அலைகாதர்.
பல்லோர்க்குறித்த திணைநிலைப்பெயர் — குறவர்—இறவுளர்—வேட்டுவர்—ஆயர்—பொதுவர்—நுளையர்—திமிலர்—பரதவர்—களமர்—உழவர்—எயினர்—மறவர்.

கூடிவரு....பெயர் — பட்டிபுத்திரர்—கங்கைமாத்திரர்.
எண்ணியற் பெயர் — ஒருவர்—இருவர்—முப்பத்துமூவர்.
மகடூஉப்பெயர்கள்—அருவாட்டி—சோழிச்சி—மலையாட்டிச்சி — பார்ப்பனி—அரசி—வாணிச்சி—வெள்ளாட்டிச்சி—கொல்லிச்சி — தட்டாத்தி—வண்ணாத்தி - அம்பருடைச்சி—பேரூர் கிழத்தி—எனவரும்.

[மகடூஉப் பெயர்கள் டகரவொற்றிரட்டியும் இச்சுப்பெற்றும் தகரவொற்றிரட்டியும் இரண்டு இடைநிலை யெழுத்துக்களைப் பெற்றும் பெறாதும் வரும்.]

அஃறிணைப் பெயர்.

அதுவிது உதுவென வரூஉம் பெயரும்
அவை முதலாகிய ஆய்தப் பெயரும்
அவையிவை உவையென வரூஉம் பெயரும்
அவை முதலாகிய வகரப் பெயரும்
யாதுயா யாவை என்னும் பெயரும்
ஆவயின் மூன்றே டப்பதினைந்தும்
பாலறிவந்த அஃறிணைப் பெயரே.

குறிப்பு.—அவை முதலாகிய வகரப்பெயர்—அவ் இவ் உவ்.

பல்ல பல்சில என்னும் பெயரும்
உள்ள வில்ல என்னும் பெயரும்
வினைப்பெயர்க் கிளவியும் பண்புகொள் பெயரும்
இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக்குறிப் பெயரும்
ஒப்பினாகிய பெயர்நிலை யுளப்பட
அப்பா லொன்பதும் அவற்றோ ரன்ன.

குறிப்பு.—வினைப்பெயர்க்கிளவி—வருவது. வருவன. ஒப்பினாகிய பெயர் நிலை—பொன்னன்னது பொன்னன்ன.

விரவுப் பெயர்.

இருதிணைச் சொற்குமோ ரன்ன உரிமையின்
திரிபுவேறு படூஉம் எல்லாப் பெயரும்
நினையுங் காலைத் தத்த மரபின்
வினையோடல்லது பால் தெரிபிலவே.

விரவுப்பெயர்த்துப் பெயர் முதலியன.

இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி தாமே தானே

எல்லாம் நீயிர் நீயெனக் கிளந்து
சொல்லிய வல்ல பிறவு மாஅங்
கன்னவை தோன்றின் அவற்றொடுங் கொளலே.

குறிப்பு.—அன்னபிறவாவன:—மக குழவி போல்வனவும், காடன் காடி நாடன் நாடி தரையன் திரையன் மலையன் போலவனவும், முதியான் எனப் பிராயம்பற்றி வருவனவும், சுமையன் எனத் தொழில் பற்றி வருவனவும் பிறவுமாம்.

தாம்.

தாமென் கிளவி பன்மைக் குரித்தே.

தான்.

தானென் கிளவி ஒருமைக் குரித்தே.

எல்லாம்.

எல்லா மென்னும் பெயர் நிலைக்கிளவி
பல்வழி நுதலிய நிலைத் தாகும்மே.
தன்னு ளுறுத்த பன்மைக் கல்லது
உயர்திணை மருங்கின் ஆக்கம் இல்லை.

குறிப்பு.—தன்னுள் ளுறுத்த பன்மை—தன்மைப் பன்மை.

நீயிர் நீ.

நீயிர் நீயென வரூஉங் கிளவி
பால்தெரி பிலவே உடன்மொழிப் பொருள

நீ.

நீயென் கிளவி ஒருமைக் குரித்தே.

நீயிர்.

ஏனைக் கிளவி பன்மைக் குரித்தே.

ஒருவர்.

ஒருவ ரென்னும் பெயர்நிலைக் கிளவி
இருபாற்கு முரித்தே தெரியுங் காலை.

வேற்றுமை.—(**Inflection.**)

ஏற்கும் எவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப்பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை. (291)

வேற்றுமையாவது பெயர்ப்பொருளை வேறுபடுக்குந் தன்மை. வேறுபடுத்தலாவது செயப்படுபொருள் முதலியன வேறுபடுத்தல். வேற்றுமையென்னும் காரியத்தைச் செய்யும் கருத்தாவாகிய எட்டு வேற்றுமை உருபிற்கும் வேற்றுமையெனப் பெயர் வந்தது காரியவாகு பெயராகிய காரணக்குறி. வேற்றுமை செய்வன வேற்றுமை எட்டே என்று கொண்டு வேற்றுமையுருபுகள் எட்டேயாம் எனப் பொருள்கொள்வதொன்று.

விளியுருபு படர்க்கைச் சொல்லையும் பொருளையும் முன்னிலைச் சொல்லும் பொருளுமாக வேற்றுமை செய்தலின் அதனை எழுவாயுள் அடக்காமல் வேறாகக் கொண்டார். வேற்றுமை ஏழென்பதே அகத்தியர் கொள்கை. எட்டென்றது வடமொழியில் ஐந்திர வியாகரணம்.

முதல் வேற்றுமை.

எழுவா யுருபு திரிபில் பெயரே. (295)
வினைபெயர் வினாக்கொளல் அதன் பயனிலையே.

குறிப்பு.—முதல் வேற்றுமை எழுவாய் வேற்றுமை எனவும் வழங்கும். திரிவில்லாமையாவது உருபும் விளியுங் கொள்ளாமல் முடிக்குஞ் சொல்லையு நோக்காமல், ஆ—என்றாற்போலத் தன்னிலையில் நிற்பதாம்; பயனிலை என்றது பொருள்நிலை. முதல் வேற்றுமையின் பொருளாவது வினைமுதற்பொருளின் குணமாகத் தன்னைத்தானே வேற்றுமைசெய்தல் என்பதாம். வினை என்றது வினை வினைக்குறிப்பு முதலிய வினைவிகற்பங்களடங்கலும்.

வினை—சாத்தன் வந்தான்—சாத்தன் கரியன்—அவன் வாழ்க.
ஆவுண்டு—அவனுண்டு—அவனில்லை—
சாத்தனுண்டசோறு—சாத்தன் பெரிய மனிதன்

பெயர்—சாத்தனிவன்—பசுவொன்று.
வினா—அவன் யாவன்—அவை யெவை.

இவ்வெழுவாய்க்கு ஐ முதலியனபோன்ற உருபு இல்லையாயினும், சிறுபான்மை ஆனவன் ஆகின்றவன் ஆவான் என்பவன் முதலிய ஐம்பாற் சொற்களும் சொல்லுருபுகளாகவரும். சாத்தனானவன் வந்தான். சாத்தியானவள் வந்தாள். சாத்தரானவர் வந்தார். யானையானது வந்தது. யானையானவை வந்தன.

இரண்டாம் வேற்றுமை.

இரண்டா வதனுரு பையே. அதன்பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதியாகும். (296)

இரண்டாம் வேற்றுமைக்கு உருபாவது ஐ. அவ்வுருபிற்குப் பொருளாவது தன்னையேற்ற பெயர்ப்பொருளிலிருக்கிற செயப்படு பொருண்மை அல்லது கருமத்தன்மை. செயப்படு பொருண்மையாவது வினைமுதற் றொழிற்பயனுக் கிடமாவது.

கோயிலைக் கட்டினன் என்பதில், கல்லடுக்கல் முதலிய செயல் வினைமுதற் றொழிலாம், அத்தொழிலால் கோயிலுண்டாகுகை பயனும். அப்பயனுக்கிடம் கோயில் ஆதலால் கோயில் செயப்படு பொருளாம்.

ஆக்கல் — குடத்தை வனைந்தான்
அழித்தல் — குடத்தை உடைத்தான்
அடைதல் — குடத்தை யடைந்தான்
நீத்தல் — குடத்தைத் துறந்தான்
ஒத்தல் — குடத்தை யொத்தான்
உடைமை — குடத்தை யுடையான்

இவ் வேற்றுமை தன் பெயர்ப்பொருளை மேலே சொல்லிய எழுவாய்க்கண் வருங் கருத்தனால் ஆகிய காரியமாக்குதலால் இரண்டாம் வேற்றுமை என்னப்பட்டது.

மூன்றாம் வேற்றுமை.

மூன்றா வதனுரு பாலா னோடொடு.
கருவி கருத்தா உடனிகழ் வதன்பொருள். (297)

ஆல்—ஆன் இரண்டும், கருவிப்பொருளிலும், கருத்தாப்பொருளிலும்; ஒடு—ஓடு இரண்டும் உடனிகழ்ச்சிப்பொருளிலும் வரும்.

கருவியாவது வினைமுதற் றொழிற்பயனைச் செயப்படுபொருளிற் சேர்ப்பது; கர்த்தாவாவது ஒருதொழில் னிகழ்ச்சியிலே தன்வயத்ததாகக் குறிக்கப்படுபொருள்; உடனிகழ்ச்சியாவது வினைகொண்டு முடியும் பொருளின் தொழிலைத் தன்னிடத்தும் உடனிகழ்வதாகவுடைய பொருள்.

கருவி.	கருத்தா.	உடனிகழ்ச்சி.
வாளால் வெட்டினன்.	அரசனலாகிய கோயில்.	ஆசிரியனொடு மாணாக்கன் வந்தான்.
வாளான் வெட்டினன்.	அரசனனகிய கோயில்.	ஆசிரியனோடு மாணாக்கன் வந்தான்.

ஆல் ஆன் உருபுகள் உடனிகழ்ச்சிப்பொருளிலும், ஒடு ஓடு உருபுகள் வினைமுதற்பொருள் கருவிப்பொருளிலும், ஒரோவிடத்து அருகி வரும். "தூங்குகையா னோங்குநடைய"; "உறழ்மணியா னுயர்மருப்பின" என ஆனுருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. தூங்கு கையோடு உறழ்மணியோடு என்பது பொருள்.

"கொடியொடு துவக்குண்டான்"; "ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்" என்பனவற்றில், கொடியொடு ஊசியொடு என்பன கொடியால் ஊசியால் எனப் பொருள்படுகின்றன.

சிறுபான்மை ஆல் ஆன் உருபுகள் தோறும் என்னும் பொருளில் வரும். "ஊரானோர் தேவகுலம்."

ஆல் ஆன் நிற்றற்குரியவிடத்துக் கொண்டென்பதும், ஒடு ஓடு உருபுகள் நிற்றற்குரியவிடத்து உடனென்பதும் சொல்லுருபுகளாக வரும். வாள்கொண்டு வெட்டினான். தந்தையுடன் மைந்தன் வந்தான்.

இரண்டாம் வேற்றுமைப் பொருளாகிய காரியத்து வேண்டுங் கருவிப்பொருளைத் தருதலால், இது மூன்றாம் வேற்றுமை எனப்பட்டது.

நான்காம் வேற்றுமை.

நான்கா வதற்குரு பாகுங் குவ்வே.
கொடை பகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டுமுறை யாதியின் இதற்கிதெனல் பொருளே. (298)

இதற்கிதெனல் பொருள் = இதற்கு இது என்பதுபட வருதற்கு உரிய எப்பொருளினையும் ஏற்றுக்கொள்ளும் பொருளாகத் தன்னையேற்ற பெயர்ப்பொருளை வேற்றுமைசெய்வது இதன்பொருள்.

[நேர்ச்சி—நட்பு. தகவு—தகுதி.]

கொடை	— இரவலர்க்குப் பொன்னைக் கொடுத்தான்.
அதுவாதல்	— ஆடைக்கு நூல்
பகை	— பிணிக்கு மருந்து
பொருட்டு	— கூலிக்கு வேலை
நட்பு	— விளக்கிற் கெண்ணெய்
தகுதி	— தவத்துக்குப் பொறை
முறை	— சாத்தற்கு மகன்

குவ்வுருபு நிற்றற்குரிய சிலவிடங்களிலே பொருட்டு நிமித்தம் என்பனவும், குவ்வுருபின்மேல் ஆக என்பதும் சொல்லுருபுகளாக வரும்.

ஒருவன் ஒரு காரியத்தை ஒரு கருவியாற் செய்தல் தனக்காயினும் பிறர்க்காயினும் உதவுதற்பொருட் டாதலால் அம்முறைபற்றி இது நான்காம் வேற்றுமை எனப்பட்டது.

ஐந்தாம் வேற்றுமை.

ஐந்தா வதனுரு பில்லும் இன்னும்.
நீங்கலொப் பெல்லை ஏதுப் பொருளே. (299)

நீங்கல் — மலையி னீங்கினன்.
ஒப்பு — பாலின் வெளிது கொக்கு.
எல்லை — மதுரையின் வடக்குச் சிதம்பரம்.
ஏது — கல்வியிற் பெரியன் கம்பன்.

நீக்கப்பொருளிலும் எல்லைப்பொருளிலும், இன் இல் உருபுகளின் மேல், நின்று இருந்து என்பவை, உம் பெற்றும் பெறாதும் சொல்லுருபுகளாக வரும்.

இந்த வேற்றுமையுருபு 'இதனின் இற்று இது' என விகற்பித் தறிவதற்கு வருவது. இவ்வாறு விகற்பித்து உணர்ந்தாலல்லது சொடுத்தல் கூடாததினால் இது ஐந்தாம் வேற்றுமை எனப்பட்டது.

ஆறாம் வேற்றுமை.

ஆற னொருமைக் கதுவும் ஆதுவும்,
பன்மைக் கவ்வும் உருபாம். பண்புறுப்
பொன்றன் கூட்டம் பலவி னீட்டம்
திரிபி னாக்கம் ஆந்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே. (300)

குறிப்பு.—தற்கிழமைப் பொருளாவது தன்னோ டொற்றுமையுடைய பொருளின் சம்பந்தம். பிறிதின் கிழமைப் பொருளாவது தன்னின் வேறாய பொருளின் சம்பந்தம்.

தற்கிழமை.

பண்புத்தற்கிழமை — நிலத்த தகலம்
உறுப்புத்தற்கிழமை — புலியது வால்
ஒன்றன்கூட்டத் (ஒருபொருளின் கூட்டத்) தற்கிழமை-- எள்ளது குப்பை
பலவினீட்டத் (பலபொருளின் கூட்டத்) தற்கிழமை — படையது தொகை
திரிபினாக்க (ஒன்று திரிந்தொன்றானது)த் தற்கிழமை—எள்ளது சாந்து
ஆது—எனாது கை, நினாது தலை, தனாது புஜம்
அ —என கைகள், தன தாள்கள்

பிறிதின்கிழமை.

பொருட்பிறிதின்கிழமை	— முருகனது வேல்
இடப்பிறிதின்கிழமை	— சாத்தனது வீடு
காலப்பிறிதின்கிழமை	— சாத்தனது நாள்

இவ்வுருபுகளுள் ஒன்று நிற்றற்குரியவிடத்தே உடைய என்பது சொல்லுருபாகவரும்.

மேற்சொல்லிய கொள்வோனையும் கொடைப்பொருளையும் 'இதனின் இற்று இது' என விகற்பித்துணர்ந்து கொடுத்தல், இந்த இருகிழமைப் பொருளுடையார் செயல் என்பது தோன்ற, இது ஆறும் வேற்றுமை எனப்பட்டது.

ஏழாம் வேற்றுமை.

ஏழ னுருபுகண் ணாதி யாகும்.
பொருண்முத லாறும் ஓரிரு கிழமையின்
இடனாய் நிற்றல் இதன்பொரு ளென்ப. (301)

பொருள் முதலாறும்....இதன்பொருள் = தம்மை ஏற்ற பெயர்ப் பொருளாகிய பொருளாதியாறும் மேற்சொல்லிய இருகிழமைப்பொருட்கும் இடமாகி நிற்க வேற்றுமைசெய்தல்.

பொருளிடமாதல்	தற்	— மணியின்கண் ஒளி
	பிறி	— பனையின்கண் அன்றில்
இடமாதல்	தற்	— ஊரின்கண் இல்லம்
	பிறி	— ஆகாயத்தின்கண் பருந்து
காலமிடமாதல்	தற்	— நாளின்கண் நாழிகை
	பிறி	— வேனிற்கண் பாதிரி
சினையிடமாதல்	தற்	— கையின்கண் விரல்
	பிறி	— கையின்கண் கடகம்
குணமிடமாதல்	தற்	— கறுப்பின்கண் அழகு
	பிறி	— இளமைக்கண் செல்வம்
தொழிலிடமாதல்	தற்	— ஆடற்கண் சதி
	பிறி	— ஆடற்கண் பாட்டு

இந்த உருபு பெயர்ப்பொருளை மேற்சொல்லிய இருகிழமைப் பொருள்களுக்கும் இடமாக வேற்றுமைசெய்தலால் ஏழாம் வேற்றுமை எனப்பட்டது.

ஏழாம் வேற்றுமை உருபுகள்.

கண்கால் கடைஇடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலம்இடம் மேல்கீழ் புடைமுதல்
பின்பா டளைதேம் உழைவழி உழிஉளி
உள்அகம் புறம்இல் இடப்பொரு ளுருபே.

எட்டாம் வேற்றுமை.

எட்ட னுருபே எய்துபெய ரீற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்பயற்
றிரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே. (303)

அயற்றிரிபு—ஈற்றயல் திரிதல்.
ஈறுதிரிபு—அன்னை—அன்னாய்—அன்னா—அன்னே. குழையாள்—குழையாய். வாயிலான்—வாயிலாய்.

ஈறுகுன்றல்—புலவன்—புலவ: மன்னன்—மன்ன. எல்லாள்—எல்லா
ஈறுமிகுதல்—முனி—முனியே: கடலார்—கடலாரே.
ஈறு இயல்பு—வேந்து கூறாய்.
ஈற்றயல்திரிபு—மக்கள்—மக்காள். அடிகள்—அடிகேள். தெவ்வர்—தெவ்விர். நாய்கர்—நாய்கீர். சான்றார்—சான்றீர்—தோன்றல்—தோன்றால்.

இன்னும் வேறுவிதமாகவும் வரும்.

அளபெடுத்தல்—வேள்—வேஎள். சிறார்—சிறாஅர். சேய்—சேஎய். மால்—மாஅல்.

ஈறும் ஈற்றயலும் திரிந்து மிகுதல். வாயிலான்—வாயிலோயே.

இது எழுவாயினின்றும் ஒருவிதத்தினாலே வேறுபடுவதால் இறுதியிலே வைத்து எட்டாம் வேற்றுமை எனப்பட்டது.

அநுபந்தம்.

தொல்காப்பியம்.

வேற்றுமை எத்தனை.

வேற்றுமைதாமே ஏழெனமொழிப
விளிகொள்வதன்கண் விளியோ டெட்டே.

குறிப்பு.—விளிகொள்வது என்றது விளிகொள்ளும் பெயரை. அதன்கண்விளி என்றதனால், பெயருமன்று, பெயரின் வேறுமன்று. விளிவேற்றுமையாவது திரிந்தும் இயல்பாயும் நிற்கும் பெயரிறுதி.

வேற்றுமைகளின் பெயர்.

பெயர் ஐ ஒடுகு
இன் அது கண்விளி என்னும் ஈற்ற.

உருபுநிற்கும் இடம்.

கூறிய முறையின் உருபுநிலை திரியா(து)
ஈறுபெயர்க் காகும் இயற்கைய வென்ப.

குறிப்பு.—பெயர்க்கு ஈறாகும் இயற்கைய எனக் கூட்டிக் கொள்வது.

எழுவாய் (முதல்) வேற்றுமை.

அவற்றுள்
எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே.

பயனிலை.

பொருண்மை சுட்டல், வியங்கொள வருதல்,
வினைநிலை யுரைத்தல், வினாவிற் கேற்றல்,
பண்புகொள வருதல், பெயர்கொள வருதலென்
றன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே.

குறிப்பு.—அகரச்சுட்டு அன்றியென ஈறுதிரிந்து நின்றது.

எழுவாய் தோன்றியும் தோன்றாமலும் நிற்றல்.

எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி
அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப.

குறிப்பு.—எவ்வயிற் பெயரும் என்பது தன்மை முன்னிலை படர்க்கையாகிய மூன்றிடத்து எழுவாயும். அவ்வியல் நிற்றல்—மேற்குறிய வாறு பயனிலை கோடல்.

தோன்றாது பயனிலை கொள்வது தோன்றாவெழுவாய் என வழங்கும்.

"The order in which case formations have been arranged by Dravidian grammarians is the same as that of the Sanskrit. The imitation of Sanskrit in this particular was certainly an error; for whilst in Sanskrit there are eight cases only, the number of cases in Tamil, Telugu, etc., is almost indefinite. Every post-position annexed to a noun constitutes, properly speaking, a new case; and therefore the number of such cases depends upon the requirements of the speaker and the different shades of meaning he wishes to express. In particular, the 'inflection' or inflected form of the base, or oblique case, as it is sometimes called, which has sometimes a possessive, sometimes a locative, and sometimes an adjectival signification, ought to have had a place of its own. Notwithstanding this, the usage of Dravidian grammarians has restricted the number of cases to eight. Tamil grammarians, in following the order of the Sanskrit cases, have also adapted or imitated the Sanskrit mode of denominating them—not by descriptive appellations, as dative or ablative, but by numbers. Though a nominative, or first case, stands at the head of the Dravidian list of cases, the only cases, properly so called which are used by these languages, are the oblique cases."—CALDWELL.

வினைச்சொல்.—(Verbs).

வினைச்சொல் (இன்னதென்பது).

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும். (தொல்).

தெரிநிலை வினைச்சொல் (இன்னதென்பது).

செய்பவன் கருவி நிலஞ்செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே. (320)

குறிப்பு.—முற்றும்மை ஒரோவழி எச்சமுமாகும் ஆகையால் ஆறும் என்கிற தொகையில் சில குறைந்து வருவதும் கொள்ளப்படும்–கொடியாடிற்று என்பதில் செயப்படுபொருள் குறைந்துவந்தது.

குறிப்பு வினைச்சொல் (இன்னதென்பது).

பொருண்முதல் ஆறினுந் தோற்றிமுன் னுறனுள்
வினைமுதன் மாத்திரை விளக்கல்வினைக் குறிப்பே. (321)

வினைச்சொற்களின் வகை.

அவைதாம்,—
முற்றும் பெயர்வினை யெச்சமு மாகி
ஒன்றற் குரியவும் பொதுவும் ஆகும். (322)

முக்காலம்.

இறப்பெதிர்வு நிகழ்வெனக் காலம் மூன்றே. (382)

குறிப்பு.—இறப்பு–தொழிலது கழிவு. நிகழ்வு–தொழில் தொடங்கி முற்றுப் பெறுமல் நடக்கின்ற நிலைமை. எதிர்வு–தொழில் பிறவாமை.

"முக்காலத்தும் வருதற்குரிய காலங்காட்டும் எழுத்துக்களைத் தொல்காப்பியர் எடுத்து ஓதாராயினர், பின்னுள்ளோர் காலங்கட்கு உரியவாக எடுத்தோதிய எழுத்துக்கள் தம்முள் மயங்கியும் வருதலின்" (நச்சினார்க்கினியர்).

இறந்தகால விடைநிலை.

தடறவொற் றின்னே ஐம்பால் மூவிடத்
திறந்த காலந் தருதொழி லிடைநிலை. (142)

குறிப்பு.—சிறுபான்மை இன்னிடைநிலை எஞ்சியது எனக் கடை குறைந்தும் போனது என முதல் குறைந்தும் வரும்.

நிகழ்கால விடைநிலை.

ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பா னிகழ்பொழு தறைவினை யிடைநிலை. (143)

எதிர்கால விடைநிலை.

பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழு
திசைவினை யிடைநிலை யாம்இவை சிலவில. (144)

காலங்காட்டும் விகுதி.

றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவும்,
தவ்வொ டிறப்பும் எதிர்வும், டவ்வொடு
கழிவும், கவ்வோ டெதிர்வும், மின்ஏவல்
வியங்கோள் இம்மார் எதிர்வும், பாந்தம்
செலவொடு வரவும், செய்யுநிகழ் பெதிர்வும்,
எதிர்மறை மும்மையும், ஏற்கும் ஈங்கே. (145)

குறிப்பு.—று–றும்–சென்று (சென்றேன்), சென்றும் (சென்றேம்).
சேறு (செல்வேன்), சேறும் (செல்வேம்).
து–தும்—வந்து (வந்தேன்), வந்தும் (வந்தேம்).
வருது (வருவேன்), வருதும் (வருவேம்).
டு–டும்—உண்டு (உண்டேன்), உண்டும் (உண்டேம்).
கு–கும்—உண்கு (உண்பேன்), உண்கும் (உண்பேம்).
மின்–ஈர்–உம்–ஆய்—உண்மின், உண்ணீர், உண்ணும், உண்ணாய்.
வியங்கோள்—உண்க, வாழிய, வாழியர்.
இ —சேறி (செல்வாய்).
மார் —உண்மார் (உண்பார்).
ப —உண்ப (உண்டார்–உண்பார்).
செய்யும் —உண்ணும் (நிகழ்காலம் எதிர்காலம்).
எதிர்மறை —உண்ணா (முக்காலமுங் காட்டும்).

வேறு காலங்காட்டுமவை.

குடுறு என்னும் ஈற்றுச் சில குறிலிணைப் பகுதிகள் தம்மொற் றிரட்டி இறந்த காலம் காட்டும்.	கு–புக்கான்–நக்கான். டு–தொட்டான்–விட்டான். று–உற்றான்–பெற்றான்.
யகர இடைநிலை இறந்த காலம் காட்டும்.	போயது.
ஆகிடந்து ஆவிருந்து என்பன நிகழ்காலம் காட்டும்.	உண்ணாகிடந்தான். உண்ணா விருந்தான்.

இசின் என்பது செய்யுளில் இறந்தகால இடைநிலையாக வரும்.	என்றிசினோர்.
மகாமெய்யும் மன் என்பதும் செய்யுளில் எதிர்கால இடைநிலைகளாக வரும்.	என்மார். என்மனார்.

முற்றுவினை.

பொதுவியல் பாறையும் தோற்றிப் பொருட்பெயர்
முதலறு பெயரல தேற்பில முற்றே. (323)

பாற்பொதுவினை.

யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால். (349)

குறிப்பு.—அஃறிணை யிருபாலிலும் மற்றையீரிடத்திலும் வருதல் புதியன புகுதலாம்.

எவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால். (350)

குறிப்பு.—இது ஆண்பாலை யுணர்த்தும் எவனன்று. இது என், என்ன, என்னை என விகாரப்பட்டும் வரும்.

முற்றுவினை விகுதி.

தன்மை.— ஒருமை—கு—டு—து—று—அன்—என்—ஏன்—அல்.
பன்மை—அம்—ஆம்—எம்—ஏம்—ஓம்—கும்—டும்—றும்—தும்.

முன்னிலை.— ஒருமை—ஐ—ஆய்—இ.
பன்மை—இர்—ஈர்.

படர்க்கை.— ஆண்பால்—அன்—ஆன்.
பெண்பால்—அள்—ஆள்.
பலர்பால்—அர்—ஆர்—ப—மார்.
ஒன்றன்பால்—து—று—டு.
பலவின்பால்—அ—ஆ (எதிர்மறையில் மாத்திரம்.)

ஏவல்.— ஒருமை: உடன்பாடு—ஆய்—இ.
எதிர்மறை—அல்—ஆல்—ஏல்.
பன்மை—மின்.

வியங்கோள் —க—ய—ர்—இய—இயர்—அ—அல்—தல்.

தெரிநிலை வினைமுற்று விகற்பம்.

ஒருவன்முத லைந்தையும் படர்க்கை யிடத்தும்,
ஒருமைப் பன்மையைத் தன்மைமுன் னிலையினும்,
முக்கா லத்தினு முரண, முறையே
மூவைந் திருமூன் றாறாய், முற்று
வினைப்பத மொன்றே மூவொன் பானும். (324)

		இறப்பு.	நிகழ்வு.	எதிர்வு.
படர்க்கை.	ஆண்பால்.			
	பெண்பால்.			
	பலர்பால்.			
	ஒன்றன்பால்.			
	பலவின்பால்.			
தன்மை	ஒருமை,			
	பன்மை.			
முன்னிலை.	ஒருமை.			
	பன்மை.			

இருதிணைப் பொதுவினை.

தன்மை முன்னிலை வியங்கோள் வேறிலை
உண்டீ ரெச்சம் இருதிணைப் பொதுவினை. (330)

வேறில்லை உண்டைம்பால் மூவிடத்தன. (339)

பெயரெச்சம்.

செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி அறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே. (340)

குறிப்பு.—பெயரெச்ச விகுதி.—அ—உம். 'தோன்றி' என்பது வரைக்கும் தெரிநிலையுடன்பாட்டிற்கும், ஒழிந்தவிதி தெரிநிலையும் குறிப்புமாகிய உடன்பாட் டெதிர்மறை யிரண்டற்கும் கொள்ளக் கிடக்கின்றது இச்சூத்திரம்.

வினையெச்சம்.

தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே. (342)

வினையெச்ச வாய்பாடுகளும் விகுதிகளும்.

செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச், செயச், செயின் செய்யிய செய்யியர்

வான்பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்தொன் றுறுமுக் காலமு முறைதரும். (343)

இறந்தகாலம்.—உ—பு—ஆ—ஊ—என (இ—ய்—உம்.)

நிகழ்காலம்.—அ.

எதிர்காலம். — இன்—இய—இயர்—வான்—பான்—பாக்கு (ஆல்—கால்—ஏல்—கடை—வழி—இடத்து,)

எதிர்மறை.—மல்—மை—மே—து—மைக்கு.

குறிப்பு.—அ—றி—து—ஆல்—மல்—கால்—கடை—வழி—இடத்து.

சொற்றிரி யினும்பொருள் திரியா வினைக்குறை (346)

ஞாயிறு பட்டுவந்தான்—பட
மழைபெய்து நெல்விளைந்தது—பெய்ய
யான்கொள்வான் பொன் கொடுத்தான்— கொள.

தெரிநிலை வினைப் பகுப்பு.

1. செயப்படுபொருள் குன்றியவினை.
செயப்படுபொருள் குன்றாதவினை.

2. தன்வினை.
பிறவினை.
பிறவினை விகுதி.—வி—பி—கு—சு—டு—து—பு—று.

3. செய்வினை.
செயப்பாட்டுவினை.
செயப்பாட்டுவினை விகுதி.—படு, உண்.

4. தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவினை. — அழி—கெடு—வெளு—கரை—தேய்—முதலியன.

5. செய்வினைக்கும் செயப்பாட்டுவினைக்கும் பொதுவினை.

6. விதிவினை (உடன்பாடு).
மறைவினை (எதிர்மறை).
எதிர்மறை யிடைநிலை—இல்—அல்—ஆ.

அநுபந்தம்.

தொல்காப்பியம்.

உயர்திணை முற்றுவினை.

தன்மைப் பன்மை.

அம்ஆம் எம்ஏம் என்னுங் கிளவியும்
உம்மொடு வரூஉம் கடதற வென்னும்
அந்நாற் கிளவியொ டாயெண் கிளவியும்
பன்மையுரைக்கும் தன்மைச் சொல்லே.

தன்மை யொருமை.

கடதற வென்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோடு
என்ஏன் அல்லென வரூஉ மேழும்
தன்வினை யுரைக்கும் தன்மைச் சொல்லே.
அவற்றுள்,
செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்வியல் திரியா தென்மனார் புலவர்.

படர்க்கை யொருமை முற்று.

அன்ஆன் அள்ஆள் என்னு நான்கும்
ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே.

படர்க்கைப் பன்மை முற்று.

அர்ஆர் பஎன வரூஉ மூன்றும்
பல்லோர் மருங்கின் படர்க்கைச் சொல்லே.
மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியு மென்ப.

குறிப்பு.—*காலக்கிளவி-வினை.*

யார்.

யாஅர் என்னும் வினாவின் கிளவி
அத்திணை மருங்கின் முப்பாற்கு முரித்தே.

உயர்திணை வினைக்குறிப்பு.

அதுச்சொல் வேற்றுமை யுடைமையானும்
கண்ணென் வேற்றுமை நிலத்தினும்
ஒப்பினும் பண்பினுமென்
றப்பாற் காலம் குறிப்பொடு தோன்றும்.

அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மையின்
அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்
என்ன கிளவியும் குறிப்பே காலம்.

அஃறிணைத் தெரிநிலைவினை.

அஆ வவென வரூஉ மிறுதி
அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை.

ஒன்றன் படர்க்கை தறட வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்.

எவன்.

அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்
ஒக்குமென்ப எவனென் வினவே.

அஃறிணை வினைக்குறிப்பு.

இன்றில உடைய என்னுங் கிளவியும்
அன்றுடைத் தல்ல என்னுங் கிளவியும்
பண்புகொள் கிளவியும் உளவென் கிளவியும்
பண்பினாகிய சினைமுதற் கிளவியும்
ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ
அப்பாற் பத்தும் குறிப்பொடு கொள்ளும்.

முன்னிலை பொருமைவினை.

முன்னிலைக் கிளவி
இஐ ஆய்என வரூஉ மூன்றும்
ஒப்பத் தோன்றும் ஒருவற்கும் ஒன்றற்கும்.

முன்னிலைப் பன்மை.

இர்ஈர் மின்என வரூஉ மூன்றும்
பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்
சொல்லோ ரனைய என்மனார் புலவர்.

விரவுவினை.

முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
இன்மை செப்பல் வேறென் கிளவி
செய்ம்மன செய்யும் செய்த என்னும்
அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்
பிரிபுவேறு படூஉம் செய்திய வாகி
இருதிணைச் சொற்குமோ ரன்ன வுரிமைய.

அவற்றுள்,

முன்னிலை தன்மை ஆயீரிடத் தொடு
மன்னுதாகும் வியங்கோட் கிளவி.

வினையெச்சம்.

செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின் செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி.

பின்முன் கால்கடை வழியிடத் தென்னும்
அன்ன மரபின் காலங் கண்ணிய
என்ன கிளவியும் அவற்றியல் பினவே.

பெயரெச்சம்.

நிலமும் பொருளும் காலமுங் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையு முளப்பட
அவ்வறு பொருட்கும் ஓரன்ன வுரிமைய
செய்யும் செய்த என்னுஞ் சொல்லே.

பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா.

இடைச்சொல்.—(Particles).

இடைச்சொல் (இன்னதென்பது).

வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள இசைநிறை அசைநிலை
குறிப்பெனெண் பகுதியின் தனித்திய லின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்
தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல். (420)

குறிப்பு.—பெயர்ச்சொல் வினைச்சொற்களுமாகாது அவற்றின் வேறுமாகாது இடைநிகரனவாய் நிற்றலின், இடைச்சொல் எனப்பட்டன. தனித்து நடக்கும் ஆற்றலில்லனவாய்ப் பெயர்வினைகளிடமாக நடத்தலின் இடைசொல் எனப்பட்டன எனினும் அமையும். "முன்னும் பின்னும் நிற்குமேனும் பெரும்பான்மையும் இடையே நிற்றலின் இடைச்சொல் என்றார்" என்பர் நச்சினார்க்கினியர். இசைநிறை—வேறுபொருள் உணர்த்தாது செய்யுளில் ஓசையை நிறைத்து நிற்பது. அசைநிலை—வேறுபொருள் உணர்த்தாது பெயர்ச்சொல்லோடும் வினைச்சொல்லோடும் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்பது (அசைத்தல்—சார்த்துதல்).

சாரியை யுருபிடைச்சொற்கள்.

அன்ஆன் இன்அல் அற்றிற் றத்தம்
தம்நம் நும்ஏ அஉ ஐகுன
இன்ன பிறவும் பொதுச்சா ரியையே. (244)

குறிப்பு.—

அன்—அதன்கால்	இற்று—பதிற்றுப்பத்து	நும்—எல்லீர் நும்மையும்
ஆன்—ஒருபாற்கு	அத்து—மாத்துக்கோடு	ஏ—ஒன்றேகால்
இன்—வண்டின்கால்	அம்—மன்றம்	அ—தமிழப்பிள்ளை
அல்—தொடையல்	தம்—எல்லார் தம்மையும்	உ—அவனுக்கு
அற்று—பலவற்றை	நம்—எல்லா நம்மையும்	ஐ—இரட்டைப் பிள்ளை
	கு—உய்குவான்	ன—ஆன்

இன்னபிறவும் என்றதனால், தன்—அவன்றனை: தான்—அவன்றான்: தாம்—அவர்தாம்: ஆம்—புற்றாஞ்சோறு: ஆ—இல்லாப்பொருள்: து—செய்துகொண்டான் என்றாற் போன்றனவும் வரும்.

உவமவுருபிடைச்சொற்கள்.

போலப் புரைய வொப்ப உறழ
மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத் துருபே. (367)

தத்தம் பொருள் இடைச்சொற்கள்.

ஏ.

பிரிநிலை வினாவெண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை யெனவா றேகா ரம்மே. (422)

பிரிநிலை —அவருள் இவனே கள்வன்.
வினா —நீயே கொண்டாய்?
எண் —நிலனே நீரே தீயே வளியே.
ஈற்றசை —என்று மேத்தித் தொழுவோம் யாமே.
தேற்றம் —உண்டே மறுமை.
இசைநிறை—ஏயே இவளொருத்தி பேயோ.

அவனே கொண்டான் என்பது அவன் கொண்டிலன் என எதிர்மறைப்பொருள் பட நிற்றலுமுண்டு.

ஓ.

ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை
கழிவசை நிலைபிரிப் பெனவெட் டோவே. (423)

ஒழியிசை—படிக்கவோவந்தாய் (என்பது படித்தற்கன்று விளையாடுதற்கு வந்தாய்).

வினா—அவனோ செய்தான்.

சிறப்பு—உயர்வு சிறப்பு—ஓஒ பெரியன். இழிவு சிறப்பு—ஓஒ கொடியன்.

எதிர்மறை—நானோ செய்தேன் (—நான் செய்திலேன்).

தெரிநிலை—(ஒருவனைத் தூரத்திற் கண்டு) சாத்தனோ அல்லன் கொற்றனோ அல்லன்.

கழிவு (—கழிவிரக்கம்)—ஓஒ என்ன உணர்வில்லையோ.

அசைநிலை—கட்டுரைப்ப தென்கொலோ.

பிரிநிலை—அவனோ சொன்னான்.

என.

வினைபெயர் குறிப்பிசை எண்பண் பாறினும்
எனவெனு மொழிவரும் என்றும் அற்றே. (424)

வினை —மைந்தன் பிறந்தானெனத் தந்தை உவந்தான்.
பெயர் —ஊரெனப்படுவது உறையூர்.
குறிப்பு —பொள்ளென வாங்கே புறம் வேரார்.
இசை —ஒல்லென ஒலித்தது.
எண் —நிலமென நீரென நெருப்பென காற்றென ஆகாயமெனப் பூதம் ஐந்து.
பண்பு —வெள்ளென விளர்த்தது.

உம்.

எதிர்மறை சிறப்பையம் எச்சமுற் றளவை
தெரிநிலை ஆக்கமோ டும்மை யெட்டே (425)

எதிர்மறை—செய்தலுங் கூடும்
சிறப்பு —உயர்வு—குறவருமருளுங் குன்றம்
இழிவு—மீனும் நாறின: வேறினி வேண்டுமோ
ஐயம் —பத்தாயினும் எட்டாயினும் கொடு
எச்சம் —இறந்தது தழுவியது—கொற்றனும் வந்தான் (முன்னே சாத்தன் வந்தான்)
எதிரது தழுவியது (இனிச்சாத்தனும் வருவான்)
முற்று —ஐம்புலனும் அறிவுக்கிடம்
எண் —இரவும் பகலும்
தெரிநிலை —நானும் அல்லன் நீயும் அல்லை
ஆக்கம் —பாலுமாயிற்று (அதுவே மருந்துமாயிற்று).

மன்.

மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம்
கழிவு மிகுதி நிலைபே றாகும். (432)

அசைநிலை—அதுமன் கொண்கன் தேரே
ஒழியிசை —கூரிய தோர் வாள்மன் (இரும்பை வெட்டியது)
ஆக்கம் —நெடியன்மன் (அவனே வலியனுமானான்)
கழிவு —அமுதம் பெறின் எமக்கீயு மன்னே (அவன் இறந்ததனால் எமக்குக் கொடுத்தல் கழிந்தது
மிகுதி —எந்தை எமக்கருளுமன்
நிலைபேறு—மன்னுவுலகத்து மன்னியது புரிமோ.

மற்று.

வினைமாற் றசைநிலை பிறிதெனும் மற்றே. (433)

வினைமாற்று—மற்றறிவாம் நல்வினை யாம் இளையம் (பின்னால் விரையாது அறிவாம்)
அசைநிலை —மற்றென்னை ஆள்க
பிறிது —மற்றென் செய்யார்

சொல்.

சொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே. (435)

ஐயம் —குற்றிசொல் மகன் சொல்
அசைநிலை—கற்றதனாலாய பயனென்சொல்.

அந்தில், ஆங்கு.

அந்திலாங் கசைநிலை இடப்பொரு ளவ்வே. (437)

அம்ம.

அம்ம உரையசை கேண்மினென் றாகும். (438)

தத்தம்பொருள் இடைச்சொற்களில் மேலே கூறாதவற்றிற் சில.

1. **முன்—பின்:** *காலப்பொருள்—இடப்பொருள்.*
2. **இனி:** *கால இடங்களின் எல்லைப்பொருள்.*
3. **தோறும்—தோறும்:** *இடப்பன்மைப் பொருள்—தொழிற்பயில் வுப்பொருள்.*
4. **வாளா—சும்மா:** *பயனின்மைப் பொருள்.*
5. **ஆவது—ஆதல்—ஆயினும்—தான்:** *விகற்பப்பொருள்.*
6. **அந்தோ—அன்னே—ஐயோ—அச்சோ—அஆ—ஆஅ—ஓஓ:** *இரக் கப்பொருள்.*
7. **ஆ—ஆகா—அம்ம — அம்மா—ஓ—ஓகோ—அம்மம்மா — அச்சோ:** *வியப்புப்பொருள்.*
8. **கூ—கூகூ—ஐயோ—ஐயையோ**—*அச்சப்பொருள்.*
9. **சீ—சீசீ—சிச்சீ—சை:** *இகழ்ச்சிப்பொருள்.*

இசைநிறை யிடைச்சொற்கள்.

ஒடுவுந் தெய்யவு மிசைநிறை மொழியே. (436)

அசைநிலை யிடைச்சொற்கள்.

யாகா பிறபிறக் கரோபோ மாதிகுஞ்
சின்குரை ஒரும் போலும் இருந்திட்
டன்றாம் தாந்தான் கின்றுநின் றசைமொழி (441)

வியங்கோளசை.

மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல். (439)

முன்னிலையசை.

மியாயிக மோமதி அத்தை இத்தை
வாழிய மாளஈ யாழ்முன் னிலையசை. (440)

அநுபந்தம்

தொல்காப்பியம்.

1. இடையெனப் படுப பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலும்: தமக்கியல் பிலவே.

2. அவைதாம்,
புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குதநவும்
வினைசெயல் மருங்கிற் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்
அசைநிலைக் கிளவி ஆகி வருநவும்
இசைநிறைக் கிளவி ஆகி வருநவும்
தத்தம் குறிப்பிற் பொருள் செய்குநவும்
ஒப்பில் வழியாற் பொருள் செய்குநவுமென்
றப்பண் பினவே நுவலுங் காலை.

3. முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்
தம்மீறு திரிதலும் பிறிதவண் நிலையலும்
அன்னவை யெல்லாம் உரிய வென்ப.

இசைநிறை—அசைநிலை.

4. ஏயும் குரையும் இசைநிறை அசைநிலை
ஆயிரண்டாகும் இயற்கைத் தென்ப.

அசைநிலை.

5. மாவென் கிளவி வியங்கோளசைச் சொல்

6. மியாஇக மோமதி இகும்சின் என்னும்
ஆவயினாறும் முன்னிலை யசைச் சொல்.

7. அவற்றுள்
இகுமும் சின்னும் ஏனையிடத் தொடும்
தகுநிலை யுடைய என்மனார் புலவர்.

8. அம்ம கேட்பிக்கும்

9. ஆங்க உரையசை

10. ஒப்பில் போலியும் அப்பொருட்டாகும்

11. யாகா
பிறபிறக் கரோபோ மாதென வரூஉம்
ஆயேழ் சொல்லும் அசைநிலைக் கிளவி

12. ஆக ஆகல் என்ப தென்னும்
ஆவயின் மூன்றும் பிரிவி லசைநிலை.

மன்.

13. கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப மன்னைச் சொல்லே.

தில்.

14. விழைவே காலம் ஒழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப தில்லைச் சொல்லே.

கொன்.

15. அச்சம் பயமிலி காலம் பெருமையென்
றப்பால் நான்கே கொன்னைச் சொல்லே.

உம்.

16. எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை
முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கமென்
றப்பா லெட்டே உம்மைச் சொல்லே.

ஓ.

17. பிரிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை
தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ
இருமூன் றென்ப ஓகாரம்மே.

ஏ.

18. தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே
ஈற்றசை இவ்வைந் தேகாரம்மே.

என.

19. வினையே குறிப்பே இசையே பண்பே
எண்ணே பெயரோ டவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே எனவென் கிளவி.

என்று.

20. என்றென் கிளவியும் அதனோ ரற்றே.

மற்று.

21. மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை.
அப்பா லிரண்டென மொழிமனார் புலவர்.

எற்று.

22. எற்றென் கிளவி இறந்த பொருட்டே.

மற்றையது.

23. மற்றைய தென்னுங் கிளவிதானே
சுட்டுநிலை யொழிய இனங்குறித் தன்றே.

மன்ற.

24. மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்.

தஞ்சம்.

25. தஞ்சக் கிளவி எண்மைப் பொருட்டே.

கொல்.

26. கொல்லே ஐயம்.

எல்.

27. எல்லே இலக்கம்.
இலக்கம்—விளங்குதற் பொருண்மை உணர்த்தும்.

குறிப்பு.

28. நன்றீற் றேயும் அன்றீற் றேயும்
அந்தீற் றோவும் மன்னீற் றோவும்
அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்.

குறிப்பின்வரும் இடைச்சொற்கள்.

ஒலிக்குறிப்பு. — அம்மென—இம்மென—கோவென—சோவென—துடுமென—ஒல்லென—கஃறென—சுஃறென—கடகடென—களகளென—திடுதிடென—நெறுநெறென—படபடென முதலியன

அச்சக்குறிப்பு.—துண்ணென — துணுக்கென — திட்கென—திடுக்கென முதலியன.

விரைவுக்குறிப்பு.—பொள்ளென — பொருக்கென — கதுமென—ஞெரேலென—சரேலென முதலியன.

உரிச்சொல்.—(**Words expressive of abstract qualities.**)

உரிச்சொல் (இன்னதென்பது).

> பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
> ஒருகுணம் பலகுணம் தழுவிப் பெயர்வினை
> ஒருவா செய்யுட் குரியன உரிச்சொல் (442)

பல்வகைப் பண்பும் பகர்பெயர்=இசையும் குறிப்பும் பண்பு மாகிய பலவேறுவகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயர். இசை—ஓசை. குறிப்பு—மனத்தால் குறித்துணரப்படுவது. பண்பு—பொறியால் உணரப்படும் குணம்.

ஒருகுணந் தழுவிய உரிச்சொல்.

> சால உறுதவ நனிகூர் கழிமிகல் (456)

பலகுணந் தழுவிய உரிச்சொல்.

> கடியென் கிளவி காப்பே கூர்மை
> விரையே விளக்கம் அச்சம் சிறப்பே
> விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்
> வரையே மன்றல் கரிப்பி னாகும். (457)

குறிப்பு.—உரிச்சொல் குணத்தை மாத்திரம் காட்டும். பண்புப் பெயரும், தொழிற்பெயரும், பெயரெச்ச வினையெச்சங்களும், பெயர் வினைகளின் குணங்கூறுகளை விளக்குவனவாயினும், அவைகள் தத்தம் பாகுபாடுகளைப் பெற்றுவரும். உரிச்சொற்களோ, திணை பால் இடம் வேற்றுமை காலம் முதலிய பாகுபாடுகளைப் பெறுவதில்லை. முதனிலையும் இறுதி நிலையுமாக எழுத்துக்கள் பிரிந்து வேறு வேறு பொருள் உணர்த்தல் உரிச்சொல்லிடத்து இயைபுடைத்தன்று. "எழுத்துப் பிரிந் திசைத்தல் இவணியல்பின்றே" என்பது தொல்காப்பியம். "மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" என்பது, உறு தவ முதலாயின சொற்கு மிகுதி முதலாயின பொருளாதல் வாலாற்று முறைமையால் கொள்வதல்லது, அவை அப்பொருளவாதற்குக் காரணம் விளங்கத் தோன்றா என்றும் உரைக்கின்றது.

அநுபந்தம்

தொல்காப்பியம்.

தமக்கியல்பில்லா இடைச்சொற்போலாது, இசை குறிப்புப் பண்பென்னும் பொருட்கு உரியவாய் வருதல் உரிச்சொல்லின் தன்மை. ஈறுபற்றிப் பொருள் விளக்கலும் உருபேற்றலுமின்றிப் பெயரையும் வினையையுஞ் சார்ந்து பொருட்குணத்தை விளக்கலின் உரிச்சொல் பெயரின் வேறென்றுணர்க என்றார் நச்சினார்க்கினியர். பெரும்பான்மையும் செய்யுட்கு உரியவாய் வருதலின் உரிச்சொல்லாயிற்று என்பாருமுளர் (சேனாவரையர்). இவை பண்புப் பெயராயினும் மற்றப் பெயர் வினைகளை விட்டு நீங்காமையின் உரிச்சொல் என வேறு ஓதப்பட்டன (இராமாநுசகவிராயர்).

உரிச் சொற்கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடுமாறி
ஒருசொல் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றினும்
பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தமரபிற் சென்று நிலைமருங்கின்
எச்சொ லாயினும் பொருள்வேறு கிளத்தல்.

பெயரினும் வினையினும் மெய்தடுமாறி—பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் தம்முருபு தடுமாறி (பெயர் வினை போன்றும் அவற்றிற்கு முதனிலையாயும் தடுமாறி). தத்தமரபின் சென்று நிலைமருங்கின்—பெயரும் வினையுமாகிய தத்தமக்குரிய நிலைக்களங்களாலே. எச்சொல்லாயினும்—கேட்போனால் பொருளுணரப்படாத எவ்வகைப்பட்ட சொல்லாயினும். பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தி—பயிலப்படாத சொல்லைப் பயின்றவற்றோடு சார்த்தி, பொருள் வேறு கிளத்தல்—பொருளை வேறுவேறு சொல்லுக.

1. உருவுட்காகும் புரையுயர் வாகும்.
2. குருவுங் கெழுவும் நிறனாகும்மே.
3. மழவுங் குழவும் இளமைப் பொருள.
4. கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்.
5. தடவும் கயவும் நளியும் பெருமை.
6. சாயல் மென்மை.
7. வம்பு நிலையின்மை.
8. மாதர் காதல்.

9. பிணையும் பேணும் பெட்பின் பொருள.
10. தாவே வலியும் வருத்தமுமாகும்.
11. கமநிறைந்தியலும்.
12. அரியே ஐமை.
13. பேநாம் உருமென வரூஉங் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சப் பொருள.
14. வய வலியாகும்.
15. புனிறென் கிளவி ஈன்றணிமைப் பொருட்டே.
16. மதவே மடனும் வலியு மாகும்:
மிகுதியும் வனப்பும் ஆகலுமுரித்தே.
17. புதிதுபடற் பொருட்டே யாணர்க்கிளவி.
18. ஐவியப்பாகும்.
19. வையே கூர்மை.
20. எறுழ்வலியாகும்.

சொல்லாக்கம்.

TAMIL—AN AGGLUTINATIVE LANGUAGE.

The manner in which various languages deal with their roots is strongly indicative of their essential spirit and distinctive character; and it is chiefly with reference to their differences in this particular, that the languages of Europe and Asia admit of being arranged into classes. Those classes are as follows:—(1) The monosyllabic, uncompounded, or isolative languages of which Chinese is the principal example, in which roots admit of no change or combination, and in which all grammatical relations are expressed either by auxiliary words or phrases, or by the position of words in a sentence. (2) The Semetic or intro-mutative languages, in which grammatical relations are expressed by internal changes in the vowels of dissyllabic roots. (3) The agglutinative languages, in which grammatical relations are expressed by affixes or suffixes added to the root or compounded with it.

The three classes mentioned above are not separated from one another by hard and fast lines of distinction. Their boundaries overlap one another. Probably all languages consisted at first of isolated monosyllables. The isolative languages have become partly agglutinative, and changes in the internal vowels of roots are not unknown in the agglutinative class. Such internal changes may occasionally be observed even in the Dravidian languages.

It may appear at first sight scarcely credible that the Dravidian roots were originally monosyllabic, when it is considered that the majority of the words in every Dravidian sentence are longer than those of any other language in Asia or Europe (e.g., compare *irukkiradu*,

Tamil, it is, with the Latin *est*), and are inferior in length only to the words of the polysynthetic languages of America. The great length of Dravidian words arises partly from the separation of clashing consonants by the insertion of euphonic vowels, but chiefly from the successive agglutination of formative and inflectional particles and pronominal fragments. In some instances the first syllable of the verbal theme contains the root, whilst the second is a particle anciently added to it, and compounded with it for the purpose of expanding or restricting the signification. The syllables that are added to the inflectional base are those which denote case, tense, person, and number. Hence, whatever be the length and complication of Dravidian words, they may invariably be traced up to monosyllabic roots, by a careful removal of successive accretions. Thus, when we analyse *perugugiradu*, Tam. it increases, we find that the final *adu* represents the pronoun it, *gir* is the sign of the present tense and *perugu* is the base or verbal theme. Of this base, the final syllable *gu* is only a formative, restricting the verb to an intransitive or neuter signification; and by its removal we come to *peru*, the real root, which is used also as an adjective or noun of quality, signifying greatness or great. Nor is even this dissyllable *peru* the ultimate condition of the root; it is an euphonised form of *per*, which is found in *periya* and *perum*, great; and an euphonically lengthened but monosyllable form of the same is *per*. Thus, by successive agglutinations, a word of six syllables has been found to grow out of one. In all these forms, and under every shape which the word can assume, the radical element remains unchanged, or is so slightly changed that it can readily be pointed out by the least experienced scholar. The root always stands out in distinct relief, unobscured, unabsorbed, though surrounded by a large family of auxiliary affixes. In the Semitic and Indo-European tongues the root is frequently so much altered that it can scarcely be recognized.

Internal changes in roots :—

தொல்	—தோல்	தா	—தருகிறது
பெயர்	—பேர்		தந்தேன்
தொகுப்பு	—தோப்பு	பெரு	—பேர்
வருவார்	—வருவோர்	கரு	—கார்
யான்	—என்	அரு	—ஆர்
யாம்	—எம்	மூ	—மு
நீ	—நின்	ஆறு	—அறு
நீர்	—நும்	ஏழு	—எழு
கெடு	—கேடு	பசு	—பாசி—பைங்கூழ்
பெறு	—பேறு	காண்	—கண்டு
கொள்	—கோள்	நொ	—நோகிறது
வா	—வருகிறது	வே	—வெந்து
	வந்தேன்	சா	—செத்தான்.

In the Dravidian languages stability in the root-vowels is the rule, change the exception.

—CALDWELL.

பவணந்திமுனிவர் வடநூன் மேற்கோளாக ஒருமொழிகளை விதந்து பகாப்பதம் பகுபதம் எனத் தமிழில் முதன் முதலில் காரணப்பெயர் தாமேயிட்டு வழங்குவாராயினர். தமிழில் பகுபதவிலக்கண வாராய்ச்சியை இவர்க்குமுன் எவ்விதத்திலும் ஒழுங்காகச் செய்த ஆசிரியர் வேறெவரும் இலர். வடநூன் மேற்கோளாகச் செய்யினும், இவ்வாராய்ச்சி தமிழ்மொழிகளின் வரம்பைக் கடவாமலே திட்பமும் நுட்பமுமாகச் செய்திருக்கின்றது.

சொல்—பதம்—மொழி—கிளவி என்பவை ஒரு பொருளன.

பதம் (இன்னதென்பதும் அதன் வகையும்.)

எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருடரின்
பதமாம். அதுபகாப் பதம்பகு பதமென
இருபா லாகி இயலும் என்ப (128)

ஓரெழுத் தொருமொழி.

உயிர்மவி லாறும், தபநவி லைந்தும்,
கவசவி னாலும், யவ்வி லொன்றும்,
ஆகுநெடில், நொதுவாங் குறி லிரண்டோடு
ஓரெழுத் தியல்பதம் ஆறேழ் சிறப்பின. (129)

ஆ—ஈ—ஊ (flesh)—ஏ (arrow)—ஐ (beauty)—ஓ (floodgate).
மா—மீ (above)—மூ (old age)—மே (love)—மை—மோ (smell.)
தா—தீ—தூ (purity)—தே (god)—தை.
பா (verse)—பூ—பே (foam)—பை—போ.
நா—நீ—நே (love)—நை (suffer)—நோ (pain).
கா (grove)—கூ (earth)—கை—கோ (king).
வா—வீ (death)—வை—வௌ.
சா (death)—சீ (Lakshmi)—சே (bull)—சோ (மதில்).
யா (which).
நொ (endure).
து (eat).

மற்றவை—கு—கௌ—பீ—வே.

தொடரெழுத் தொருமொழி. { பகாப்பதம். பகுபதம்.

பகாப்பதம்.

பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி
முன்னே யொன்றாய் முடிந்தியல் கின்ற
பெயர்வினை இடையுரி நான்கும் பகாப்பதம். (131)

குறிப்பு.—பெயர்ப்பகாப்பதம்—மண்—நீர்—காற்று—நெருப்பு.
வினைப்பகாப்பதம்—நட—வா—வாழ்—விடு.
இடைப்பகாப்பதம் — மன் — மற்று—கொல்—போல்.
உரிப்பகாப்பதம்—உறு—தவ—நனி—கழி.

பகுபதம்.

பொருளிடம் காலம் சினைகுணம் தொழிலின்
வருபெயர், பொழுதுகொள் வினைபகு பதமே. (132)

குறிப்பு.—வருபெயர்—இவை காரணமாக வருகின்ற பெயர்ச்சொற்களும், பொழுதுகொள்வினை—தெரிநிலையாகவும் குறிப்பாகவும் காலத்தைக் கொள்ளும் வினைச்சொற்களும், பகுபதம்—பகுபதங்களாகும்.

பொருட்பெயர்ப்	பகுபதம்	பொன்னன்
இடப்	,,	அகத்தன்
காலப்	,,	ஓணத்தான்
சினைப்	,,	கண்ணன்
குணப்	,,	கரியன்
தொழிற்	,,	ஊணன்.

உடன்பாட்டுத் தெரிநிலை வினை	வினைமுற்றுப் பகுபதம்.	நடந்தான்—நடக்கின்றான்—நடப்பான்
	பெயரெச்சப் ,,	நடந்த—நடக்கின்ற—நடக்கும்
	வினையெச்சப் ,,	நடந்து—நடக்க—நடக்கின்.
எதிர்மறைத் தெரிநிலைவினை	வினைமுற்றுப் பகுபதம்	நடந்திலன் — நடக்கின்றிலன்—நடவான்
	பெயரெச்சப் ,,	நடவாத
	வினையெச்சப் ,,	நடவாது—நடவாமல்.
உடன்பாட்டுக் குறிப்புவினை	வினைமுற்றுப் பகுபதம்	பொன்னன் — ஊணன்—அற்று—இற்று-எற்று
	பெயரெச்சப் ,,	கரிய—பெரிய
	வினையெச்சப் ,,	பைய—மெல்ல.
எதிர்மறைக் குறிப்புவினை	வினைமுற்றுப் பகுபதம்	அல்லன்-இல்லன்-அன்று-இன்று
	பெயரெச்சப் ,,	அல்லாத—இல்லாத
	வினையெச்சப் ,,	அன்றி — இன்றி — அல்லாமல் — இல்லாமல்.

தெரிநிலை வினையாலணையும். பெயர்ப்பகுபதம்—நடந்தான்—நடந்தவன்.

குறிப்புவினையாலணையும் பெயர்ப்பகுபதம்—பொன்னன்—பொன்னவன்.

பதப்த வுறுப்புக்கள்.

பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும். (133)

ஏற்பவை—பொருளமைதிக்கு ஏற்பவைகளை, முன்னி—நினைத்து, புணர்ப்ப—கூட்டி முடிக்க, எப்பதங்களும் முடியும்—எவ்வகைப்பட்ட பகுபதங்களும் முடிவுபெறும்.

சொல்.	பகுதி.	சந்தி.	விகாரம்.	இடை நிலை.	சாரியை.	விகுதி.
கூனி	கூன்	...	...	...	...	இ
உண்டான்	உண்	...	...	ட்	...	ஆன்
உண்டனன்	உண்	...	...	ட்	அன்	அன்
பிடித்தனன்	பிடி	த்	...	த்	அன்	அன்
நடந்தனன்	நட	த்	த்-ந் ஆனது	த்	அன்	அன்

செய்யுமே னெச்சம்.

செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலும்
(செய்யுளு ளும்முந் தாகலு) முற்றேல்
உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே. (341)

ஆகும்பொருள் – ஆம்பொருள். போகும்போது – போம்போது, வாவும் புரவி–வாம்புரவி.

"சாரனுடை என்தோழியும் கலுழ்மே" கலுழும்–கலுழ்ம் (உயிர் கெட்டது). "அம்பலூருமவனொடு மொழிமே": மொழியும்–மொழிம் (உயிர்மெய் கெட்டது).

பெயர் வினைகள் ஈற்றயல் திரிதல்.

பெயர்வினை யிடத்து னளரய வீற்றயல்
ஆவோ ஆகலும் செய்யுளுள் உரித்தே. (353)

குறிப்பு:—

வில்லான்–வில்லோன். தொடியாள்–தொடியோள். நல்லார்–நல்லோர். கொடுத்தாய்–கொடுத்தோய்.

குறியதன்கீழ் ஆ.

குறியதன் கீழாக் குறுகலும் அதனோ
டுகரம் ஏற்றலும் இயல்புமாம் தூக்கின். (172)

நிலா–நில–நிலவு, சுறா–சுற–சுறவு, அரா–அர–அரவு.

இரட்டைக் கிளவி.

இரட்டைக் கிளவி இரட்டிற்பிரிந் திசையா. (396)

சலசல,–கலகலக்கும்–மொடுமொடுத்தது.

மொழி யிறுதிப்போலி.

மகர விறுதி அஃறிணைப் பெயரின்
னகரமோ டுறழா நடப்பன வுளவே. (122)

அகம்–அகன், நிலம்–நிலன், (சுரும்பு–சுரும்பர். வண்டு–வண்டர். பந்தல்–பந்தர்.)

மொழி முதற்போலி மொழியிடைப்போலி.

அஐ முதலிடை ஒக்குஞ் சஞயமுன். (123)

முதல்	இடை
பசல்—பைசல்	அமச்சு—அமைச்சு
மஞ்சு—மைஞ்சு	இலஞ்சி—இலைஞ்சி
மயல்—மையல்	அரயர்—அரையர்

மொழியிடைப்போலி.

ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகா னுறழும் என்மரும் உளரே. (124)

சேய்நலூர்—சேய்ஞலூர். ஐந்நூறு—ஐஞ்ஞூறு.

எழுத்தின் சாரியைகள்.

மெய்கள் அகரமும், நெட்டுயிர் காரமும்,
ஐயௌக் கானு, மிருமைக் குறிலிவ்
விரண்டொடு கரமுமாம் சாரியை பெறும்பிற. (126)

குற்றெழுத்தோடு கான்சாரியை புணரும்போது இடையே ஆய்தம் விரியும்.

வ ழ க் கு.

இயல்பு வழக்கு	இலக்கணமுடையது இலக்கணப்போலி மரூஉ	தகுதி வழக்கு	இடக்கரடக்கல் மங்கலம் குழூஉக்குறி

[**இயல்புவழக்கு**—எப்பொருட்கு எச்சொல் இயைந்ததோ அப்பொருளை அச்சொல்லால் வழங்குவது].

இலக்கணமுடையது—இலக்கண நெறியால் வருவது.

நிலம்	வானம்
நீர்	நன்னிலம்
தீ	தண்ணீர்
காற்று	வெந்நீர்

இலக்கணப் போலி—இலக்கண மில்லையாயினும் இலக்கண முடையதுபோல் அடிப்பட்ட சான்றோராலே தொன்றுதொட்டு வழங்கப்பட்டு வருவது.

முன்றில்—இல்முன்	மீகண்—கண்மீ
வாயில்—இல்வாய்	கோயில்—கோவில்
புறநகர்—நகர்ப்புறம்	பொதியில்—பொதுவில்
உலாப்புறம்—புறவுலா	முன்றானை—தானைமுன்
முற்பகல்—பகலின்முன்	நுனிவிரல்—விரலின் நுனி.
பிற்பகல்—பகலின்பின்	

மரூஉ—தொன்றுதொட்டு வருதலின்றி, இடையிலே, சிலவெழுத்துக் கெட்டும், சிலவெழுத்துத் தோன்றியும், இலக்கணத்திற் சிதைந்து, தானே மருவி வழங்குவது.

அங்கலாய்த்தல்—(அகம்—கலாய்)
அங்கை—அகங்கை.
அசசந்திவேளை—அசுரசந்திவேளை.
அருமந்தபிள்ளை — அருமருந்தன்ன பிள்ளை
ஆந்தை—ஆதன் தந்தை
ஆர்—யார்—யாவர்
ஆவாரம்பட்டை—ஆவிரம் பட்டை
ஆறை—ஆற்றூர்
இண்ணாசுருங்கி—என்ராற்சுருங்கி
இன்னணம்—இன்னவண்ணம்.
ஈசல்—ஈசெல்
என், என்னை, என்ன—எவன்
என்தந்தை—எந்தை
எக்கண்டமாய்—ஏககண்டமாய்
ஏகோபித்து—ஏகீபவித்து.
ஒண்டுதல்—ஒன்றுதல்
ஒத்திக்கை—ஒத்திருக்கை
ஒன்னார்—ஒன்றார்
ஓகை—உவகை
கிழங்கன்னபழஞ்சோறு — கிழங்கம் பழஞ்சோறு
குடலை—குடையோலை
குணாது—குணக்குள்ளது
குளாம்பல்—குளவாம்பல்
கொசுவம்—(கொசுவணம்) — கொய்சகம்.
செரங்கா—சேரங்கை
சென்னை—சென்னபட்டினம்
சோணாடு—சோழநாடு
தஞ்சை—தஞ்சாவூர்
தம்பலம்—தாம்பூலம்
திண்டிவனம்—திருணீவனம்
தின்னனூர்—திருநின்றையூர்
திருவள்ளூர்—திருவெவ்வுளூர்
தெனாது—தெற்குள்ளது
தேவாங்கு—தேய்வாங்கு
தொட்டாசிணுங்கி — தொட்டாற் சுருங்கி.
தொண்டைநாடு — தொண்டைமானாடு
தொளாயிரம்—தொள்ளாயிரம்
நஞ்சை—நன்செய்
நாகை—நாகூர்
நண்டு—ஞெண்டென்பது ஞண்டாய்ப் பின்னர் நண்டெனமரீஇயது
பனைசை—பனையூர்
பாடகம்—பாதகடகம்
பாண்டிநாடு—பாண்டியனாடு
பீந்தோல்—மீந்தோல்
புஞ்செய்—புன்செய்
பூந்தை—பூதன் தந்தை
போஞ்சட்டி—போனகச்சட்டி
மராடி—மரவடி
மலாடு—மலையமானாடு
முசிட்டெறும்பு—முசிற்றெறும்பு—முயிற்றெறும்பு
முந்தாணி—முன்றானை
யார், ஆர்—யாவர்
வடாது—வடக்குள்ளது
வடுகந்தை—வடுகன்தந்தை
வேங்கியம்—வியங்கியம்
வேணவா—வேட்கை அவா

[தகுதிவழக்கு — இப்பொருளை அறிதற்கு அமைந்துகிடந்த இச்சொல்லால் சொல்வது தகுதியன்று, வேறொரு சொல்லால் சொல்வது தகுதியென்று நினைத்து வழங்குவது].

இடக்கரடக்கல்—நன்மக்களிடத்தே சொல்லத்தகாத சொல்லை அவ்வாய்பாடு மறைத்துப் பிறவாய்பாட்டாற் சொல்வது.

ஆப்பி, ஆமுன்வரும் ஈகாரபகரம் (பசுவின் சாணம்)
பகரவீ, பவ்வி—பீ
ஒன்றுக்குப்போனான்—ஜலமோசனம் செய்யப்போனான்
இரண்டுக்குப் போனான் } மலஜலமோசனம் செய்யப்போனான்
கால்வாய்க்குப் போனான் }
கால்கழீஇ வருதும் மலங்கழீஇ வருதும்

"கழாக்கால் பள்ளியுள்வைத்தற்று."—"கான்மேனீர் பெய்துவருதும்"—"நிலவுப் பயன்கொள்ளு நெடுநிலா முற்றம்" என்பனவும் இதற்குதாரணங்கள்.

"அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்" என்பது தொல்காப்பியம்.

மங்கலம்—மங்கலமில்லாததை யொழித்து மங்கலமாகச்சொல்வது.

திருமுகம்—ஓலை
வெள்ளாடு—காராடு
நன்காடு—இடுகாடு—சுடுகாடு
துஞ்சினார் }
விண்ணுலகடைந்தார் }
பரமபதித்தார் }
சுவர்க்கம்புகுந்தார் }
ஆசாரியன் திருவடியடைந்தார் } செத்தார்
சிவபெருமான் திருவடி நிழலையடைந்தார் }
கண்ணைமூடிக் கொண்டார் }
காலகதியடைந்தார் }

தாலிபெருகிற்று—தாலியறுந்தது—ஒருத்தி கணவனை இழத்தல்
தாலிபெருகித் தங்கநாணுதல்—தாலிநீக்கிய கைம்பெண் மின்னூலணிதல்—கணவனையிழத்தல்.

குழூஉக்குறி—ஒவ்வொரு கூட்டத்தார் யாதாயினும் ஒரு காரணம் பற்றி ஒருபொருளினது சொற்குறியை யொழித்து வேறொரு சொற்குறியை வழங்குவது.

பறி—பொன் (தட்டார் வழக்கு)
காரை—ஆடை (யானைப்பாகர்)
சொல்விளம்பி—கள் (வேடர்)

பூவெள்ளை—கால் ரூபா
பிஞ்சுவெள்ளை—அரை ரூபா
மதிவெள்ளை—ஒரு ரூபா
சரவெள்ளை—இரண்டு ரூபா } (வர்த்தகர்)
நசியம்—புகையிலைப் பொடி
ரிஷிகணக்கு—எழு (பிராமண வழக்கு)

இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉவென் றாகும் மூவகை இயல்பும்,
இடக்க ரடக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோ டாறும் வழக்கியல். (267)

வெளிப்படை குறிப்பு.

ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி
ஆகு பெயரன் மொழிவினைக் குறிப்பே
முதலறுகை குறிப்போ டின்ன பிறவும்
குறிப்பிற் றருமொழி: அல்லன வெளிப்படை. (269)

ஆகுபெயர்.

ஆகுபெயராவது ஒருபொருளின் இயற்பெயர் அப்பொருளோடு சம்பந்தமுடைய பிறிதொரு பொருளிற்கு வழங்கிவரும் பெயர். அது பலவகையாக வரும்.

பொருளாகுபெயர் (முதலாகுபெயர்)—தாமரையின் பூவைத் தாமரை யென்பது.

இடவாகுபெயர்—அகத்திலிருக்கின்ற மனதை அகமென்பது.

காலவாகுபெயர்—கார்காலத்தி லுண்டாகும் பயிரைக் காரென்பது.

சினையாகுபெயர்—புளியையுடைய மரத்தினைப் புளியென்பது.

பண்பாகுபெயர் (குணவாகுபெயர்)—கார்நிறத்தையுடைய மேகத்தைக் காரென்பது.

தொழிலாகுபெயர்—புழுக்கப்பட்ட சோற்றைப் புழுக்கலென்பது.

அளவை:
- எண்ணல் — ஒன்றென்னும் எண்ணையுடைய பொருளை ஒன்றென்பது. உடலின் உறுப்பைக், கால் அரை யென்பன.
- எடுத்தல்—வீசையளவைக் கொண்ட பொருளை வீசை யென்பது
- முகத்தல்—நாழியளவைக்கொண்ட பொருளை நாழியென்பது.
- நீட்டல்—தடியளவைக் கொண்ட நிலத்தைத் தடி யென்பது.

சொல்லாகுபெயர்—மொழிப்பொருளை யுணர்ந்தானை மொழியுணர்ந் தானென்பது.

தானியாகுபெயர்—விளக்கின் தண்டை விளக் கென்பது.

கருவியாகுபெயர்—திருவாசகமாகிய கருவியால் தொடுத்த யாப் பைத் திருவாசகமென்பதும், திருவாய் மொழியால் தொடுத்த யாப்பைத் திருவாய்மொழியென்பதும்.

காரியவாகுபெயர் — அலங்காரவுணர்ச்சியாகிய காரியத்தை விளக் கும் கருவியாகிய நூலை அலங்காரமென்பது.

கருத்தாவாகுபெயர்—திருவள்ளுவர் செய்த நூலைத் திருவள்ளுவ ரென்பது.

ஆகுபெயர்.

பொருண்முத லாறோ டளவைசொல் தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகு பெயரே. (290)

குறிப்பு.—ஒரு பொருளின் இயற்பெயர் யாதானும் ஓர் இயைபு பற்றி வேறு பொருளுக்கு வழங்குதலால் ஆகுபெயரைத் தொல்காப்பி யர் வேற்றுமை மயங்கியலில் சேர்த்திருக்கிறார். ஒன்றன் பொருட்கண் ஒன்று சேறல் என்னும் ஒப்புமையான் அங்ஙனம் சேர்த்தாரென்பர் சேனாவரையர்.

அன்மொழித் தொகைச்சொல்.

இடம்புரி—இடமாகிய புரியையுடைய சங்கு.
உயிர்மெய்—உயிரோடு மெய் கூடிய எழுத்து.
எழுநா—எழாகிய நாவையுடைய அக்கினி.
ஐம்பால்—ஐந்தாகிய பான்மையுடையது—கூந்தல்.
கறையடி—உரல்போன்ற அடியுடையது—யானை.
கார்கோள்—கடல்.
கிள்ளிகுடி—கிள்ளியுடைய குடிமக்கள் இருக்கும் ஊர்.
கீழ்வயிற்றுக்கழலை—கீழ்வயிற்றின்கண் எழுந்த கழலை போல்வான்.
குடாவடி—குடாவை யொத்த அடிகளையுடையது—கரடி.
கொடுவரி—வளைவாகிய வரிகளையுடையது—புலி.
சுரிகுழல்—சுரிந்த குழலையுடைய பெண்.
துடியிடை—உடுக்கையையொத்த இடையையுடைய பெண்.
நால்வாய்—நாலுதலான (தொங்குதலான) வாயையுடையது-யானை

நானிலம்—நான்காகிய நிலவகைகளையுடையது—பூமி.
பூழ்க்கை—துவாரமாகிய கையை யுடையது—யானை.
முந்நீர்—மூன்றாகிய நீர்மையையுடையது—கடல்.
வடகிழக்கு—வடக்கும் கிழக்கும் கூடுகிற கோணதிசை.
வலம்புரி—வலமாகிய புரியையுடைய சங்கு.
கட்செவி—கண்ணாகிய செவியையுடையது—பாம்பு
கவைநா — கவை (கவர்) ஆகிய நாவையுடையது — (கவர்படுதல்—இரண்டுபகுதல்)—பாம்பு.

முதற் குறிப்பு.

ஆத்திசூடியும் வாக்குண்டாமும் ஔவையா ரியற்றியன.
வெற்றிவேற்கை—அதிவீரராமபாண்டியன் இயற்றியது.
தில்லைவாழந்தணர் சருக்கம்—இலைமலிந்த சருக்கம்—மும்மையாலுல காண்ட சருக்கம் முதலாகத் திருத்தொண்டர் புராணத்தில் வருவன.
"அறத்தாறிதுவென" வெள்ளைக்கிழிபு—யாப்பருங்கலக்காரிகையில் வெள்ளைக் கிழிபுக்குக் காட்டிய உதாரணம் முதற்குறிப்பு.

தொகைக் குறிப்பு.

ஐவரொடு குந்திவந்தாள்—(ஐவர்—பாண்டவர்)
"நாற்குணமும் நாற்படையா."
"இவைமூன்றும் விட்டதே பேரின்பவீடு"
"ஆண்டியில் இரண்டு பாண்டியில் இரண்டு"
"சூக்கமாகு மைந்தெழுத்து"

தொழிற் பெயர்.

தல்—செய்தல்—படித்தல்—கோறல்—நடத்தல்
அல்—செயல்—பெறல்—ஆடல்—வறையல்—பொரியல்—பிழியல்
அம்—நோக்கம்—திருத்தம்—ஆட்டம்—ஒற்கம்—வாட்டம்
ஐ—நடை—ஓடை—வகை—கொலை—தடை
கை—வேட்கை—செய்கை—வருகை—நடக்கை—உடுக்கை
வை—பார்வை—கோவை—சேர்வை
கு—போக்கு—அடுக்கு—தடுக்கு
பு—நடப்பு—தோற்பு—கெலிப்பு—வெறுப்பு—ஆர்ப்பு
வு—வரவு—அடைவு—உறவு—முடிவு
தி—செய்தி—மறதி—இறுதி—உறுதி
சி—புணர்ச்சி—ஆட்சி—மீட்சி—காட்சி—தேர்ச்சி

வி—புலவி—கேள்வி—வேள்வி—கல்வி—தோல்வி
உள்—விக்குள்—விளையுள்—பாய்த்துள்—செய்யுள்
காடு—சாக்காடு—நோக்காடு—விழுக்காடு
பாடு—கோட்பாடு
அரவு—தோற்றரவு—தேற்றரவு
ஆனை—வாரானை—(வருதல்)
மை—நடவாமை
து—பாய்த்து
ஆல்—தழால் எழால்
வான்—வருவான் (வருதல்), செய்வான் (செய்தல்)
அடம்—கரவடம்—கட்டடம்.

[மை விகுதி செய்தமை செய்கின்றமை என இறந்தகால விடைநிலை நிகழ்கால விடைநிலைகளோடு கூடியும்வரும். துவ்விகுதி செய்தது செய்கின்றது செய்வது என முக்கால விடைநிலைகளோடு கூடியும் வரும்.]

முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

தீன் (தின்)	பேறு (பெறு)	ஓத்து (ஓது)
ஊண் (உண்)	போர் (பொரு)	உருக்கு (உருகு)
கோள் (கொள்)	பாட்டு (பாடு)	பெருக்கு (பெருகு)
கேடு (கெடு)	வீச்சு (வீசு)	முறுக்கு (முறுகு)
வீடு (விடு)	கூற்று (கூறு)	சுருக்கு (சுருங்கு)
பாடு (படு)	எழுத்து (எழுது)	சூட்டு (சூடு)
		வாட்டு (வாடு)

பண்புப் பெயர்.

மை—நன்மை—தீமை	கு—நன்கு—தீங்கு
வெண்மை—செம்மை	றி—நன்றி
ஐ—தொல்லை	று—நன்று
சி—மாட்சி	அம்—நலம்—குற்றம்—நற்றம்
பு—நண்பு—மாண்பு	பம்—இன்பம்—துன்பம்
உ—மழவு	நர்—நன்னர்

வினைமுதற்பொருள் முதலியன குறிக்கும் விகுதிகள்.

இ—வினைமுதற்பொருள்—அலரி—சேரி (பல குடி சேர்ந்தது), ஐந்துறுப் படக்கி (ஆமை)—ஆளோட்டி—ஆட்கொல்லி.
செயப்படுபொருள்—ஊருணி

கருவிப் பொருள்—மண்வெட்டி—நூற்றுவரைக் கொல்லி—சேர்ந்தாரைக் கொல்லி—ஈயோட்டி — பல்லுக்குத்தி — சுமைதாங்கி—பாக்குவெட்டி.

ஆண்பால்—வில்லி—அறிவிலி—கற்றுச் சொல்லி — பிறைசூடி—திருவிலி—நூலோதி—வாளி.

பெண்பால்—பொன்னி—கூனி—அரசி.

ஆள் என்பதோடு சேர்ந்து—முதலாளி—கடனாளி.

பால்காட்டும் பெயர்—மலையாளி.

வடசொல்—பரதேசி—தேசாந்தரி—வனவாசி—புத்திரி—ராக்ஷஸி—தேவி.

ஐ—வினைமுதற்பொருள்—பறவை—தொழும்பை—கறவை.

செயப்படுபொருள்—தொடை—மடை(சோறு)

கருவிப்பொருள்—பார்வை.

வடசொல்(பெண்பால்)—தனயை—தத்தை(தத்தன் ஆண்பால்), தேவதை.

தமிழ் (ஆண்பால்)—மூக்கறை—செவியறை.

அம்—வினைமுதற்பொருள்—எச்சம். தோட்டம் (பலபொருள் தொக்கது)

செயப்படுபொருள்—தொல்காப்பியம்

கருவிப்பொருள்—நோக்கம்

காரன்—கடன்காரன்—இங்கிலிஷ்காரன்-வண்டிக்காரன்-வேலைக்காரன்-மாட்டுக்காரன்—வீட்டுக்காரன்.

காரி.—கடைக்காரி—வேலைக்காரி—சமையல்காரி.

எண்ணடியாகப் பிறந்த பெயர்.

ஒன்று—ஒருவன்—ஒருத்தி—ஒருவர்
இரண்டு—இருவர்
மூன்று—மூவர்
நான்கு—நால்வர்
ஐந்து—ஐவர்
ஆறு—அறுவர்
ஏழு—எழுவர்
எட்டு—எண்மர்
ஒன்பது—ஒன்பதின்மர்
பத்து—பதின்மர்
இருபது—இருபதின்மர்
நூறு—நூற்றுவர்
ஆயிரம்—ஆயிரவர்

இடைநிலை பெற்றுவரும் பெயர்.

இச்—செட்டிச்சி—தச்சிச்சி
ச்—வலைச்சி—இடைச்சி—புலைச்சி

ஞ்—அறிஞன்—வலைஞன்—கவிஞன்
த்—பாணத்தி—வண்ணாத்தி—மலையாட்டி—வெள்ளாட்டி
வ்—ஓதுவான்—பாடுவான்.

எழுத்துநிலை மாறிவரும் பெயர்.

விசிறி (சிவிறி) குமிழ் (முகிழ்)
மிஞிறு (ஞிமிறு) நாரிகேளம் (நாளிகேரம்)
தசை (சதை) கண்மீ (மீகண்)
வைகாசி—(வைசாகி) பறையலகு (பலகறை).

புதியன புகுதலாய் வந்த சொற்கள்.

[கடிசொல்லில்லைக் காலத்துப்படினே—தொல்]

சட்டி
சள்ளை
சமழ்—"சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே". "தையலாய் சமழா துரை யென்றதே".
சகாரம்—மொழிக்குமுதலில் வருதல் தொல்காப்பியர் காலத்தில் இல்லை—"சகரக்கிளவியுமவற்றோரற்றே, அஐ ஔவெனும் மூன்றலங்கடையே".

பழையனவாய்க் கழிந்த சொற்கள்.

(OBSOLETE WORDS.)

அழன்—புழன்.

பொருள் மாறிவரும் சொற்கள்.

ஆலயம் மடையன்
நாற்றம் குடி
சுவடி செல்வம்
எண்ணெய் சேவகன்
எடை தூக்கு
பொன் வெள்ளம்
கோயில் ஓடு
மனை அச்சு
செம்பு கடாக்ஷம்
அங்குலம் பலாஹாரம்
அடி உரை
கைம்மாறு

உலகினிலாப் பொருள்.

அத்திப்பூ
ஆகாயப்பூ
ஆகாயத்தாமரை
குதிரைக் கொம்பு
சிதம்பரம்
மலடி மகன்
யாமைமயிர்க்கம்பலம்
முயற்கோடு
பவளக்கோட்டு நீலயானை.
மண்ணிற்படம் }
நூலிற்கடம் }

பிறவினை.

வி—செய்வி—விடுவி—வருவி
பி—நடப்பி—உண்பி
கு—போக்கு—ஆக்கு
சு—காய்ச்சு—பாய்ச்சு
டு—உருட்டு—வெருட்டு—காட்டு
து—நடத்து—வருத்து—இருத்து—உணர்த்து—தாழ்த்து—புகுத்து.
பு—எழுப்பு—கிளப்பு
று—பயிற்று—துயிற்று

வல்லெழுத்து மிகுதல்—கரைத்தான்—தேய்த்தான் — மேய்த்தான்.

வலித்தல் விகாரம்—நீக்கு—அடக்கு—மயக்கு—திருத்து—பொருத்து—ஈட்டு (ஈண்டு).

பகுதியிரட்டித்தல் —ஓட்டு (ஓடு)—மாற்று (மாறு)—உருக்கு (உருகு)—கருக்கு (கருகு)—ஆட்டு (ஆடு)

செயப்பாட்டு வினை

படு—கட்டப்பட்டான்
உண்—கட்டுண்டான்
பெறு—கட்டப் பெற்றான்.

மகரவீற்றுச் சில வடமொழிகளும் வேறீற்றுச் சில தமிழ் மொழிகளும் இகரவிகுதிபெற்று வினைகளாதல்.

அங்குரம்—அங்குரி
அபகாரம்—அபகரி
உபகாரம்—உபகரி
கடாக்ஷம்—கடாக்ஷி
கடைக்கண்—கடைக்கணி
சித்திரம்—சித்திரி
சேகரம்—சேகரி
தியானம்—தியானி
தோத்திரம்—தோத்திரி
பரிகாரம்—பரிகரி
பிற்கால்—பிற்காலி
புறக்கண்—புறக்கணி
வசனம்—வசனி
விரோதம்—விரோதி

ஆ—உறு—படு என்பனபெற்று வினையாதல்.

குணமாயிற்று
இன்புற்முன்
கண்ணுற்றேன்
கேள்வியுற்றேன்
வியாதி குணப்படும்
ஸ்திரப்பட்டது.
பயன்படுதல்

மரபு.

எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே. (388)

வடமொழியாக்கம்.

தற்பவ மொழிகள்.

தற்பவமொழிகளாவன, ஆரியத்திற்கே யுரிய சிறப்பெழுத்தாலும் பொதுவுஞ் சிறப்புமாகிய ஈரெழுத்தாலுமாகித் திரிதல் முதலிய விகாரங்களைப் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் வடமொழிகளாம்.

1. மொழியிறுதி ஆகாரம் ஐகாரமாயும், ஈகாரம் இகரமாயும் ஊகாரம் உகரமாயும் திரியும். மாலை புரி சுயம்பு.

2. ஆரியத்தில் ஏழாம் உயிராகிய ரு (ஐ)இகரமாயும் இருவாயும் திரியும்—ருஷபம் என்பது இடபம் எனவும் ம்ருகம் என்பது மிருகம் எனவும் திரியும்.

3. மெய்யெழுத்துக்களுள் கசடதப என்னும் ஐந்து வருக்கங்களின் நடுநின்ற மும்மூன்றெழுத்துக்களும் அவ்வவ்வருக்கங்களின் முதலெழுத்துக்களாகும். ஜகரம் யகரமாகும்.

kha – நகம்	cha – சலவாதி	ṭha – பீடம்
ga – நாகம்	ja – விசயம்	ḍa – பீடை
gha – மேகம்	jha – சருச்சரை	ḍha – திடம்

tha – தலம்	pha – பவம்
da – தினம்	ba – பந்தம்
dha – தரை	bha – பாரம்

ja–பங்கயம்

4. தகாமும் da காமும் லகாமும் றகரமாகும். உற்பலம் அற்புதம் கற்பகம்.

5. நகரம் மொழியிடையில் பெரும்பாலும் ணகரமாகும். தினம் மனம்.

6. பம்முதல் அவ்வருக்கத்து நான்கு மெய்களும் வகரமாகும். பாவம் கவம் விந்து வீமன்.

7. வகரம் ஒரோவிடத்துப் பகரமுமாகும். காப்பியம்.

8. ஸகாரம் மொழிக்கு முதலில் சகரமும், இடையில் சகரமும் யகரமுமாகும். சாலை பாசம் மயானம்.

9. ஷகாரம் மொழிக்கு முதலில் சகரமும், இடையிலும் கடையிலும் டகரமுமாகும். சண்முகன் விடம் பாடை.

10. ஸகாரம் மொழிக்கு முதலில் சகரமும் இடையில் சகரமும் தகரமுமாகும். சித்தி வாசம் மாதம்.

11. ஹகாரம் மொழிக்குமுதலில் அகரமும், இடையிலும் கடையிலும் ககரமுமாகும். அரி அரன் மோகம் அகி.

12. க்ஷகாரம் மொழிக்குமுதலில் ஒருககரமும், இடையிலும்கடையிலும் இருககரமுமாகும் கனம் கீரம் பக்கம் மோக்கம்.

ஏழாமுயிர் இய்யும் இருவும்,ஐ வருக்கத்
திடையில் மூன்றும் அவ்வம் முதலும்,
எட்டே யவ்வும், முப்பது சயவும்,
மேலொன்று சடவும், இரண்டு சதவும்
மூன்றே அகவும், ஐந்திரு கவ்வும்,
ஆவீ றையும், ஈயீ றிகாமும் (147)

சில எழுத்துக்களை முதலாகவுடைய வட சொற்கள் தமிழில் வேறெழுத்துக்களை முதலிற் பெற்று வருதல்.

ர —ரங்கம் — அரங்கம்
ராமன் — இராமன்
ரோமம் — உரோமம்
ல—லாபம் — இலாபம்
லோபம் — உலோபம்
ய—யக்கன் — இயக்கன்

ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்,
லவ்விற் கிம்முத லிரண்டும், யவ்விற்
கிய்யும் மொழிமுத லாகிமுன் வருமே (148)

வடமொழிகளுள் இரண்டுமெய்கள் இணைந்து ஓரெழுத்துப்போல நடக்கும்போது வரும் எழுத்துக்கள்.

இ	முதல்	இடை
	சினேகம்	விக்கினம்
	தியாகம்	வாக்கியம்
	திரவியம்	வக்கிரம்
	கிலேசம்	சுக்கிலம்
உ	சுமார்த்தன்	பதுமம்
	துவசம்	பக்குவம்
அ		அரதநம்

தனிக்குறிலின் கீழ்நின்ற ரகாம் பின்னின்ற மெய்களோடு இணைந்து நிற்கும்போது உகரம் பெறும். அருக்கன் கருப்பம்.

நகரயகாரகரலகர வகரமகரங்களல்லாதமெய்களுக்கு முன்னின்ற மெய்கள் பெரும்பாலுங் கெடும். ஞானம் விஞ்ஞாபனம் தானம் பரிசம்.

மொழிக்கீற்றில் நிற்கும் ககரமுதலிய வல்லின மெய்கள் இரட்டித்து உகரம் பெறும். வாக்கு விராட்டு.

இணைந்தியல் காலை யரலக் கிகரமும்,
மவ்வக் குகரமும், நகரக் ககரமும்,
மிசைவரும் ரவ்வழி உவ்வு மாம்பிற. (149)

திரிபு கேடு விகாரங்களால் வருவன

ஸக்தி—சத்தி. சப்தம்—சத்தம்.
கக்ஷி—கட்சி
பர்வதம்—பருப்பதம்
காவ்யம்—காப்பியம்
ஆத்மா—ஆன்மா
கோகநதம்—கோகநகம்
தபநீயம்—தமனியம்
சம்பகம்—சண்பகம்
ரூபம்—உருவம், உருவு, உரு
தர்மம்—தன்மம்
அஸ்தம்—அத்தம். புஸ்தகம்—புத்தகம்
பத்மம்—பற்பம்
ஸ்தூலம்—தூலம்
ஆதித்யன்—ஆதித்தன்.

ஓரோர் விகுதி பெற்றுத் தமிழில் உயர்திணைப் பெயர்களாக வழங்கும் சில வடமொழிகள்.

வான்—குணவான்—தர்மவான்—பலவான்—பாக்கியவான்
மான்—புத்திமான்
காரி—சித்திரகாரி
சாலி—புத்திசாலி—பக்குவசாலி
வந்தன்—தனவந்தன்—திரவிய வந்தன்
வதி—குணவதி—புத்ரவதி—சௌந்தரியவதி
தாரி—விடதாரி
இ—ஞானி—கோபி
இஷ்டன்—தர்மிஷ்டன்—கோபிஷ்டன்

த த் தி த ம்.

குறிப்புச் சொற்களும் வினைச்சொற்களும் பிறவும் ஒரு பெயர்ச் சொல் தம்மே லேறிய பிரத்தியத்தையுடையவாய் வேறுபொருள் பயந்து நிற்பின் அவை தத்திதப் பெயர்களென்று அறிந்து உலகிற் கொப்ப முடிக்க.

ஆதித்தியம்—அதிதிக்குச் செய்யும் பூசை
ஆதித்தியன்—அதிதிமகன்
ஆரிடம்—இருடி சம்பந்தமானது

ஐந்திரம்—இந்திரன் செய்த வியாகரணம்
ஔஷதம்—ஓஷதிகளாலானது
காங்கேயன்—கங்கை புத்திரன்
கார்த்திகேயன்—கிருத்திகையின் புத்திரன்
குலீனன்—குலத்தில் விழுமியான்
கைவல்லியம்—கேவலத்தின் தன்மை
கௌசலை—கோசலையிற் பிறந்தாள்
கௌரவன்—குருவர்க்கத்தான்
சாகரம்—சகரன் மக்களால் தோண்டிய கடல்
செம்பியன்—சிபிவர்க்கத்தான்
சைலம்—சிலையாலாயமலை
சைவன்—சிவனைத் தொழுவோன்
சைனன்—சினக்கடவுளைத் தொழுவோன்
சௌமியன்—சோமன் மகன்
சௌரியம்—சூரன் தன்மை
ஜானகி—ஜனகன் புத்திரி
ஸ்மார்த்தர்—ஸ்ம்ருதி யொழுக்கங்களை அனுசரிப்பவர்
தாசரதி—தசரதன் புத்திரன்
தாட்சாயணி—தட்சன் புத்திரி
தார்த்தராட்டிரர்—திருதராட்டிரன் புதல்வர்
தானவர்—தனுவின் புத்திரர்
தைத்தியன்—திதியகன்
தைலம்—திலத்தி (எள்ளி)லிருந்து இறக்கப்படுவது
தௌவாரிகன்—துவாரத்தில் நிற்பவன்
தௌகித்திரன்—துத்திரி (புத்திரி)யின் புத்திரன்
நையாயிகன்—நியாய சாஸ்திர முணர்ந்தவன்
பாகவதன்—பகவத் பக்தியுள்ளவன்
பாகீரதி—பகீரதன் பெண்ணாகிய நதி
பாசுபதன்—பசுபதியைத் தெய்வமாக வுடையவன்
பாணினீயம்—பாணினி செய்த இலக்கணம்
பார்வதி—பர்வதராசன் புத்திரி
பாராசரியம்—பராசரர் செய்த நூல்
பாரம்பரியம்—பரம்பரையை ஒட்டிவருவது
பிராமணன்—பிரம்மஞானமுள்ளவன்
பைத்தியம்—பித்த சம்பந்தம்
பௌத்தன்—புத்தனை வழிபடுவோன்
பௌத்திரன்—புத்திரனுடைய புத்திரன்
பௌராணிகன்—புராணம் சொல்லுகிறவன்

பௌரோகிதன்—புரோகித வேலை செய்பவன்
மார்க்கண்டேயன்—மிருகண்டு முனிவருடைய புத்திரன்
ரௌத்திரம்—ருத்திர சம்பந்தம்
லௌகிகன்—லோக வழியில் நிற்பவன்
வைஷ்ணவன்—விஷ்ணுவைத் தொழுவோன்
வைதிகன்—வேதவழியில் நிற்பவன்
வையாகரணி—வியாகரணம் ஓதுவான்
வைரம்—வீரத்தின் தன்மை

உபசர்க்கம்.

அ—அக்கிரமம்—அநியாயம்—அநீதி—அசரீரி—அசுத்தம் — அசுசி — அப்பிரதக்ஷணம்.
அதி—அதிரசம்—அதிமதுரம்—அத்தியாவசியம்—அதிரதர்
அதோ—அதோகதி—அதோமுகம்—அதோவாயு
அநு—அநுகூலம்—அநுசன்—அநுகரணம்—அநுவாதம்—அநுபானம்—அநுபந்தம்
அந்—அநாசாரம் — அநந்தம்—அநர்த்தம் — அநேகம் — அநாவிருஷ்டி—அநந்யம்—அநங்கன்.
அப — அபசாரம்— அபசவ்வியம் — அபஜயம் — அபகீர்த்தி — அபக்கியாதி—அபவிர்த்தி
அபி—அபிவிர்த்தி—அபிமானம்—அபிமதம்—அபிநவம்
அவ—அவமதி—அவமானம்—அவலக்ஷணம்—அவகோலம்
ஆ—ஆகிருதி
உப—உபசாரம்—உபாங்கம்—உபநிதி—உபகரணம்—உபகாரம்—உபசாந்தி—உபபலம்—உபபுராணம்
உத்—உத்பவம்—உத்பத்தி
கு—குயுத்தி—குரூபம்—குதர்க்கம்—குக்கிராமம்—குத்ருஷ்டி
சத்—சர்ப்புத்திரர்—சர்க்குணர்—சற்பாத்திரம்—சற்குரு—சற்சங்கம்—சர்ச்சனன்—சற்புத்தி—சற்புருடன்
சம்—சம்பந்தம்—சம்பூரணம்—சம்பவம்—சம்போகம்
சு—சுகுணம்—சுபுத்தி—சுபக்ஷம்—சுவர்ணம்—சுமுகன்—சுமங்கலி—சுதினம்—சுசீலம்—சுகந்தம்
சுய—சுயாதீனம்—சுயபுத்தி—சுயகுணம்—சுயாதிபதி—சுயேச்சை
ஸ—ஸாவகாசம்—ஸாங்கம்—ஸாம்பசிவன்
ஸ்வா (சுவ)—ஸ்வதந்தரம்—ஸ்வதேசம்—ஸ்வாதீனம்—ஸ்வபுத்தி—சுவானுபவம்—சுவாத்தியாயம்
ஸஹ—ஸஹவாசம்—ஸஹோதரன்—ஸஹகமனம்

துர்—துர்க்குணம்—துர்ப்புத்தி—துராலோசனை—துரப்பியாசம்—துராக்ருதம்—துன்மார்க்கன்
நி—நிசாரம்—நிவிர்த்தி—நிக்கிரகம்—நிச்சிந்தை—நிவர்த்தி
நிர்—நிர்மலம்—நிர்மூலம்—நிராதாரம்—நிர்மானுஷ்யம்-நிர்த்தூளி—நிரந்தரம்—நிரவதி.
நிஷ்—நிஷ்கபடி—நிஷ்களங்கம்—நிஷ்பலம்—நிஷ்கம்பம்—நிஷ்களம்—நிஷ்காரணம்
பர—பரமண்டலம்—பரதேசி—பரபக்ஷம்—பராதீனம்—பரசொத்து
பரி—பரிசுத்தம்—பரிச்சேதம்—பரிவிருத்தி—பரித்தியாகம்—பரியக்குவம்—பரிபூரணம்
பிர—பிரதேசம்—பிரகரணம்—பிரபலம்
பிரதி—பிரத்தியட்சம்—பிரதிகூலம்—பிரதிநிதி—பிரத்தியேகம் — பிரத்தியுத்தரம்—பிரதிவாதி
புனர்—புனர்விவாஹம்—புனர்விசாரணை—புனர்பாகம்—புனராகமனம்
வி—விபக்ஷன்—விமலம்—விராகம்—விநாசம்

ஆண்பால் பெண்பால் காட்டும் வடமொழிகள்.

ஆண் பெண்	ஆண் பெண்
பிதாமகன்—பிதாமகி	ராஜன்—ராஜஞ்—ராணி
மாதாமகன்—மாதாமகி	சக்ரவர்த்தி—சக்ரவர்த்தினி
பிதா—மாதா	உத்தமன்—உத்தமி
புத்திரன்—புத்திரி	குணவான்—குணவதி
தநயன்—தநயை	நாயகன்—நாயகி
பௌத்திரன்—பௌத்திரி	ஈசுவரன்—ஈசுவரி
பிரபௌத்திரன்—பிரபௌத்திரி	மித்திரன்—மித்திரை
தௌஹித்திரன்—தௌஹித்திரி	சிநேகன்—சிநேகை
தாஸன்—தாஸ்யை—தாஸி (தாதி)	சண்டாளன்—சண்டாளி
தேவன்—தேவி	ராக்ஷஸன்—ராக்ஷஸி
வித்துவான்—வித்துவாம்சை	ஸுந்தரன்—ஸுந்தரி
உபாத்யாயன்—உபாத்யாயை	கனிஷ்டன்—கனிஷ்டை
பிராமணன்—பிராமணி	துஷ்டன்—துஷ்டை
சிவன்—சிவை	ஸ்ரீமான்—ஸ்ரீமதி
இந்திரன்—இந்திராணி	பாலன்—பாலிகை
	பைரவன்—பைரவி

உயிர் எழுத்து.			மெய் எழுத்து.					
ஆரியம்.	தமிழ்.	தெலுங்கு.	ஆரியம்.	தமிழ்.	தெலுங்கு.	ஆரியம்.	தமிழ்.	தெலுங்கு.
𑌅	அ	అ	𑌕	க	క	𑌨	ந	న
𑌆	ஆ	ఆ	𑌖	—	ఖ	𑌪	ப	ప
𑌇	இ	ఇ	𑌗	—	గ	𑌫	—	ఫ
𑌈	ஈ	ఈ	𑌘	—	ఘ	𑌬	—	బ
𑌉	உ	ఉ	𑌙	ங	ఙ	𑌭	—	భ
𑌊	ஊ	ఊ	𑌚	ச	చ	𑌮	ம	మ
𑌋	—	ఋ	𑌛	—	ఛ	𑌯	ய	య
𑍠	—	ౠ	𑌜	—	జ	𑌰	ர	ర
𑌌	—	ఌ	𑌝	—	ఝ	𑌲	ல	ల
𑍡	—	ౡ	𑌞	ஞ	ఞ	𑌵	வ	వ
—	எ	ఎ	𑌟	ட	ట	𑌶	—	శ
𑌏	ஏ	ఏ	𑌠	—	ఠ	𑌷	—	ష
𑌐	ஐ	ఐ	𑌡	—	డ	𑌸	—	స
—	ஒ	ఒ	𑌢	—	ఢ	𑌹	—	హ
𑌓	ஓ	ఓ	𑌣	ண	ణ	—	ழ	—
𑌔	ஔ	ఔ	𑌤	த	త	𑌳	ள	ళ
𑌂	—	ం	𑌥	—	థ	—	ற	ఱ
𑌃	—	ః	𑌦	—	ద	—	ன	—
—	ஃ	—	𑌧	—	ధ	𑌕𑍍𑌷	—	క్ష

	ஆரிய எழுத்தின் எண்.	தமிழில் திரியும் எழுத்து
உயிர்.	௨	ஐ
	௪	இ
	௭	இ, இரு, ,,
மெய்.	௨	க
	௩	க
	௪	க
	௭	ச
	௮	ச, ய
	௯	ச
	௧௨	ட
	௧௩	ட
	௧௪	ட
	௧௭	த
	௧௮	த
	௧௯	த
	௨௨	ப
	௨௩	ப
	௨௪	ப
	௩௰	ச, ய

	ஆரிய எழுத்தின் எண்.	தமிழில் திரியும் எழுத்து
மெய்.	௩௧	ச, ட
	௩௨	ச, த
	௩௩	அ, க
	௩௫	க்க

முதலில் தோன்றல்.	ய	இ
	ர	அ, இ, உ
	ல	இ, உ

இடையில் தோன்றல்.	ந	அ
	ம	உ
	ய, ர, ல	இ
	வ	உ

அநுபந்தம்.

தொல்காப்பியம்.

மரபு வழுவமைதி.

தகுதியும் வழக்கும் தழீஇயின வொழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே.

அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்.

ஆகுபெயர்.

முதலிற் கூறும் சினையறி கிளவியும்
சினையிற் கூறும் முதலறி கிளவியும்
பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்
இயன்றது மொழிதலும் இருபெயரொட்டும்
வினைமுத லுரைக்கும் கிளவியொடு தொகைஇ
அனையமர பினவே ஆகுபெயர்க் கிளவி.

அவைதாம்
தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலும்
ஒப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டலும்
அப்பண்பினவே நுவலுங்காலை.

அளவும் நிறையும் அவற்றொடு கொள்வழி
உளவென மொழிப உணர்ந்திசி னோரே.

அன்மொழித் தொகைப்பெயர்.

பண்புதொகவரூஉங் கிளவியானும்
உம்மைதொக்க பெயர் வயினானும்
வேற்றுமை தொக்க பெயர்வயினானும்
ஈற்றுநின்றியலும் அன்மொழித் தொகையே.

வீரசோழியம் (தத்திதப் படலம்)

முந்திய வர்க்கங்க ளைந்தினும் முன்னொற்றின் மூன்றடங்கும்
பந்தியிற் றெய்வ மொழிமுதல் யவ்வேல் பகருமிய்யாம்
வந்திடும் லவ்விற் குகரமுமாகும் வரில்ரகரம்
அந்த விரண்டொ டகாமு மாமென்பர் ஆயிழையே (6)

முதலொற் றிரட்டிக்கும்முப்பத்தொன்றெய்திடின் முன்பினிஃ
திதமிக்க வைந்தாமெய் ஆகுந்தனியே இதனயற்குப்
பதமிக்க சவ்வரும் எண்ணுன்கு தவ்வாம். முப் பானுறுமுன்
றதனுக்கு லோபமும் யவ்வொடுகவ்வும் அறைவர்களே. (7)

கூட்டெழுத்தின்பின் யரலக்கள் தோன்றிடின் கூட்டிடையே
ஓட்டெழுத்தாகப் பெறுமொ ரிகாரம் வவ்வுக் கொருவ்வாம்
மீட்டெழுத் துத்தமிழல்லன போம். வேறு தேயச்சொல்லின்
மாட்டெழுத்தும் மிதனுலறி மற்றை விகாரத்தினே. (8)

தொடர் மொழி.

பதங்கள் பொருந்துந் தொடர்ச்சி.

தழுவுதொடர்.—பொருட் பொருத்தமுறத் தழுவிய தொடர்.

வேற்றுமை யைம்முத லாறும். அல்வழி
தொழில்பண் புவமை உம்மை அன்மொழி
எழுவாய் விளிஈ ரெச்சமுற் றிடையுரி
தழுவு தொடரடுக் கெனவீ ரேழே. (152)

தொகாநிலைத் தொடர் மொழி.

முற்றீ ரெச்சம் எழுவாய் விளிப்பொருள்
ஆறுரு பிடையுரி அடுக்கிவை தொகாநிலை. (374)

தொகைநிலைத் தொடர் மொழி.

பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளின் அவற்றி னுருபிடை
ஒழிய விரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழிபோல் நடப்பன தோகைநிலைத் தொடர்ச்சொல்.
(361)

வேற்றுமை வினைபண் புவமை உம்மை
அன்மொழி யெனவத் தொகையா றுகும். (362)

வேற்றுமைத் தொகை.

இரண்டு முதலாம் இடையா றுருபும்
வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே. (363)

வினைத்தொகை.

காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை. (364)

காலம் கரந்த பெயரெச்சம்—காலம்பற்றிப் புடைபெயரும் வினை யுருபாகிய தம்மிறுதிகள் தொக்க பெயரெச்ச வினைகள்.

பண்புத்தொகை.

பண்பை விளக்கு மொழிதொக் கனவும்
ஒருபொருட் கிருபெயர் வந்தவும் குணத்தொகை. (365)

பண்பை விளக்கும் மொழி—பண்போடு பண்பிக்கு உளதாகிய ஒற்றுமை நயத்தை விளக்குதற்கு வரும் ஆகிய என்னும் பண்புருபு.

உவமத்தொகை.

உவம வுருபில துவமத் தொகையே. (366)

உம்மைத்தொகை.

எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்
எனுநான் களவையுள் உம்மில தத்தொகை. (368)

அன்மொழித்தொகை.

ஐந்தொகை மொழிமேற் பிறதொகல் அன்மொழி. (369)

ஐந்தொகைமொழிமேல்—வேற்றுமைத் தொகை முதலிய ஐவகைத தொகைநிலைத் தொடர்மொழிகளுக்கும் புறத்தே. பிறதொகல்—அவை யல்லாத பிறமொழிகளாகிய உருபுகள் தொக்குவருவன.

தொகைநிலைத் தொடர்மொழிகள் பலபொருள் படுதல்.

தொக்குழி மயங்குந இரண்டு முதலேழ்
எல்லைப் பொருளின் மயங்கு மென்ப (373)

தழாத்தொடர். — நிலைமொழியானது வருமொழியைப் பொருட் பொருத்தமுறத் தழுவாத தொடர்.

இடைப்பிறவரல்.

உருபு முற்றீ ரெச்சங் கொள்ளும்
பெயர்வினை இடைப்பிற வரலுமாம் ஏற்பன. (356)

தொடர் மொழி.

தொகாநிலை. தொகைநிலை.

வேற்றுமை.

வேற்றுமைத்தொகா நிலைத்தொடர்.	வேற்றுமைத்தொகை நிலைத்தொடர்.

அல்வழி.

வழுவு தொடர்.		
	எழுவாய்த்தொடர்.	வினைத்தொகை.
	விளித்தொடர்.	பண்புத்தொகை.
	வினைமுற்றுத்தொடர்.	உவமைத்தொகை.
	பெயரெச்சத்தொடர்.	உம்மைத்தொகை.
	வினையெச்சத்தொடர்.	அன்மொழித்தொகை.
	இடைச்சொற்றொடர்.	
	உரிச்சொற்றொடர்.	
	அடுக்குத்தொடர்.	

புணர்ச்சி.

புணர்ச்சி யிலக்கணத்தில் அறியத்தக்க எழுத்திலக்கணம்.

உயிர்மெய்.

ஆய்தம்.

குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே. (90)

குற்றியலிகரம்.

யகரம் வரக்குற ளுத்திரி இகரமும்
அசைச்சொன் மியாவின் இகரமும் குறிய. (93)

குற்றியலுகரம்.

நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலியிடைத்
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகாம்
அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே (94)

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்.

பன்னீ ருயிரும் கசதந பமவய
ஞ ங வீ ரைந்துயிர் மெய்யும் மொழிமுதல். (102)

உ ஊ ஒ ஓ வலவொடு வம்முதல். (103)

அ ஆ உ ஊ ஓ ஔ யம்முதல். (104)

அ ஆ எ ஒவ்வோ டாகு ஞம்முதல். (105)

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
வ	வா	வி	வீ	—	—	வெ	வே	வை	—	—	வௌ
ய	யா	—	—	யு	யூ	—	—	—	—	யோ	யௌ
ஞ	ஞா	—	—	—	—	ஞெ	—	—	ஞொ	—	—
ங	—	—	—	—	—	—	—	—	—	—	—

மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள்.

ஆவி ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய்
சாயு முகரம் நாலாறும் ஈறே. (107)

புணர்ச்சி (இன்ன தென்பது.)

மெய்யுயிர் முதலீ றாமிரு பதங்களும்,
தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்

பொருளில் பொருந்துழி, நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே. (151)

இயல்புப் புணர்ச்சி.

விகார மனைத்து மேவல தியல்பே. (153)

விகாரப் புணர்ச்சி.

தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்று மொழிமூ விடத்து மாகும். (154)

செய்யுள் விகாரம்.

வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி (155)

ஒருமொழி மூவழிக் குறைதலும் அனைத்தே. (156)

புணர்ச்சி.

I. உயிரீற்றின் முன் உயிர்.

அ

பல + அணி = பலவணி
ஆன்ற + அறிவு = ஆன்றவறிவு
வற்றிய + ஓலை = வற்றியவோலை
வந்த + இடம் = வந்தவிடம்
இள + அரசு = இளவரசு
தூய + உள்ளம் = தூயவுள்ளம்
நில + உப்பு = நிலவுப்பு.

ஆ

வினா + எழுத்து = வினவெழுத்து
பலா + இலை = பலாவிலை
ஆ + உரிஞ்சி = ஆவுரிஞ்சி
விலா + எலும்பு = விலாவெலும்பு
பா + இனம் = பாவினம்
கூடா + ஒழுக்கம் = கூடாவொழுக்கம்
புரு + அரசு = புருவரசு.

இ

மணி + ஓசை = மணியோசை
ஏணி + ஏற்றம் = ஏணியேற்றம்
பிடி + அரிசி = பிடியரிசி
தடி + அடி = தடியடி
பொதி + எருது = பொதியெருது
ஈட்டி + எழுபது = ஈட்டியெழுபது

இ

எறி + ஈட்டி = எறியீட்டி
புளி + ஏப்பம் = புளியேப்பம்

ஈ

தீ + ஒழுக்கம் = தீ யொழுக்கம்
ஈ + ஓட்டி = ஈயோட்டி
தீ + எச்சம் = தீ யெச்சம்
சீ + எனல் = சீயெனல்

உ	ஊ
திரு + அடி = திருவடி	பூ + அரசு = பூவரசு
திரு + உள்ளம் = திருவுள்ளம்	பூ + ஆடை = பூவாடை
திரு + அரங்கம் = திருவரங்கம்	பூ + இதழ் = பூவிதழ்
திரு + ஆனைக்கா = திருவானைக்கா	பூ + அணை = பூவணை
நடு + எலும்பு = நடுவெலும்பு	பூ + உலகு = பூவுலகு
அது + ஏ = அதுவே	
இது + ஓ = இதுவோ	

ஏ

அவனே + இவன் = அவனேயிவன்
இவனே + அரசன் = இவனே யரசன்.
சே + அடி = சேவடி
ஏ + எறிந்தான் = ஏவெறிந்தான்
சே + உழுதது = சேவுழுதது.

ஐ

கை + எழுத்து = கையெழுத்து	தலை + ஈற்று = தலையீற்று
வாழை + இலை = வாழையிலை	சிலை + எழுபது = சிலையெழுபது
தலை + அணை = தலையணை	யானை + ஏற்றம் = யானையேற்றம்.
வினை + இயல் = வினையியல்	

ஓ

கோ + இயல் = கோவியல்
நோ + எடுத்தல் = நோவெடுத்தல்
எவனோ + ஒருவன் = எவனோ வொருவன்
போ + என்றான் = போவென்றான்
ஐயோ + இறந்தான் = ஐயோ விறந்தான்.

மேல்காட்டிய உதாரணங்களை ஆராய்ந்துபார்க்குமிடத்தில் இ-ஈ-ஐ என்கிற உயிர்களின்முன் உயிர் வந்தால் இடையில் ய் தோன்றுவதும், மற்றவைகளின் இடையில் வ் தோன்றுவதும், இடைச்சொல் ஏகாரத்துக்குமுன் ய் என்பதும் மற்ற ஏகாரங்களின்முன் வ் என்பதும் தோன்றுவதும் விளக்கமாகும்.

நிலைமொழியீற்றிலும் வருமொழி முதலிலும் நின்ற உயிர்களை உடம்படுத்து (உடன்படுத்து)தலால் இவை உடம்படுமெய் என வழங்கப் பெறும்.

இஈ ஐவழி யவ்வும், ஏனை
உயிர்வழி வவ்வும், ஏமுன் இவ் விருமையும்,
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும். (162)

சுட்டுவினு முன்உயிர்.

அ + அணி = அவ்வணி
அ + எருது = அவ்வெருது
இ + இடம் = இவ்விடம்
இ + உலகம் = இவ்வுலகம்
உ + இடம் = உவ்விடம்
எ + ஊர் = எவ்வூர்
எ + இரண்டு = எவ்விரண்டு.

சுட்டெழுத்துக்களுக்கு முன்னும் எகா வினுவெழுத்துக்களுக்கு முன்னும் உயிர் வந்த விடத்து வ் தோன்றுதல் மேற்காட்டிய உதாரணங்களால் தெளிவாகும்.

எகரவினு முச்சுட்டின முன்னர்
உயிரும் (யகரமும்) எய்தின் வவ்வும். (193)

குற்றிய லுகரத்தின்முன் உயிர்.

வரகு + அரிசி = வரகரிசி
கடுகு + அளவு = கடுகளவு
கருக்கு + அரிவாள் = கருக்கரிவாள்
கருத்து + உரை = கருத்துரை
குறிப்பு + எச்சம் = குறிப்பெச்சம்
பொழிப்பு + உரை = பொழிப்புரை
கற்பு + இலக்கணம் = கற்பிலக்கணம்.
குரங்கு + ஆட்டம் = குரங்காட்டம்
பஞ்சு + அணை = பஞ்சணை
நெஞ்சு + எலும்பு = நெஞ்செலும்பு
குண்டு + உருட்டு = குண்டுருட்டு
குண்டு + ஊசி = குண்டூசி
விருந்து + ஓம்பல் = விருந்தோம்பல்
ஐந்து + ஊர் = ஐந்தூர்
ஐந்து + எழுத்து = ஐந்தெழுத்து
வரம்பு + அழிதல் = வரம்பழிதல்
மூன்று + அரை = மூன்றரை
ஓய்வு + இன்மை = ஓய்வின்மை
சார்பு + எழுத்து = சார்பெழுத்து
ஆறு + அரை = ஆறரை
நாகு + அரிது = நாகரிது
எஃகு + அருமை = எஃகருமை.

முற்றியலுகரம்.

கதவு + அழகிது = கதவழகிது
அரவு + அணை = அரவணை
அது + ஐ = அதை
இழவு + ஓலை = இழவோலை
நிலவு + ஒளி = நிலவொளி

இவ்வுதாரணங்களை நோக்குமிடத்துக் குற்றியலுகரத்துக்கு முன்னும் சில முற்றியலுகரத்துக்குமுன்னும் உயிர் வரும்போது குற்றியலுகர முற்றியலுகர வீறுகள் கெடுவது தெரியவரும்.

உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்
(யவ்வரின் இய்யாம்) முற்றுமற் றொரோவழி (164)

டகர றகரங்களின் மேலேறிய நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.

காடு + அரண் = காட்டரண்
வாடு + ஆடு = வாட்டாடு
காடு + ஆறு = காட்டாறு
குருடு + அடி = குருட்டடி
நாடு + ஆண்மை = நாட்டாண்மை
கிணறு + ஓரம் = கிணற்றோரம்
நூறு + ஐந்து = நூற்றைந்து
முயிறு + எறும்பு = முயிற்றெறும்பு
ஆறு + ஒழுக்கு = ஆற்றொழுக்கு
வயிறு + எரிச்சல் = வயிற்றெரிச்சல்

இவ்வுதாரணங்களில் டகரமும் றகரமும் இரட்டித்து வருவது தெரிகின்றது.

நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுள்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே (183)

மையீற்றுப் பண்புப்பெயர் முன் உயிர்.

பசுமை + ஓலை = பச்சோலை
பசுமை + ஓந்தி = பச்சோந்தி
வெண்மை + ஆடு = வெள்ளாடு
வெண்மை + உள்ளி = வெள்ளுள்ளி
வெறுமை + இலை = வெற்றிலை
புதுமை + உரை = புத்துரை
நெடுமை + எழுத்து = நெட்டெழுத்து
குறுமை + எழுத்து = குற்றெழுத்து
குறுமை + ஏவல் = குற்றேவல்
குறுமை + உயிர் = குற்றுயிர்
சிறுமை + ஆடை = சிற்றாடை
சிறுமை + எறும்பு = சிற்றெறும்பு
சிறுமை + உளி = சிற்றுளி.

வருமொழி முதலில் உயிர் வந்தபோது, மையீற்றுப் பண்புப்பெயர்கள் ஈறு கெட்டு நடுநின்ற உகரமுங்கெட்டு உகரங்கெட நின்ற தம்மொற்றிரட்டுவன வாகின்றன.

ஈறுபோதல் (இடையுகரம் இய்யாதல்
ஆதிநீடல் அடிஅகரம் ஐயாதல்)
தன்னொற்றிரட்டல் (முன்னின்ற மெய்திரிதல்
இனமிகல் இனையவும்) பண்பிற் கியல்பே (136)

II. மெய்யீற்றின் முன் உயிர்.

உயிர் + எழுத்து = உயிரெழுத்து.
நீர் + ஓட்டம் = நீரோட்டம்
பால் + ஆறு = பாலாறு
மயில் + இனம் = மயிலினம்
சரண் + அடைதல் = சரணடைதல்
குலம் + இலான் = குலமிலான்
புரம் + எரித்தோன் = புரமெரித்தோன்
உருள் + அரிசி = உருளரிசி
தமிழ் + எழுத்து = தமிழெழுத்து
பொருள் + இலக்கணம் = பொருளிலக்கணம்
கான் + அகம் = கானகம்
தேன் + ஈ = தேனீ.

இவ்வுதாரணங்களில் நிலைமொழியீற்று மெய்யின்மேல் வருமொழி முதலிலுள்ள உயிர் ஒன்றுபட்டு இணங்கி நிற்பது காணப்படும்.

உடன்மேல் உயிர்வந் தொன்றுவ தியல்பே (204)

தனிக்குறிலின் ஒற்றுமுன் உயிர்.

தண் + அளி = தண்ணளி
விண் + உலகம் = விண்ணுலகம்
மண் + ஆசை = மண்ணாசை
நம் + ஆழ்வார் = நம்மாழ்வார்
மெய் + எழுத்து = மெய்யெழுத்து
பொய் + உறக்கம் = பொய்யுறக்கம்
கல் + எறி = கல்லெறி
புள் + அரசு = புள்ளரசு
முள் + எலும்பு = முள்ளெலும்பு
மன் + உயிர் = மன்னுயிர்.

வருமொழிமுதலில் உயிர் வந்த விடத்து, தனிக்குறிலும் ஒற்றுமாக வந்த நிலைமொழியின் ஒற்று இரட்டிவருதல் காண்க.

தனிக்குறில் முன்னொற் றுயிர்வரின் இரட்டும். (205)

மகரவீறு.

மரம் + அடி = மரவடி
நிலம் + அறை = நிலவறை
மரம் + ஆணி = மரவாணி
குலம் + ஒழுக்கம் = குலவொழுக்கம்
வட்டம் + ஆழி = வட்டவாழி
பவளம் + இதழ் = பவளவிதழ்

உயிரை முதலாகவுடைய வருமொழி வந்தவிடத்து, மகரவீற்று நிலைமொழிகளின் மவ்வீறு கெட உடம்படுமெய் பெற்று வருகின்றன.

மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
(வன்மைக் கினமாத் திரிபவும்) ஆகும், (219)

III. உயிரீற்றின்முன் மெய்.

உயிர்முன் வலி.

அ. சுருங்க + சொல்லல் = சுருங்கச் சொல்லல்
உயர + பறத்தல் = உயரப்பறத்தல்
விளங்க + காட்டல் = விளங்கக்காட்டல்
வெற்றென + தொடுத்தல் = வெற்றெனத் தொடுத்தல்.

ஆ. நா + தழும்பு = நாத்தழும்பு
பலா + காய் = பலாக்காய்
துலா + கோல் = துலாக்கோல்
பலா + பழம் = பலாப்பழம்
வினா + பெயர் = வினாப்பெயர்
பலா + சுளை = பலாச்சுளை

இ. வெள்ளி + கிழமை = வெள்ளிக்கிழமை
பூச்சி + கடி = பூச்சிக்கடி
வழி + செலவு = வழிச்செலவு
பழி + சொல் = பழிச்சொல்
வழி + துணை = வழித்துணை
மாசி + திங்கள் = மாசித்திங்கள்
வழி + போக்கர் = வழிப்போக்கர்
அத்தி + பூ = அத்திப்பூ
கத்தி + பிடி = கத்திப்பிடி

ஈ. தீ + கடன் = தீக்கடன்
தீ + சட்டி = தீச்சட்டி
சீ + பால் = சீப்பால்
தீ + பொறி = தீப்பொறி.

உ. கொக்கு + கால் = கொக்குக்கால்
எடுத்து + காட்டல் = எடுத்துக்காட்டல்
பேச்சு + துணை = பேச்சுத்துணை
உப்பு + தண்ணீர் = உப்புத் தண்ணீர்
குறுக்கு + சட்டம் = குறுக்குச் சட்டம்
நெருப்பு + பொறி = நெருப்புப் பொறி
கன்று + குட்டி = கன்றுக்குட்டி.

ஐ. கை + கூலி = கைக்கூலி
கை + சாத்து = கைச்சாத்து
திசை + சொல் = திசைச்சொல்
இடை + சேரி = இடைச்சேரி
வாழை + தண்டு = வாழைத்தண்டு
சாரை + பாம்பு = சாரைப்பாம்பு.
கொட்டை + பாக்கு = கொட்டைப்பாக்கு
வாழை + குலை = வாழைக்குலை
பெட்டை + கோழி = பெட்டைக்கோழி
குதிரை + பந்தயம் = குதிரைப் பந்தயம்.

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
கசதபமிகும் (விதவாதன மன்னே) (165)

தனி ஐ.

கை + நீட்சி = கைந்நீட்சி
கை + முதல் = கைம்முதல்
கை + நொடி = கைந்நொடி
கை + நலம் = கைந்நலம்
ஐ + நூறு = ஐந்நூறு
ஐ + முகன் = ஐம்முகன்

(எண் மூவெழுத்............ளியல்பும்.

குறில்வழியத்) தனிஐ(ந் தொது)முன்மெலி
மிகலுமாம் (158)

சுட்டு வினா.

இ + திறம் = இத்திறம்
அ + நெறி = அந்நெறி
அ + வரி = அவ்வரி
அ + மரம் = அம்மரம்
அ + புறம் = அப்புறம்
எ + மலை = எம்மலை
எ + வழி = எவ்வழி
எ + பொருள் = எப்பொருள்.

சுட்டுக்களின் முன்னும் எகரவினாவின்முன்னும் எந்த மெய் வருகிறதோ அந்தமெய் இரட்டும்.

எகரவினு முச்சுட்டின் முன்னர்
(உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்)
பிறவரின் அவையும் (தூக்கிற்சுட்டு
நீளின்யகரமும்) தோன்றுதல் நெறியே (163)

சிலமரப் பெயர்களின் ஈற்றுயிர்முன் வலி.

களா + கனி = களாங்கனி
விளா + காய் = விளாங்காய்
காயா + பூ = காயாம்பூ
சே + கன்று = சேங்கன்று
மா + கனி = மாங்கனி
மா + பழம் = மாம்பழம்
மா + துளிர் = மாந்துளிர்.

சில மரப்பெயர்களின் முன்னே வல்லெழுத்து வந்தால் அவற்றிற் கினமாகிய மெல்லெழுத்து மிகுதல் இவ்வுதாரணங்களால் அறியப்படும்.

மரப்பெயர் முன்னர் இனமெல்லெழுத்து
வரப்பெறு னவும்உள வேற்றுமை வழியே (166)

சுவைப்புளிப் பெயர்முன் வலி.

புளி + கறி = புளிங்கறி
புளி + சோறு = புளிஞ்சோறு
புளி + தயிர் = புளிந்தயிர்
புளி + பாளிதம் = புளிம்பாளிதம்

சுவைப்புளி முன்னின மென்மையுந் தோன்றும் (175)

பூ + குழல் = பூங்குழல்
பூ + கொடி = பூங்கொடி
பூ + கொத்து = பூங்கொத்து
பூ + சோலை = பூஞ்சோலை
பூ + தோட்டம் = பூந்தோட்டம்
பூ + பந்தல் = பூம்பந்தல்
பூ + பனை = பூம்பனை
பூ + பாளை = பூம்பாளை

பூ என்கிற பெயர்முன் வல்லினம் வந்தால் அதற்கினமாகிய மெல்லினம் வருகின்றது.

பூப்பெயர்முன் இனமென்மையுந் தோன்றும் (200)

கருமை + குதிரை = கருங்குதிரை
கருமை + குரங்கு = கருங்குரங்கு
கருமை + குவளை = கருங்குவளை
கருமை + சீரகம் = கருஞ்சீரகம்
குறுமை + கோல் = குறுங்கோல்
குறுமை + தடி = குறுந்தடி
குறுமை + சிரிப்பு = குறுஞ்சிரிப்பு
கொடுமை + கோல் = கொடுங்கோல்
செம்மை + தாமரை = செந்தாமரை
செம்மை + தாள் = செந்தாள்
செழுமை + கமலம் = செழுங்கமலம்
நெடுமை + காலம் = நெடுங்காலம்
நெடுமை + சுவர் = நெடுஞ்சுவர்
நெடுமை + பொழுது = நெடும்பொழுது
பசுமை + புல் = பசும்புல்
பெருமை + செல்வம் = பெருஞ்செல்வம்

இவ்வுதாரணங்களில் ஈறுகெட்டு இனமிகுதல் காண்க. நன்னூல் 136 சூ. பார்க்க.

செம்மை + ஞாயிறு = செஞ்ஞாயிறு
செம்மை + நெல் = செந்நெல்
வெம்மை + நீர் = வெந்நீர்

டகர றகரங்களின் மேலேறிய நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.

ஈறு + மெய் = ஈற்று மெய்
காடு + மனிதன் = காட்டுமனிதன்
மாடு + வண்டி = மாட்டுவண்டி
மேடு + நிலம் = மேட்டுநிலம்
வீடு + மணியம் = வீட்டுமணியம்
வீடு + வாடகை = வீட்டுவாடகை
ஆடு + கால் = ஆட்டுக்கால்
கோடு + பூ = கோட்டுப்பூ
வீடு + கொல்லை = வீட்டுக்கொல்லை.
ஏறு + பனை = ஏற்றுப்பனை
எருது + மாடு = எருத்துமாடு
குருடு + கண் = குருட்டுக்கண்
செவிடு + பிள்ளை = செவிட்டுப்பிள்ளை
முரடு + குணம் = முரட்டுக் குணம்
ஆறு + கரை = ஆற்றங்கரை
ஆறு + கால் = ஆற்றங்கால்
நாறு + கால் = நாற்றங்கால்

நெடிலோடுயிர்த் தொடர்க் குற்றுகரங்களுள்
டறவொற்றிரட்டும் வேற்றுமை மிகவே (183)

மென்றொடர்க் குற்றியலுகரவீறு.

இரும்பு + பாரை = இருப்புப்பாரை
கரும்பு + கட்டி = கருப்புக்கட்டி
கரும்பு + வில் = கருப்புவில்
நஞ்சு + மரம் = நச்சுமரம்
நஞ்சு + மருந்து = நச்சுமருந்து
செம்பு + பட்டயம் = செப்புப்பட்டயம்
இரும்பு + முள் = இருப்புமுள்
செம்பு + பாளம் = செப்புப்பாளம்
மருந்து + பை = மருத்துப்பை
மருந்து + மரம் = மருத்துமாம்
ஒன்று + மாடு = ஒற்றைமாடு
இரண்டு + பாய்ச்சல் = இரட்டைப் பாய்ச்சல்

இவைகளில் மென்றொடர்கள் வன்றொடராதல் காண்க.

மென்றொடர் மொழியுள் சிலவேற்றுமையில்
தம்பின வன்றொடர் ஆகாமன்னே (184)

IV. மெய்யீற்றின்முன் மெய்

ணனமுன் வல்லினம்.

வேற்றுமை	அல்வழி
மண் + குடம் = மட்குடம்	மண்குறிது
மண் + சாடி = மட்சாடி	மண்சிறிது
மண் + தூண் = மட்டூண்	மண்டீது
மண் + பானை + மட்பானை	மண்பெரிது
பொன் + குடம் = பொற்குடம்	பொன்குறிது
பொன் + சாடி = பொற்சாடி	பொன் சிறிது
பொன் + தூண் = பொற்றூண்	பொன்றீது
பொன் + பானை = பொற்பானை	பொன் பெரிது

ணனமுன் மெல்லினம் இடையினம்.

மண்மாட்சி	பொன்மாட்சி
மண்ஞாற்சி	பொன்ஞாற்சி
மண்யாப்பு	பொன்யாப்பு
மண்வன்மை	பொன்வன்மை

ணன வல்லினம்வரட் டறவும் பிறவரின்
இயல்புமாகும் வேற்றுமைக் கல்வழிக்
கனைத்துமெய் வரினும் இயல்பாகும்மே (209)

ணனமுன் நகரம்.

அல்வழி	வேற்றுமை
தூண் + நன்று = தூணன்று	தூணன்மை
அரண் + நன்று — அரணன்று	அரணன்மை
வான் + நன்று = வானன்று	வானன்மை
அரசன் + நல்லன் = அரசனல்லன்	அரசனன்மை

குறிலணைவில்லா ணனக்கள் வந்த
நகரம் திரிந்துழி நண்ணும் கேடே (210)

னணமுன் தகரநகரம்.

பொன் + தீது = பொன்றீது
பொன் + நன்று = பொன்னன்று
மண் + தீது = மண்டீது
மண் + நன்று = மண்ணன்று

னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகும் தநக்கள் ஆயுங்காலே (237)

மகரவீற்றின்முன் நாற்கணம்.

மரம் + அடி = மரவடி
மரம் + கட்டை = மரக்கட்டை
நிலம் + கரி = நிலக்கரி
அறம் + சாலை = அறச்சாலை
நிலம் + துளசி = நிலத்துளசி
குலம் + பகை = குலப்பகை
வலம் + பக்கம் = வலப்பக்கம்.

மனம் + கரைதல் = மனங்கரைதல்
மனம் + சலித்தல் = மனஞ்சலித்தல்
உண்ணும் + சோறு = உண்ணுஞ்சோறு
மனம் + திருத்தல் = மனந்திருந்தல்

மரம் + நார் = மரநார்
மரம் + நீண்டது = மரநீண்டது
வட்டம் + நேமி = வட்டநேமி
வட்டம் + வடிவம் = வட்ட வடிவம்
பவளம் + வாய் = பவளவாய்
மரம் + வேர் = மரவேர்
மரம் + வேலி = மரவேலி

மவ்வீ றொற்றொழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவு மாகும். (219)

யகரமுன் வலி.	ரகரமுன்வலி.
நெய் + குடம் = நெய்க்குடம்	ஊர் + குருவி = ஊர்க்குருவி
பேய் + கரும்பு = பேய்க்கரும்பு	நீர் + குடம் = நீர்க்குடம்
நெய் + சிக்கு = நெய்ச்சிக்கு	நீர் + சால் = நீர்ச்சால்
பேய் + சுரை = பேய்ச்சுரை	நீர் + சுழி = நீர்ச்சுழி

யகரமுன் வலி.	ரகரமுன் வலி.
நெய் + திரி = நெய்த்திரி	தேர் + தட்டு = தேர்த்தட்டு
பொய் + தலை = பொய்த்தலை	ஏர் + தொழில் = ஏர்த்தொழில்
பொய் + பத்திரம் = பொய்ப்பத்திரம்	ஊர் + பகை = ஊர்ப்பகை
தாய் + பால் = தாய்ப்பால்	ஏர் + பூட்டு = ஏர்ப்பூட்டு

ழகரமுன் வலி.	அல்வழியில் யரழமுன் வலி.
கீழ் + கணக்கு = கீழ்க்கணக்கு	வேய் + குறிது = வேய்குறிது
ஊழ் + துணை = ஊழ்த்துணை	வேர் + சிறிது = வேர்சிறிது
கீழ் + படிவு = கீழ்ப்படிவு	யாழ் + பெரிது = யாழ்பெரிது
யாழ் + பாணர் = யாழ்ப்பாணர்.	வேய்க்குழல்—வேய்ங்குழல்
	ஆர்க்கோடு—ஆர்ங்கோடு
	பாழ்க்கிணறு—பாழ்ங்கிணறு

யரழமுன்னர்க் கசதப அல்வழி
இயல்பும் மிகலும் ஆகும். வேற்றுமை
மிகலும் இனத்தோ டுறழ்தலும் விதிமேல். (224)

லகரமுன் வலிமெலியிடை	ளகரமுன் வலிமெலியிடை.
கயல் + கண் = கயற்கண்	கள் + குடம் = கட்குடம்
வில் + கால் = விற்கால்	புள் + குரல் = புட்குரல்
கல் + சுவர் = கற்சுவர்	எள் + சாதம் = எட்சாதம்
நல் + செய்தி = நற்செய்தி	உள் + சமயம் = உட்சமயம்
கல் + தூண் = கற்றூண்	உள் + துளை = உட்டுளை
வில் + தழும்பு = விற்றழும்பு	உள் + தெளிவு = உட்டெளிவு
மல் + போர் = மற்போர்	உள் + பகை = உட்பகை
நெல் + பயிர் = நெற்பயிர்	உள் + பொருள் = உட்பொருள்
நல் + நூல் = நன்னூல்	முள் + மாட்சி = முண்மாட்சி
கல் + நன்று = கன்னன்று	முள் + மரம் = முண்மரம்
வில் + நாண் = வின்னாண்	உள் + மாசு = உண்மாசு
செல் + நெறி = சென்னெறி	உள் + நாக்கு = உண்ணாக்கு
புல் + நுனி = புன்னுனி	உள் + நாட்டம் = உண்ணாட்டம்
கல் + மலை = கன்மலை	முள் + நுனி = முண்ணுனி
	வெள் + நெய் = வெண்ணெய்
கல் + யாது = கல்யாது	முள் + யாது = முள்யாது
கல் + யாப்பு = கல்யாப்பு	முள் + யாப்பு = முள்யாப்பு
கல் + வளை = கல்வளை.	

ளவேற்றுமையிற் றடவும் அல்வழி
அவற்றோ டறழ்வும் வலிவரி னாமெலி
மேவினணவும் இடைவரின் இயல்பும்
ஆகும் இருவழியானும் என்ப. (227)

தனிக்குறிலைச்சாராத லகரமுன் தகரம் நகரம்.

வேல் + தீது = வேல் + றீது = வேறீது
தோன்றல் + தீயன் = தோன்றல் + றீயன் = தோன்றறீயன்
தோன்றல் + தாள் = தோன்றல் + றாள் = தோன்றறாள்
தோன்றல் + நல்லன் = தோன்றல் + னல்லன் = தோன்றனல்லன்
தோன்றல் + நன்மை = தோன்றல் + னன்மை = தோன்றனன்மை
கால் + துணை = காற்றுணை.

தனிக்குறிலைச் சாராத ளகரமுன் தகரம் நகரம்.

வாள் + தீது = வாள் + டீது = வாடீது
வேள் + தீயன் = வேள் + டீயன் = வேடீயன்
வேள் + தோள் = வேள் + டோள் = வேடோள்
வேள் + நல்லன் = வேள் + ணல்லன் = வேணல்லன்
வேள் + நன்மை = வேள் + ணன்மை = வேணன்மை
தாள் + துணை = தாட்டுணை.
வேள் + நன்மை = வேள் + ணன்மை = வேணன்மை

தனிக்குறிலைச் சாராத லளமுன் வல்லினம்.

அல்வழி	வேற்றுமை
கால்கடிது	வேற்படைக்குமரன்
கால்கை	வாட்படைக்கையன்
தோன்றல் கூறாய்	வேற்கண்
மக்காள் சொல்லீர்	வாட்கண்
உண்பல் சிறியேன்	
பொருள் புகழ்	
கேள் சாத்தா	
அருள் குரு	

குறில் செறியாலள அல்வழி வந்த
தகரம் திரிந்தபின் கேடும், ஈரிடத்தும்
வருநத் திரிந்தபின் மாய்வும், வலிவரின்
இயல்பும் திரிபுமாவன உளபிற (229)

னலமுன் தந	ணளமுன் தந
பொன் + தீது = பொன்றீது	மண் + தீது = மண்டீது
பொன் + நன்று = பொன்னன்று	மண் + நன்று = மண்ணன்று
கல் + தீது = கற்றீது	முள் + தீது = முட்டீது
கல் + நன்று = கன்னன்று	முள் + நன்று = முண்ணன்று
பொன் + தீமை = பொற்றீமை	மண் + தீமை = மட்டீமை
கல் + தீமை = கற்றீமை	முள் + தீமை = முட்டீமை
பொன் + நன்மை = பொன்னன்மை	மண் + நன்மை = மண்ணன்மை
கல் + நன்மை = கன்னன்மை	முள் + நன்மை = முண்ணன்மை

னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகும் தநக்கள் ஆயுங்காலே (237)

V. பலவிதமாக வரும் புணர்ச்சிகள்.

தமிழ் + பிள்ளை = தமிழப் பிள்ளை
வேளாளன் + பிள்ளை = வேளாளப்பிள்ளை
பார்ப்பான் + கன்னி = பார்ப்பனக் கன்னி
தாழை + பூ = தாழம்பூ
தாழ் + கோல் = தாழக்கோல்
புளி + காய் = புளியங்காய்
புன்னை + கானல் = புன்னையங்கானல்
ஆவிரை + வேர் = ஆவிரம் வேர்
இன்று + நாள் = இற்றைநாள்
பண்டு + காலம் = பண்டைக்காலம்
அன்று + கூலி = அற்றைக்கூலி
ஆண்டு + திதி = ஆட்டைத்திதி
பொது + இல் = பொதியில்
அகல் + குளம் = அகன் குளம்
பனை + அட்டு = பனாட்டு
அது + அன்று = அதான்று
பசுமை + தார் = பைந்தார்
செம்மை + ஆம்பல் = சேதாம்பல்
அருமை + உயிர் = ஆருயிர்
முதுமை + உரை = மூதுரை

சிறுமை + அடி = சீறடி
இல் + முன் = முன்றில்
இல் + வாய் = வாயில்
தெங்கு + காய் = தேங்காய்
நல் + செய் = நன்செய்
புல் + செய் = புன்செய்
அகம் + கை = அங்கை
அகம் + செவி = அஞ்செவி
இனி + இனி = இன்னினி.
சார் + உழி = சார்வுழி
செல் + உழி = செல்வுழி
அ + இடை = ஆயிடை
பல + பல = பலப்பல = பற்பல = பல்பல
சில + சில = சிலச்சில = சிற்சில = சில்சில
வடக்கு + மலை = வடமலை
வடக்கு + மேற்கு = வடமேற்கு
தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு
தெற்கு + மேற்கு = தென்மேற்கு
தெற்கு + மலை = தென்மலை
மேற்கு + கடல் = மேல்கடல்
மேற்கு + வீதி = மேல் வீதி

கிழக்கு + கரை = கீழ்கரை
கிழக்கு + திசை = கீழ்த்திசை
மேற்கு + குளம் = மேலைக்குளம்
மேற்கு + சேரி = மேலைச்சேரி
கிழக்கு + குளம் = கீழைக்குளம்
கிழக்கு + சேரி = கீழைச்சேரி
பத்து + ஒன்று = பதினொன்று
பத்து + இரண்டு = பன்னிரண்டு
பத்து + மூன்று = பதின் மூன்று
பத்து + ஆயிரம் = பதினாயிரம்
பத்து + மடங்கு = பதின் மடங்கு
பத்து + ஐந்து = பதிற்றைந்து (50)
பத்து + பத்து = பதிற்றுப்பத்து (100)
ஒன்று + பத்து = ஒருபது = ஒருபஃது
இரண்டு + பத்து = இருபது = இருபஃது
ஐந்து + படை = ஐம்படை
ஐந்து + பத்து = ஐம்பது
ஐந்து + கலம் = ஐங்கலம்
ஐந்து + மூன்று = ஐம்மூன்று
எட்டு + கழஞ்சு = எண் கழஞ்சு
எட்டு + கலம் = எண்கலம்
எட்டு + குணம் = எண்குணம்
எட்டு + ஐந்து = எண்ணைந்து
ஒன்று + ஆயிரம் = ஓராயிரம்
இரண்டு + ஆயிரம் = ஈராயிரம்
இரண்டு + ஐந்து = ஈரைந்து
மூன்று + ஆயிரம் = மூவாயிரம்
ஒன்பது + ஆயிரம் = ஒன்பதினாயிரம்
இரண்டு + நூறு = இருநூறு
மூன்று + நூறு = முந்நூறு
நான்கு + நூறு = நானூறு
ஐந்து + நூறு = ஐந்நூறு
எட்டு + நூறு = எண்ணூறு.
மூன்று + பத்து = முப்பது
மூன்று + நூல் = முந்நூல்
மூன்று + கழஞ்சு = முக்கழஞ்சு
ஒன்று + கால் = ஒன்றேகால்
கால் + அரைக்கால் = காலேயரைக்கால்

இரட்டித்தல் பண்புத்தொகை

ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று......ஓரொன்று
இரண்டு + இரண்டு = இவ்விரண்டு..ஈரிரண்டு
மூன்று + மூன்று = மும்மூன்று......மும்மூன்று
நான்கு + நான்கு = நந்நான்கு.... ....நானான்கு
ஐந்து + ஐந்து = ஐவைந்து...........ஐயைந்து
ஆறு + ஆறு = அவ்வாறு..............ஆறாறு
ஏழு + ஏழு = எவ்வேழு...............ஏழேழு
எட்டு + எட்டு = எவ்வெட்டு..........எண்ணெட்டு
பத்து + பத்து = பப்பத்து.............பதிற்றுப்பத்து.

VI. வடமொழிப் புணர்ச்சி.

1. தீர்க்கசந்தி. (*a*) அ ஆக்களில் ஒன்றன்முன் அ ஆக்களில் ஒன்று வந்தால் நிலைமொழியீறும் வருமொழி முதலும் கெட ஆகாரமாம்.

அஷ்ட + அக்ஷரம் = அஷ்டாக்ஷரம்
பஞ்ச + அக்ஷரம் = பஞ்சாக்ஷரம்
பாத + அம்புஜம் = பாதாம்புஜம்
பாத + அரவிந்தம் = பாதாரவிந்தம்
சரண + அரவிந்தம் = சரணாரவிந்தம்
பரம + ஆநந்தம் = பரமாநந்தம்
ஸூர்ய + அஸ்தமனம் = ஸூர்யாஸ்தமனம்
கர்ண + அம்ருதம் = கர்ணாம்ருதம்
சிவ + அநுபூதி = சிவாநுபூதி
சிவ + ஆலயம் = சிவாலயம்
இரத்தின + ஆபரணம் = இரத்தினாபரணம்
கட + ஆகாசம் + கடாகாசம்
லோக + ஆசாரம் = லோகாசாரம்
ஸேனா + அதிபதி = ஸேனாதிபதி
ஸதா + ஆநந்தம் = ஸதாநந்தம்
பாஷா + அபிவிர்த்தி = பாஷாபிவிர்த்தி
கங்கா + அமிர்தம் = கங்காமிர்தம்.

(*b*) இ ஈக்களில் ஒன்றன்முன் இ ஈக்களில் ஒன்று வந்தால் நிலைமொழியீறும் வருமொழி முதலுங் கெட ஈகாரமாம்.

கிரி + இந்திரன் = கிரீந்திரன்
சுசி + இந்திரம் = சுசீந்திரம்
கிரி + ஈசன் = கிரீசன்
நதி + ஈசன் = நதீசன்
மகி + இந்திரன் = மகீந்திரன்

(*c*) உ ஊக்களில் ஒன்றன்முன் உ ஊக்களில் ஒன்று வந்தால் நிலைமொழியீறும் வருமொழிமுதலும் கெட ஊகாரமாம்.

குரு + உபதேசம் = குரூபதேசம்
குரு + உதயம் = குரூதயம்
மேரு + ஊர்த்தவம் = மேரூர்த்துவம்
சுயம்பூ + உபதேசம் = சுயம்பூபதேசம்
சுயம்பூ + ஊர்ச்சிதம் = சுயம்பூர்ச்சிதம்

2. குணசந்தி. (*a*) அ ஆக்களில் ஒன்றன்முன் இஈக்களில் ஒன்று வந்தால் நிலைமொழியீறும் வருமொழி முதலும் கெட ஏகாரமாம்.

நர + இந்திரன் = நரேந்திரன்
சின + இந்திரன் = ஜினேந்திரன்.
அந்திய + இட்டி = அந்தியேட்டி
விக்கின + ஈசுவரன் = விக்கினேசுவரன்
பரம + ஈசுவரன் = பரமேசுவரன்
சுரோத்திர + இந்திரியம் = சுரோத்திரேந்திரியம்
ஸபா + ஈசன் = ஸபேசன்
மஹா + ஈசன் = மஹேசன்
உமா + ஈசன் = உமேசன்
தரா + இந்திரன் = தரேந்திரன்

(*b*) அ ஆக்களில் ஒன்றன்முன் உ ஊக்களில் ஒன்று வந்தால் நிலைமொழியீறும் வருமொழி முதலுங்கெட ஓகாரமாம்.

நீல + உற்பலம் = நீலோற்பலம்
பாத + உதகம் = பாதோதகம்
மந்திர + உச்சாரணம் = மந்திரோச்சாரணம்
ஞான + ஊர்ச்சிதன் = ஞானோர்ச்சிதன்
ஞான + உதயம் = ஞானோதயம்
அருண + உதயம் = அருணோதயம்
ஸூர்ய + உதயம் = ஸூர்யோதயம்
சந்திர + உதயம் = சந்திரோதயம்
ஹித + உபதேசம் = ஹிதோபதேசம்
பூர்வ + உத்தரம் = பூர்வோத்தரம்
சாஸ்த்ர + உபதேசம் = சாஸ்த்ரோபதேசம்
தாம + உதரன் = தாமோதரன்
கங்கா + உற்பத்தி = கங்கோற்பத்தி
தயா + உற்பத்தி = தயோற்பத்தி
மஹா + உததி = மஹோததி
மஹா + உத்ஸவம் = மஹோத்ஸவம்

3. விருந்தி சந்தி. (*a*) அ ஆக்களில் ஒன்றன்முன் ஏ ஐக்களில் ஒன்று வந்தால் நிலைமொழியீறும் வருமொழி முதலுங்கெட ஐகாரமாம்.

ஏக + ஏகன் = ஏகைகன்
சதா + ஏகரூபம் = சதைகரூபம்
லோக + ஏகநாயகன் = லோகைகநாயகன்
பர + ஐக்கியம் = பரைக்கியம்
மகா + ஐச்சுவரியம் = மகைச்சுவரியம்

(*b*) அ ஆக்களில் ஒன்றன்முன் ஓ ஔக்களில் ஒன்று வந்தால் நிலைமொழியீறும் வருமொழி முதலுங்கெட ஔகாரமாம்.

திவ்ய + ஔஷதம் = திவ்யௌஷதம்
கலச + ஓதனம் = கலசௌதனம்
மந்திர + ஔஷதம் = மந்திரௌஷதம்
கோமள + ஓடதி = கோமளௌடதி
மஹா + ஔஷதம் + மஹௌஷதம்
மஹா + ஓடதி = மஹௌடதி
மஹா + ஔதார்யம் = மஹௌதார்யம்

அநுபந்தம்.

தொகைநிலைத் தொடர்மொழி.

2—ம். வே
ஊராளி
இடக்கரடக்கல்
கடவுள் வணக்கம்
குடம் வனைதல்
கூறியது கூறல்
தற்காப்பு
தற்புகழ்ச்சி
தயிர்க்குடம்
தாய்கொல்லி (வாழை)
தொழிற்பெயர்
பண்டமாற்று
பாக்குவெட்டி
பிள்ளைப்பேறு
பிறைசூடி
புரமெரித்தோன்
விருந்தோம்பல்

3—ம் வே
ஊர்ப்பகை
கையெழுத்து
பொற்குடம்
பொற்றாலி
மோர்க்குழம்பு
வாட்டழும்பு
வாய்ப்பேச்சு
விற்றழும்பு

4—ம். வே.
ஆன்மகன்

எழுத்திலக்கணம்
தலையணை
பாண்டவதூதன்
புள்ளரசு
பேச்சுத்துணை

5—ம். வே

கண்ணீர்
புண்ணீர்
மலையருவி

6—ம். வே

அரிமாநோக்கம்
கத்திப்பிடி
சொற்பொருள்
சொற்றொடர்
நெற்பொரி
பெயரெச்சம்
மயிலினம்
மரக்கிளை

7—ம். வே

ஒருதலை துணிவு
இடைநிலை
கைப்பொருள்
கைவேல்
காட்டாறு
கோட்டுப்பூ
சுடலையாடி
தொன்று தொட்டு
நிலக்கரி
நெஞ்செலும்பு
மணியொளி
யானையேற்றம்

வினைத் தொகை.

ஆகுபெயர்
உண்கலம்
எழுவாய்
எறியீட்டி
கவர்பொருள்
செய்கடன்
தின்பண்டம்
தொடர்மொழி
நிறைகுடம்
பகுபதம்
வருவாய்

பண்புத்தொகை

ஐங்காண்டிகை
கருங்குவளை
சாரைப்பாம்பு
சித்திரப்பாவை
செங்கோல்
தண்ணீர்
தொழிற்பெயர்
நெடுந்தெரு
பேராசை
பொதுமொழி
முற்காலம்
வட்டக்கல்
வெந்நீர்

உவமத்தொகை

கயற்கண்
துடியிடை
பொன்னிறம்
மதிமுகம்
வேற்கண்
பவழவாய்
கமலக் கண்ணன்

உம்மைத்தொகை

கபிலபரணர்
காலேயரைக்கால்
கைகால்
சேரசோழபாண்டியர்
பதினொன்று
மூன்றரை
பிழைதிருத்தம்
வினவிடை

அன்மொழித் தொகை
உயிர்மெய்
எழுநா
ஐம்பால்
கட்செவி
கறையடி
குடாவடி
கைம்மலை
கொடுவரி
நால்வாய்
வடமேற்கு

இலக்கணப்போலி.

அகநகர்
ஈயவெள்ளை
கடைவாய்
கண்ணுதல்
தலைக்கடை
தலைவாயில்
பிற்பகல்
பின்மாலை
புறங்கடை
புறநகர்
மீகண்
மேல்வாய்
வாயில்
முற்பகல்
முன்றில்

தொகாநிலைத் தொடர்மொழி.

பெயரெச்சத் தொடர்

இறந்தகாலம்
தூங்காவிளக்கு
தொகாநிலை
பகாப்பதம்
பெறாப்பேறு
வரும்படி
வாடாமல்லி
விடாமுயற்சி

வினையெச்சத்தொடர்

உய்த்துணர வைப்பு
எடுத்துக் காட்டல்
குன்றக்கூறல்
சுருங்கச்சொல்லல்
மயங்கவைத்தல்
மிகைபடக்கூறல்
வகுத்துக்காட்டல்
விளங்கவைத்தல்

2—ம். வே.

சேந்தாரைக்கொல்லி
நூற்றுவரைக்கொல்லி

4—ம். வே.

நவின்றோர்க்கினிமை

7—ம். வே.

தலைமாட்டுக்கொள்ளி
கால்மாட்டுவைத்தியன்

மும்மொழித் தொடர்.

அறநெறிச்சாரம்
அறவாழியந்தணன்
ஆவுரிஞ்சுதறி
இரட்டுற மொழிதல்
இராசராச சோழன்
இருதலைக் கொள்ளி
இருவினை யொப்பு
உலகியலறிவு
ஐங்குறுநூறு
ஐந்தலை நாகம்
ஐந்திணையைம்பது
ஒருசாலை மாணாக்கன்
ஒத்துமுறை வைப்பு
கலைபயிறெளிவு

கட்டுரை வன்மை
கரிகாற் பெருவளவன்
கற்றறி மூடர்
காடுபடுதிரவியம்
காரிமாறப்பிரான்
காலவழுவமைதி
கூலவாணிகன் சாத்தன்
கைகாட்டி மரம்
கோப்பெருஞ் சோழன்
கோப்பெருந் தேவி
சந்திரகாந்தக்கல்
சிறுபஞ்சமூலம்
சிறுபாணாற்றுப்படை
சூடிக்கொடுத்த நாய்ச்சியார்
சூரியகாந்தக்கல்
செங்கட்சோழ நாயனார்
செங்கானூரை
செந்தமிழப் பாண்டிநாடு
செம்பொற்சிலை யெழுபது
சென்று தேய்ந்திறுதல்
செல்வப்பிள்ளைக் காய்ச்சல்
சேரசோழபாண்டியர்
சேரமான் பெருமணாயனார்
சைவ எல்லப்ப நாவலர்
தற்குறிப்பேற்றம்
தன்னரசு நாடு
தாண்டுகால் பாய்ச்சல்
திருத்தொண்டர் புராணம்
திருநாவுக்கரையர்
திருமறுமார்பன்
திருவாய்மொழி

திருநீலகண்டம்
திருநெடுந்தாண்டகம்
தில்லைவாழந்தணர்
தீத்தட்டிக்கல்
தொண்டரடிப்பொடி
நான்மணிக்கடிகை
நாலுகவிப் பெருமாள்
நிலாமணி முற்றம்
நின்று பயனின்மை
நீதிநெறி விளக்கம்
நுனிப்புல் மேய்ச்சல்
நூற்று நாற்பத்தொன்பது
பதிற்றுப்பத்தந்தாதி
பன்மொழித் தொடர்
பஃறொடை வெண்பா
பிறன்கோட் கூறல்
பிள்ளைப் பெருமாளையங்கார்
பெண்ணரசு நாடு
புலிகொல்யானை
பெருவாயின் முள்ளியார்
பெருவாரிக்காய்ச்சல்
பொய்யாமொழிப்புலவர்
மடிமாங்காய்
மரபுவழாநிலை
மாறுகொளக்கூறல்
மேல்வாய்ப்பல்
யாப்பருங்கல விருத்தி
வினையாலணையும் பெயர்
முதுமொழிக் காஞ்சி
முத்தமிழ்க் கவியரசு

பன்மொழித் தொடர்.

அடிமறிமண்டில வாசிரியப்பா
அறுசீர்கழிநெடி லாசிரியவிருத்தம்
ஆசிரியன்பேரூர் கிழான்சாத்தன்
ஆலவாயில் அவிர்சடைக்கடவுள்
இருவர்மாறுகோ ளொருதலை துணிவு.

இன்னதல்ல திதுவென மொழிதல்
ஈராயிரத் தறுநூற் றெண்பத்தைந்து
உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்
எடுத்தமொழியி னெய்த வைத்தல்
எஞ்சியசொல்லி னெய்தக் கூறல்
ஓரெழுத் தொருமொழி
கங்கை கொண்ட சோழபுரம்
காமமிக்க கழிபடர் கிளவி
சில்வாழ்நாள் பல்பிணிச் சிற்றறிவினோர்
சொல்லின் முடிவினப் பொருள் முடித்தல்
தன்குறிவழக்கமிக வெடுத்து ரைத்தல்
தானெட்டித் தனது நிறுத்தல்
திருநீலகண்ட யாழ்ப்பாணர்
திருநெறித் தமிழ் வேதபாராயணம்
தொண்டரடிப் பொடியாழ்வார்
நாற்கவிராஜ நம்பியகப்பொருள்
நிலங்கடந்த நெடுமுடி யண்ணல்
நிலைமண்டில ஆசிரியப்பா
நின்றசீர் நெடுமாறன்
பால்பகாவஃறிணைப் பெயர்
பிறிதொடுபடான்றன்மதங்கொளலே
புறப்பொருள் பன்னிருபடலம்
புறப்பொருள் வெண்பா மாலை
பிறநூன்முடிந்தது தானுடம் படுதல்
மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா
பாரதம் பாடிய பெருந்தேவனார்
மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார்
முன்னிலைப்பன்மை யிறந்தகாலத் தெரிநிலை வினையாலணை
யும் பெயர்
மூன்றுறுப்படக்கிய பிண்டம்

வாக்கியம்.

எழுவாய் பயனிலை.

எழுவா யுருபு திரிபில் பெயரே.
வினைபெயர் விஞக்கொளல் அதன்பய னிலையே. (295)

எழுவாய்.

நீயிர் நீவிர்நான் எழுவா யலபெரு. (294)

திணைபால் வழுவமைதி.

உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்
இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே. (379)

பாலிட வழுவமைதி.

ஒருமையிற் பன்மையும், பன்மையின் ஒருமையும்,
ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே. (380)

எண்ணல் வரும் உயர்திணைப் பெயர்.

ஒருவன் ஒருத்திப் பெயர்மே லெண்ணில. (288)

ஒருவர் என்ப துயரிரு பாற்ருய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப. (289)

அஃறிணை யிருபாற் பொதுப்பெயர்.

பால்பகா வஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய. (281)

முற்றும்மை வேண்டும் எழுவாய்.

இனைத்தென் றறிபொருள் உலகி னிலாப்பொருள்
வினைப்படுத் துரைப்பின் உம்மை வேண்டும். (399)

முற்றும்மை ஒரோவழி எச்சமு மாகும். (426)

ஒரு பொருண்மேற் பல பெயர் வருதல்.

ஒருபொருண் மேற்பல பெயர்வரின் இறுதி
ஒருவினை கொடுப்ப; தனியும் ஒரோவழி. (392)

திணை வழுவமைதி.

உயர்திணை தொடர்ந்த பொருண்முத லாறும்
அதனெடு சார்த்தின் அத்திணை முடிபின. (377)

ஒருபொருட் பன்மொழி,

ஒருபொருட் பன்மொழி சிறப்பி னின்வழா. (398)

திணைபால் மரபு வழுவமைதி.

திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்
மிகவினும் இழிபினும் ஒருமுடி பினவே. (378)

சிறப்பு—"திங்களுஞ் சான்றோரு மொப்பர்."

மிகுதி—"பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார், மூத்தா ரிளையார் பசுப்பெண்டிர் என்றிவர்கள்."—"அளையுறை பாம்பும் அரசு நெருப்பும், முழையுறை சீயமும் என்றிவை நான்கும்."

உம்மைத் தொகை.

உயர்திணை யும்மைத் தொகைபல ரீறே. (372)

செவ்வெண்.

செவ்வெண் ணீற்றதாம் எச்ச வும்மை. (427)

இழிபு—"மூர்க்கனும் முதலையுங் கொண்டதுவிடா"

செவ்வெண்ணாவது எண்ணிடைச்சொல் தொக்குநிற்ப வருவது. பெயர்ச்செவ்வெண் – பெயர்களினிடையே எண்ணிடைச் சொல் தொக்குநிற்ப வருவது. வினைகளினிடையே அங்ஙனம் வருவது வினைச்செவ்வெண்.

பெயர்ச்செவ்வெண்—சாத்தன் கொற்றனிருவரும் வந்தார்.

வினைச்செவ்வெண்—மயிலாடக் குயில்வாட மாமுகி லெழுந்தது.

சில எண்ணிடைச் சொற்கள்.

பெயர்ச்செவ் வெண்ஏ என்று எனாவெண்
நான்கும் தொகைபெறும். உம்மைஎன் றெனவோ
டிந்நான் கெண்ணுமஃ தின்றியும் இயலும். (428)

என்றும் எனவும் ஒடுவும் ஒரோவழி
நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும். (429)

எழுவாயடை.

ஒருபொருட் பல்பெயர் பிரிவில வரையார். (397)

பொருண்முத லாறு மடைசேர் மொழிஇன
முள்ளவும் இல்லவு மாம்இரு வழக்கினும் (401)

அடைமொழி இனமல் லதுந்தரும் ஆண்டுறின். (402)

இயற்பெயர் பின்வரல்.

திணைநிலம் சாதி குடியே உடைமை
குணந்தொழில் கல்வி சிறப்பாம் பெயரோ
டியற்பெய ரேற்றிடின் பின்வரல் சிறப்பே. (393)

அடை சினை முதல்.

அடைசினை முதல்முறை யடைதலும், ஈரடை
முதலோ டாதலும் வழக்கியல். ஈரடை
சினையொடு செறிதலும் மயங்கலுஞ் செய்யுட்கே. (403)

வேற்கை முருகன்—செங்காலுரை.
மனைச் சிறுகிணறு—சிறுகருங் காக்கை.
சிறுபைந் தூவி—கருநெடுங் கண்.

பயனிலை.

யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால். (349)
எவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால். (350)

இருதிணைப் பொதுவினை.

தன்மை முன்னிலை வியங்கோள் வேறிலை
உண்டீ ரெச்ச மிருதிணைப் பொதுவினை. (330)

உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று.

அம்மாம் என்பன முன்னிலை யாரையும்,
எம்மேம் ஓமிவை படர்க்கை யாரையும்,
உம்மூர் கடதற விருபா லாரையும்,
தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை. (332)

உளப்பாட்டுப் பன்மை முன்னிலை.

முன்னிலை கூடிய படர்க்கையும் முன்னிலை. (334)

வியங்கோள் வினைமுற்று.

கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலும் இடம்பால் எங்கும் என்ப. (338)

வேறு, இல்லை, உண்டு.

வேறில்லை யுண்டைம் பான்மூ விடத்தன. (339)

செய்யுமென் முற்று.

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே. (348)

கால வழுவமைதி.

முக்கா லத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத் தானே. (383)

விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும்
பிறழவும் பெறூஉமுக் காலமும் ஏற்புழி. (384)

ஆக்க வினைக்குறிப்பு.

ஆக்க வினைக்குறிப் பாக்கமின் றியலா. (347)

கருமத்தைக் கருத்தாவாகக் கூறுவது.

செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே. (400)

ஒரு பொதுவினை வேண்டுவன.

வேறுவினைப் பல்பொருள் தழுவிய பொதுச்சொலும்,
வேறவற் றெண்ணும், ஓர் பொதுவினை வேண்டும். (389)

சில வினைகளின் மரபு வழுவமைதி.

கேட்குந போலவும் கிளக்குந போலவும்
இயங்குந போலவும் இயற்றுந போலவும்
அஃறிணை மருங்கினும் அறையப் படுமே. (409)

பயனிலையடை.

வேற்றுமை முடிபு.

எல்லை இன்னும் அதுவும் பெயர்கொளும்
அல்ல வினைகொளும். நான்கேழ் இருமையும்
புல்லும் பெரும்பாலும் என்மனார் புலவர். (319)

உருபு மயக்கம்.

யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும். (317)

முதல் சினைத் தொடர்பு.

முதலை ஐயுறின் சினையைக் கண்ணுறும்:
அதுமுதற் காயிற் சினைக்கை யாகும். (315)

எல்லாம்: உருபேற்று வருதல்.

எல்லா மென்ப திழிதிணை யாயின்
அற்றோ டுருபின் மேலும் முறுமே.
அன்றேல் நம்மிடை அடைந்தற் றாகும். (245)

எல்லாரும் எல்லீரும்: உருபேற்று வருதல்.

எல்லாரு மெல்லீரும் என்பவற் றும்மை
தள்ளி நிரலே தம்நும் சாரப்
புல்லும் உருபின் பின்னர் உம்மே. (246)

வினையெச்ச முடிபு.

முதலி னான்கு மீற்றின் மூன்றும்
வினைமுதல் கொள்ளும்: பிறவுமேற் கும்பிற. (344)

முற்றெச்சம்.

வினைமுற் றேவினை யெச்ச மாகலும்,
குறிப்புமுற் றீரெச்ச மாகலும் உளவே. (351)

சினைவினை.

சினைவினை சினையொடும் முதலொடும் செறியும். (345)

உருபு அல்லது எச்சம் பல அடுக்கிவருதல்.

உருபுபல அடுக்கினும், வினைவே றடுக்கினும்,
ஒருதம் மெச்சம் ஈறுற முடியும். (355)

முடிக்குஞ் சொல் நிற்குமிடம்.

எச்சப் பெயர்வினை எய்தும் ஈற்றினும். (357)

ஒழிபு.

திணைபாலிடம் பொதுமை நீங்கு நெறி.

பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்,
மேல்வருஞ் சிறப்பு பெயர்வினை தாமே. (359)

பாற்பொதுமை நீங்கு நெறி.

இருதிணை யாண்பெணுள் ஒன்றனை யொழிக்கும்,
பெயரும் வினையும் குறிப்பி னானே. (352)

திணையொடு வினாவிடையும் பாலொடு வினாவிடையும் வழுவாமற் [காத்தல்.

ஐயந் திணைபால், அவ்வப் பொதுவினும்,
மெய்தெரி பொருண்மைமேல் அன்மையும் விளம்புப. (376)

பலபொரு ளொருசொல்லைச் சிறப்புச் சொல்லோடு முடித்தல்.

வினைசார் பினமிட மேவி விளங்காப்
பலபொரு ளொருசொல் பணிப்பர் சிறப்பெடுத்தே. (390)

வினாவிடை சுருங்கு முறை.

தம்பா லில்ல தில்லெனின், இனனாய்
உள்ளது கூறி மாற்றியும் உள்ளது
சுட்டியும், உரைப்பர் சொற்சுருங் குதற்கே. (406)

குறிப்பெச்சம்.

முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே. (408)

சொல்லெச்சம் = இசையெச்சம் = ஒழிந்துநிற்கும் சொற்கொண்டு கருத்து [முடிவது.

இசையறுத்துப் பொருள் துணிதல்.

எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழி
இசைத்திரி பால்தெளி வெய்து மென்ப. (391)

[நூலுக்குப் புறனடை.]

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே. (462)

III. யாப்பு.

பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக உணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்.

செய்யுளுறுப்பு.

எழுத்து—அசை—சீர்—தளை—ஓசை—அடி—தொடை.

"எழுதப் படுதலின் எழுத்தே. அவ்வெழுத்
தசைத்திசை கோடலின் அசையே. அசையியைந்து
சீர்கொள நிற்றலின் சீரே. சீரிரண்டு
தட்டு நிற்றலின் தளையே. அத்தளை
அடுத்து நடத்தலின் அடியே. அடியிரண்டு
தொடுத்துமன் சேறலின் தொடையே. அத்தொடை
பாவி நடத்தலின் பாவே. பாவொத்
தினமாய் வழங்கலின் இனமெனப் படுமே."

எழுத்து.—[நன்னூலில் எழுத்தியலிற் கண்டுகொள்க.]

அசை
- **நேரசை.**
  - குறில் தனித்து வருவது—அ.
  - குறில் ஒற்றடுத்து வருவது—அல்.
  - நெடில் தனித்து வருவது—ஆ.
  - நெடில் ஒற்றடுத்து வருவது—ஆல்.
- **நிரையசை.**
  - குறில் இணைந்து வருவது—வெறி.
  - குறிலிணைந்து ஒற்றடுத்து வருவது—நிறம்.
  - குறிலு நெடிலும் இணைந்து வருவது—சுறா.
  - குறிலு நெடிலும் இணைந்து ஒற்றடுத்து வருவது—விளாம்.

சீர்.—அசையுடன் அசை சேர்ந்து வருவது.

அசைச்சீர். (ஓரசைச்சீர்.)

- தனித்துவரு நேரசை—நாள்
  - குற்றியலுகரஞ் சேர்ந்து—காசு
- தனித்துவரு நிரையசை—மலர்
  - குற்றியலுகரஞ் சேர்ந்து—பிறப்பு.

(பெரும்பாலும் வெண்பாவின் ஈற்றிலேவரும்)

இயற்சீர். (ஈரசைச்சீர் or அகவற்சீர் or ஆசிரிய உரிச்சீர்.)

- நேர்—நேர்—தே—மா................ வே தப்
- நிரை—நேர்—புளி—மா.............. பொரு ளாய்
- நிரை—நிரை—கரு—விளம்.......... விளங் கிய
- நேர்—நிரை—கூ—விளம்............ சங் கரன்.

உரிச்சீர். (மூவசைச்சீர்.)

வெண்பா வுரிச்சீர்.

நேர் — நேர் — நேர் — தே — மாங் — காய்
நிரை — நேர் — நேர் — புளி — மாங் — காய்
நிரை — நிரை — நேர் — கரு — விளங் — காய்
நேர் — நிரை — நேர் — கூ — விளங் — காய்.

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
தேமாங்காய் தேமாங்காய் தேமாங்காய் கூவிளங்காய்
சாந்துணையுங் கல்லாத வாறு.
கூவிளங்காய் தேமாங்காய் காசு.

வஞ்சி யுரிச்சீர்.

நேர் — நேர் — நிரை — தே — மாங் — கனி
நிரை — நேர் — நிரை — புளி — மாங் — கனி
நிரை — நிரை — நிரை — கரு — விளங் — கனி
நேர் — நிரை — நிரை — கூ — விளங் — கனி

மண்ணீரனல் வளிவானொடு
தேமாங்கனி புளிமாங்கனி
வெண்ணீர்மதி வெங்கதிருயி
தேமாங்கனி கூவிளங்கனி
ரெண்ணீடுரு வியைபசுபதி
தேமாங்கனி கருவிளங்கனி

பொதுச்சீர். (நாலசைச்சீர்).—வஞ்சிப்பாவில் வரும். ஆசிரியத்துள்ளும் கலியுள்ளும் குற்றுகரம் வந்துழி யன்றி வாரா.

தேமாந்தண்பூ — தேமாந்தண்ணிழல்
புளிமாந்தண்பூ — புளிமாந்தண்ணிழல்
கருவிளந்தண்பூ — கருவிளந்தண்ணிழல்
கூவிளந்தண்பூ — கூவிளந்தண்ணிழல்
தேமாநறும்பூ — தேமாநறுநிழல்
புளிமாநறும்பூ — புளிமாநறுநிழல்
கருவிளநறும்பூ — கருவிளநறுநிழல்
கூவிளநறும்பூ — கூவிளநறுநிழல்.

அங்கண்வானத் தமரரசரும்
வெங்களியானை வேல்வேந்தரும்
வடிவார்கூந்தல் மங்கையரும்.

தளை.—நின்ற சீரின் ஈற்றசையோடு வருஞ்சீரின் முதலசை

ஒன்றியேனும் { நேர் முன் நேர் / நிரை முன் நிரை }
ஒன்றாதேனும் { நேர் முன் நிரை / நிரை முன் நேர் }

கூடிநிற்பதாம்.

ஆசிரியத்தளை.
- நேரொன்றாசிரியத்தளை—
  உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை
- நிரையொன்றாசிரியத்தளை—
  திருமழை தலைஇய விருணிற விசும்பின்.

ஈரசைச் சீர்நின் றினிவருஞ் சீரொடு
நேரசை யொன்றல் நிரையசை யொன்றலென்
றாயிரு வகைத்தே யாசிரி யத்தளை.

வெண்டளை
- வெண்சீர் வெண்டளை—காய்முன் நேர்.
- இயற்சீர் வெண்டளை—மாமுன் நிரையும் விளமுன் நேரும்.

வெண்சீ ரொன்றலு மியற்சீர் விகற்பமும்
என்றிரண் டென்ப வெண்டளைக் கியல்பே.

வஞ்சித்தளை.
- ஒன்றிய வஞ்சித்தளை—கனிமுன் நிரை—வெண் சாமரை புடைபெயர்தர.
- ஒன்றாத வஞ்சித்தளை—கனிமுன் நேர் — மந்தா நிலம் வந்தசைப்ப.

தன்சீ ரிரண்டு தலைப்பெய றம்முளொத்
தொன்றினு மொன்றா தொழியினும் வஞ்சியின்
பந்த மெனப்பெயர் பகரப் படுமே.

கலித்தளை. காய்முன் நிரை வருவது.—
"செல்வப்போர்க் கதங்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி."
வெண்சீ ரிறுதிக் கிணையசை பின்வரக்
கண்டன வெல்லாங் கலித்தளை யாகும்.

ஓசை.—சீர்களின் புணர்ச்சியால் தோன்றித் தளைகளால் அமைந்த செய்யுட்களின் குணமாய் இசைப்பது.

1. **செப்பலோசை.**—வெண்பாவுக் குரியது.

(*a*) வெண்சீர் வெண்டளை யான்வரும் யாப்பை
ஏந்திசைச் செப்பல் என்மனார் புலவர்.

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

(*b*) இயற்சீர் வெண்டளை யான்வரும் யாப்பைத்
தூங்கிசைச் செப்பல் என்மனார் புலவர்.

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

(c) வெண்சீ ரொன்றலும் இயற்சீர் விகற்பமும்
ஒன்றிய பாட்டே ஒழுகிசைச் செப்பல்.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்.

2. அகவலோசை.—அகவலுக்குரியது.

(a) நேர்நே ரியற்றளை யான்வரு மகவலும்,
(b) நிரைநிரை யியற்றளை யான்வரு மகவலும்,
(c) ஆயிரு தளையுமொத் தாகிய வகவலும்,

ஏந்தல் தூங்கல் ஒழுகல் என்றிவை
ஆய்ந்த நிரனிறை யாகு மென்ப.

(a) ஏந்திசை யகவல்.—

போது சாந்தம் பொற்ப வேந்தி
ஆதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வோரே.

(b) தூங்கிசை யகவல்.—

அணிநிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிகழ் அவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே.

(c) ஒழுகிசை யகவல்.—

தானே முத்தி தருகுவன் சிவனவன்
அடியின் வாத வூரனைக்
கடிவின் மனத்தாற் கட்டவல் லார்க்கே.

3. துள்ளலோசை.—கலிப்பாவுக் குரியது.

(a) **ஏந்திசைத் துள்ளல்** கலித்தளை யியையின்.
(b) வெண்டளை தன்றளை யென்றிரண் டியையின்

ஒன்றிய **அகவற் றுள்ளலென்** றோதுப.

(c) தன்றளை பிறதளை யென்றிவை யனைத்தும்
பொருந்தி வரினே **பிரிந்திசைத் துள்ளல்.**

(a) ஏந்திசைத் துள்ளல்.—

முருகவிழ்தா மரைமலர்மேன் முடியிமையோர் புடைவரவே.

(b) அகவற்றுள்ளல்.—

செல்வப்போர்க் கதங்கண்ணன்
செயிர்த்தெறிந்த சினவாழி, &c.

(c) பிரிந்திசைத் துள்ளல்.—

குடநிலைத் தண்புறவிற் கோவல ரெடுத்தார்ப்ப, &c.

4. தூங்கலோசை.—வஞ்சிப்பாவுக் குரியது.

(a) ஒன்றிய வஞ்சித் தளையே வரினும்
(b) ஒன்றா வஞ்சித் தளையே வரினும்
(c) என்றிவை யிரண்டும் பிறவு மயங்கினும்

ஏந்தல் அகவல் பிரிந்திசைத் தூங்கலென்
றாய்ந்த நிரனிறை யாகு மென்ப.

(a) ஏந்திசைத் தூங்கல்.—

வினைத்திண்பகை விழச்செற்றவன்
வனப்பங்கய மலர்த்தாளிணை.

(b) அகவற் றூங்கல்.—

வானோர்தொழ வண்டாமரைத்
தேனார்மலர் மேல்வந்தருள்.

(c) பிரிந்திசைத் தூங்கல்.—

மந்தாநிலம் வந்தசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தர.

அடி.—தளையினாலே இணைக்கப்பட்ட சீரோடு வருவது.

குறளடி.—இருசீரால் வருவது.

திரைத்த சாலிகை, நிரைத்த போணிரைந்
திரைப்ப தேன்களே, விரைக்கொள் மாலையாய்.

சிந்தடி.—மூன்று சீரால் வருவது.

நரக வாதையில் வன்பிறார்
தரணி மீதொரு கொன்பெறார்
சுரரு லோகமு மின்புறார்
அருணை நாயக ரன்பறார்.

அளவடி.—நான்கு சீரால் வருவது.

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

நெடிலடி.—ஐந்து சீரால் வருவது.

முன்னநின் னன்னை முலையூட்டி மையிட்டு மூக்குசிந்தி
கன்னமுங் கிள்ளிய நாளல்ல வேயென்னைக் காப்பதற்கே
அன்னமு மஞ்ஞையும் போலிரு பெண்கொண்ட வாண்பிள்ளைநீ
இன்னமுஞ் சின்னவன் றநே செந்தூரி விருப்பவனே.

கழிநெடிலடி.—ஐந்து சீரின் மிகுந்து எனைத்துச் சீரானும் வருவது.

அறுசீர்.

பண்டு காம ரான வாறும் பாவையர் வாயமுதம்
உண்ட வாறும் வாழ்ந்த வாறு மொக்க வுரைத்திருமித்
தண்டு காலா லூன்றி யூன்றித் தள்ளி நடவாமுன்
வண்டு பாடுந் தண்டு ழாயான் வதரி வணங்குதுமே.

எழுசீர்.

குலந்தருஞ் செல்வந் தந்திடு மடியார்
படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யு நீள்விசும் பருளு
மருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரு மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டே
னாராய ணாவென்னு நாமம்.

எண்சீர்.

நந்தா விளக்கே யளத்தற் கரியாய் நரநா
ரணனே கருமா முகில்போல்
எந்தா யெமக்கே யருளா யெனநின் றிமையோர்
பரவு மிடமெத் திசையும்
கந்தா ரமந்தே னிசைபா டமாடே களிவண்டு
மிழற்ற நிழறு தைந்து
மந்தா ரனின்று மணிமல் குநாங்கூர் மணிமா
டக்கோயில் வணங்கென் மனனே.

குறளடி சிந்தடி யிருசீர் முச்சீர்,
அளவடி நெடிலடி நாற்சீ ரைஞ்சீர்,
நிரனிறை வகையா னிறுத்தனர் கொளலே.

கழிநெடி லடியே கசடறக் கிளப்பின்,
அறுசீர் முதலா வையிரண் டீறு,
வருவன பிறவும் வகுத்தனர் கொளலே.

தொடை.—அடிகளினும் சீர்களினும் எழுத்துக்கள் இசையத்தொடுப்பது

1. **எதுகைத் தொடை.**—அடிகளில் முதலெழுத்துக்கள் மாத்திரை யளவில் ஒத்துநிற்க இரண்டாமெழுத்து இசையத் தொடுப்பது.

இரண்டா மெழுத்தொன் றியைவதே யெதுகை.

வருக்க எதுகை.

வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று.

நெடி லெதுகை.

ஆவாவென்றே யஞ்சின ராழ்ந்தா ரொருசாரார்
கூகூவென்றே கூவிளி கொண்டா ரொருசாரார்.

மெல்லின வெதுகை.

அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

வல்லின வெதுகை.

தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்.

இடையின வெதுகை.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

ஆசெதுகை.—ய்-ர்-ல்-ழ் ஏதாயினும் எதுகைக்கிடையில் வருவது.

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகுனெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கைபோழ்ந்து.

ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம் பால்போல்.

2. **மோனைத்தொடை.**—முதற்சீரின் முதலெழுத்தோடு பின்வருஞ் சீர்களில் ஒன்றனுள்ளேனும் பலவற்றுள்ளேனும் முதலெழுத்து ஒன்றி வருவது.

அ — ஆ — ஐ — ஔ.

இ — ஈ — எ — ஏ.

உ — ஊ — ஒ — ஓ.

ச — த.

ஞ — ந.

ம — வ.

அகரமோ டாகார மைகார மௌவாம்
இகரமோ டீகார மெஎ—உகரமோ
ேகார மொஓ ஞந மவ தச் சகரம்
ஆகாத வல்ல வநு.

இணைமோனை —a—b. 1-2
பொழிப்புமோனை a—c. 1-3
ஒரூஉமோனை —a—d. - 1-4
கூழைமோனை —a—b—c. 1-2-3
மேற்கதுவாய் —a—c—d. 1-3-4
கீழ்க்கதுவாய் —a—b—d. 1-2-4
முற்றுமோனை —a—b—c—d. 1-2-3-4.

a–b–வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்.
a–c– அரிற்குரற் கிண்கிணி யாற்றுஞ் சீறடி.
a–d– அகர முதல எழுத்தெல்லாம் ஆதி.
a–b–c– தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்.
a–c–d– விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகம்.
a–b–d– அவிர்மதி யனைய திருநுத லரிவை.
a–b–c–d– துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு.

இருசீர் மிசைவரத் தொடுப்ப திணையே.
முதலொடு மூன்றுஞ் சீர்த்தொடை பொழிப்பே.
சீரிரண் டிடைதபத் தொடுப்ப தொரூஉத்தொடை.
மூவொரு சீரு முதல்வரத் தொடுப்பது
கூழை யென்மனார் குறியுணர்ந் தோரே.
முதலயற் சீரொழித் தல்லன மூன்றின்
மிசைவரத் தொடுப்பது மேற்கது வாயே.
ஈற்றயற் சீரொழித் தெல்லாந் தொடுப்பது
கீழ்க்கது வாயின் கிழமைய தாகும்.
சீர்தொறுந் தொடுப்பது முற்றெனப் படுமே.

செய்யுள். (பா.)

பா (செய்யுள்) நான்கு:—

வெண்பா — செப்பல்
அகவற்பா — அகவல்
கலிப்பா — துள்ளல்
(செப்பல், அகவல், துள்ளல் — அளவடி)
வஞ்சிப்பா — தூங்கல் — குறள்சிந்தடி

பாவிகற்பம்.

1. வெண்பா.

குறள் வெண்பா.
சவலை வெண்பா.
நேரிசை வெண்பா.
இன்னிசை வெண்பா.
பஃறொடை வெண்பா.
நேரிசைச் சிந்தியல் வெண்பா.
இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

2. அகவற்பா.

நேரிசை யாசிரியப்பா.
இணைக்குற ளாசிரியப்பா.
நிலைமண்டில வாசிரியப்பா.
அடிமறிமண்டில வாசிரியப்பா.

3. கலிப்பா.

நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா.
அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா.
வண்ணகக் கலிப்பா.
கலிவெண்பா.
வெண்கலிப்பா.
தரவுக்கொச்சகக் கலிப்பா.
தரவிணைக் கொச்சகக் கலிப்பா.
சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.
பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.
மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.

4. வஞ்சிப்பா.

குறளடி வஞ்சிப்பா.
சிந்தடி வஞ்சிப்பா.

வெண்பா.—ஈற்றடி முச்சீரடியாகவும் ஏனையடி நாற்சீரடியாகவும் பெற்றுக், காய்ச்சீரும் அகவற்சீரும் வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும் கொண்டு, மற்றச் சீருந் தளையும் பெறாது, காசு—பிறப்பு—நாள்—மலர் என்னும் வாய்பாட்டான் முடிவது.

செப்பல் இசையன வெண்பா மற்றவை
அந்தடி சிந்தடி ஆகலும் அவ்வடி
அந்தம் அசைச்சீர் ஆகவும் பெறுமே.

குறள் வெண்பா.—நாற்சீர் முச்சீர் என இரண்டடியாய் ஒரு விகற்பத்தாலேனும் இருவிகற்பத்தாலேனும் வருவது.

ஒருவிகற்பம்.

உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

இருவிகற்பம்.

ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின்.

தொடையொன் றடியிரண் டாகி வருமேல்
குறளின் பெயர்க்கொடை கொள்ளப் படுமே.

சவலை வெண்பா—இரண்டு குறள் ஒரு விகற்பத்தால் வருவது.

அட்டாலும் பால்சுவையிற் குன்று தளவல்ல
நட்டாலு நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலு மேன்மக்கண் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

நேரிசை வெண்பா.—நான்கடியாய், இரண்டாமடி இறுதிச்சீர் தனிச் சொல்லாய் வர, அடிமுழுதும் ஒரெதுகையாகவேனும், முன்னிரண்டு மோரெ துகையும் பின்னிரண்டு மற்றோ ரெதுகையுமாகவேனும் வருவது.

ஒருவிகற்பம்.

நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்—எண்ணுங்கால்
பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ
கண்ணவாத் தக்க கலம்.

இருவிகற்பம்.

பெருமுத் தரையர் பெரிதுவந் தீயுங்
கருனைச்சோ றார்வர் கயவர்—கருனையைப்
பேரு மறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரு மமிழ்தாய் விடும்.

ஆசிடை நேரிசை வெண்பா.—நேரிசை வெண்பாவில் தனிச்சொற்கு முன் கூட்டப்படும் அசை—ஆசு—எனப்படும். ஆசு (பற்றாசு.)

இன்னிசை வெண்பா—ஒரு விகற்பத்தாலேனும் பல விகற்பத்தாலே னும் நான்கடியாய்த் தனிச்சொல்லின்றி வருவது. (நாலடியாரில் உதாரணங் கள் காண்க).

பலவிகற்பம்.

களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினுங் கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

பஃறொடை வெண்பா.—நான்கடியின் மிக்க பலவடிகளைப் பெற்று வரும்.

வையக மெல்லாங் கழனியா வையகத்துச்
செய்யகமே நாற்றிசையிற் றேயங்கள்—செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள் சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங் கட்டியுள்
தானேற்ற மாய சருக்கரை மாமணியே
ஆனேற்றான் கச்சி யகம்.

சிந்தியல் வெண்பா.—மூன்றடியால் நேரிசை வெண்பாவைப்போல வருவது நேரிசைச் சிந்தியல் வெண்பா என்றும், இன்னிசை வெண்பாவைப் போல வருவது இன்னிசைச் சிந்தியல் வெண்பா என்றும் பெயர் பெற்று வரும்.

நேரிசைச் சிந்தியல் வெண்பா.

> அறிந்தானை யேத்தி யறிவாங் கறிந்து
> செறிந்தார்க்குச் செல்வ னுரைப்பச்—சிறந்தார்
> சிறந்தமை யாராய்ந்து கொண்டு.

இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

> முறுவ லினிதுரை கானீர் மணைபாய்
> கிடக்கையோ டிவ்வைந்து மென்ப தலைச்சென்றார்க்
> கூண்ணொடு செய்யுஞ் சிறப்பு.

அகவற்பா.—நாற்சீரான் வரும் அளவடியதாகியும், இயற்சீர் பயின்றும், அயற்சீர் விரவியும், தன்தளை தழுவியும், பிறதளை மயங்கியும், கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் இருசீருங் கலவாது, மூன்று முதலிய பலவடிகளால் வருவது.

நேரிசை யாசிரியப்பா.—ஈற்றயலடி முச்சீரும் மற்றை யடிகளெல்லாம் நாற்சீருமாய் வருவது.

இணைக்குற ளாசிரியப்பா.—ஈற்றடியு முதலடியு மொத்து நடுவடிகளில் ஒன்றும் பலவும் ஒருசீரும் பலசீரும் குறைந்து வருவது.

நிலைமண்டில வாசிரியப்பா.—எல்லாவடியும் அளவொத்த நாற்சீரடிகளாக வருவது.

அடிமறி மண்டில வாசிரியப்பா.—எல்லாவடியும் அளவொத்து எவ்வடியை முதல் நடு ஈறு ஆக உச்சரித்தாலும் ஓசையும் பொருளும் வழுவாது நிற்பது.

கலிப்பா.—வெண்சீர் மிகப்பெற்று – மாச்சீரும் விளங்கனிச்சீரும் பெருது, பிறசீர்களும் சிறுபான்மை கலந்து, கலித்தளையும் அயற்றளையுந் தழுவி, தரவு – தாழிசை – அராகம்—அம்போதரங்கம்—தனிச்சொல் – சுரிதகம் என்னும் ஆறுறுப்பினுள் ஏற்பனகொண்டு நாற்சீரடியால் வருவது.

வஞ்சிப்பா.—பெரும்பாலும் தன்தளையும் சிறுபான்மை பிறதளையும் தழுவி, இருசீரடியாலேனும் முச்சீரடியாலேனும் மூன்று முதலிய பலவடிகளைக்கொண்டு, தனிச்சொல் பெற்று, அகவற் சுரிதகத்தான் முடிவது.

பாவினம்.

நால்வகைபபாவில் ஒவ்வொன்றுக்கும் மும்மூன்று இனமுண்டு.

தாழிசை—துறை—விருத்தம் என்பன.

வெண்பா.

1. வெண்டாழிசை
2. வெண்டுறை
3. வெளிவிருத்தம்.

ஆசிரியப்பா.

1. ஆசிரியத்தாழிசை
2. ஆசிரியத்துறை
3. ஆசிரியவிருத்தம்.

கலிப்பா.

1. கலித்தாழிசை
2. கலித்துறை
3. கலிவிருத்தம்.

வஞ்சிப்பா.

1. வஞ்சித்தாழிசை
2. வஞ்சித்துறை
3. வஞ்சிவிருத்தம்.

இவற்றில் தற்காலம் மாணுக்கர் அறிதற்பாலனவாவன:—கலித்துறை வஞ்சித்துறை ஆசிரியவிருத்தம் கலிவிருத்தம் வஞ்சிவிருத்தம்.

கலித்துறை (கலிநிலைத்துறை).—ஐஞ்சீரடி நான்கினைக்கொண்டு வருவது.

"நெடிலடி நான்காய் நிகழ்வது **கலித்துறை**".

உதாரணம்.

யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
றேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேற்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே.

கட்டளைக் கலித்துறை.—முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாமல் நிற்பக் கடையொருசீரும் விளங்காயாகி வரும் ஐஞ்சீரடி நான்கு கொண்டு வருவது.

அது விளங்காயாய் வருவதன்றிச் சிறுபான்மை வேறுபட்டும் வரும். ஓரடிக்கெழுத்து; முதலசை நேராயின் பதினாறும், நிரையாயின் பதினேழுமாம்.

"முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக்
கடையொரு சீரும் விளங்கா யாகி
நேர்பதி னாறே நிறைபதி னேழென்
றோதினர் கலித்துறை யோரடிக் கெழுத்தே".

உதாரணம்.

ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை மீதுன் னருகிருந்து
நீமுத்தந் தாவென் றவர்கொஞ்சும் வேளையி னித்தநித்தம்
வேய்முத்த ரோடென் குறைகளெல் லாமெல்ல மெல்லச் சொன்னல்
வாய்முத்தஞ் சிந்தி விடுமோ நெல்வேலி வடிவம்மையே.

எரியெனக் கென்னும் புழுவோ வெனக்கென்னு மிந்தமண்ணுஞ்
சரியெனக் கென்னும் பருந்தோ வெனக்கென்னுந் தான்புசிக்க
நரியெனக் கென்னும்புன் னாயெனக் கென்னுமிந் நாறுடலைப்
பிரிய முடன்வளர்த் தேனித னாலென்ன பேறெனக்கே.

வஞ்சித்துறை.—இருசீரடி நான்குகொண்டு வருவது.

உதாரணம்.

மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தனர் காதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய்.

விருத்தம்.—எல்லாச்சீராலும் எல்லா அடிகளாலும் வந்து தளையின்றி நடக்கும். அதற்குரிய பொதுவிதியாவது, ஓரடியில் தேமா வந்தவிடத்து மற்ற அடியினும் தேமாவாயினும் புளிமாவாயினும் வரும்; விளம் வந்த விடத்து மற்ற அடியினும் கூவிளமாயினும் கருவிளமாயினும் வரும்; காயீற்றுச்சீருக்குக் காயீற்றுச்சீரும், கனியீற்றுச் சீருக்குக் கனியீற்றுச்சீரும் வரும். பிறவுமன்ன.

வஞ்சிவிருத்தம்.—முச்சீரடி நான்குகொண்டு வருவது.

உதாரணம்.

சோலை யார்ந்த சுரத்திடைக்
காலை யார்கழ லார்ப்பவும்
மாலை மார்பன் வருமாயி
னீல வுண்கணிவள் வாழுமே.

கலிவிருத்தம்.—நாற்சீரடி நான்கினைக்கொண்டு வருவது.

உதாரணம்.

முடிச்சோதி யாயுனது முகச்சோதி மலர்ந்ததுவோ
அடிச்சோதி நீநின்ற தாமரையா யலர்ந்ததுவோ
படிச்சோதி யாடையொடும் பல்கலனுய் நின்பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ திருமாலே கட்டுரையே.

ஆசிரியவிருத்தம்.—அளவொத்த கழிநெடிலடி நான்கினுல் வருவது. உதாரணம் கழிநெடிலடிகளுக்குக் காட்டியன காண்க.

[எஞ்சிய யாப்பிலக்கணத்தை விரிந்தநூலிற் கண்டுகொள்க.]

IV அணி.

அணியாவது, செய்யுட் கழகுசெய்து நிற்பதாம்.

[மாணுக்கர்கள் முதலில் அறியத்தக்க சில பொருளணி சொல்லணிகள் மாத்திரமே இங்கே விளக்கப்பட்டிருக்கின்றன.]

1. **தன்மையணி.**—அலங்கார விசித்திரங்களின்றிப் பொருள்களின் சுவபாவத்தை உள்ளபடியே கூறுவது. உ-ம்.

புலி பசித்தாலும் புல்லைத் தின்னுது.
யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்.
புதிய வண்ணுன் பொந்துகட்டி வெளுப்பான்.
அரைக்குடம் ததும்பும் நிறைகுடம் ததும்பாது.
வற்றிய ஓலை கலகலக்கும்.
ஊசியை ஊசிக்காந்தம் இழுக்கும்.

2. **உவமை.**—ஒரு பொருளோடு மற்றொரு பொருட்குள்ள ஒப்புமை விளங்குவது. [ஒப்புமையானது தொழில் - பயன் - பண்பு (வடிவு-வண்ணம்) என்பன காரணமாகத் தோன்றும்]

தொழிலுவமை (வினையுவமம்). உ-ம். "புலியன்ன மறவன்"—புலிபாயு மாறே பாய்வன் என்னுந் தொழில்பற்றி வந்தது.

பயனுவமை.—உ-ம். "மாரியன்ன வண்கை"—மாரியான் விளைவிக்கப் படும் பொருளும் வண்கையாற் பெறும் பொருளும் ஒக்கும் என்றவாறு.

வடிவுவமை.—உ-ம். "துடியிடை."—உடலின் மேற்பாகமும் கீழ்ப் பாகமும் அகன்று காட்டச் சுருங்கித்தோன்றும் இடைக்குத் துடி வடிவால் ஒக்கும்

வண்ணவுவமை (உருவுவமை). — உ-ம். "பொன்மேனி." பொன்னின் கண்ணும் மேனியின் கண்ணும் உள்ள நிறமே ஒத்தன, பிற ஒத்தில.

உவமையின் உறுப்புக்கள் நான்கு:—உபமானம் (உவமை), உபமேயம் (பொருள்), சாதாரணதர்மம் (பொதுத்தன்மை), உபமாவாசகம் (உவமையுருபு).

விரியுவமை.— உவமையின் உறுப்புக்கள் நான்கும் விரிந்திருப்பது.

உ-ம். "பால்போலு மின்சொல்." இதில் பால்—உபமானம் (உவமை) சொல்—உபமேயம் (பொருள்), இனிமை—சாதாரணதர்மம் (பொதுத்தன்மை) போலும்—உபமாவாசகம் (உவமையுருபு).

தொகையுவமை.—உவமையின் உறுப்புக்கள் நான்கனுள் பொதுத்தன்மையாவது, உவமையுருபாவது, இவ்விரண்டுமாவது தொக வருவது.

உ-ம். "தண்டரளம் போன்முறுவல்" என்பதில் வெண்மையான என்கிற பொதுத்தன்மையும், "வேய்புரைதோள்" என்பதில் திரண்ட என்கிற

பொதுத்தன்மையும் மறைந்திருக்கின்றன. "அம்பவளச் செவ்வாய்" என்பதிலும், "கமலச்செங்கண்" என்பதிலும் போன்ற என்ற உவமையுருபு மறைந்திருக்கின்றது. "பவழவாய்" என்பது பவழம்போலும் சிவந்த வாய் என்பதாதலால், இதில் உவமையுருபும் பொதுத்தன்மையும் மறைந்திருக்கின்றன; இங்ஙனமே "முத்தநகை" (முத்தம்போன்ற வெளுத்த நகை) என்பதிலும் அவ்விரண்டும் தொக்குநின்றன.

விபரீதவுவமை. — பொருளை உவமையாகவும், உவமையைப் பொருளாகவுங் கூறுவது. உ-ம்.

"மென்றோளெனத் திரண்ட வேயினங்கள்."

"மங்கையர் குறங்கென வகுத்த வாழைகள்,
அங்கவர் கழுத்தெனக் கமுக மார்ந்தன,
தங்கொளி முறுவலிற் றும நான்றன."

அபூதவுவமை (இல்பொருளுவமை) — பூமியிலில்லாத வகையுடையதோர் பொருளை உவமானங் கூறுவது உ-ம்.

"புண்டரி கத்தடங் காடு பூத்தொரு
கொண்டல்வந் திழிந்தெனக் கோலத் தான்றனைக்
கண்டனன் மனமெனக் களிக்குங் கண்ணினான்."

"உதிக்குங் கருஞாயி றென்றே யுவமை
மதிக்கும் வடமலை மாயோன்."

பலபொருளுவமை — ஒருபொருட்குப் பல உவமை காட்டுவது.

உ-ம். "பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புநதம்
ஆவிற் கருமுனியா வானைக் கமரரும்பல்
தேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா."

பொதுநீங் குவமை. — ஒரு பொருளுக்கு அதையே உவமானமாகக் கூறுவது.

உ-ம். "இதுவலா திதனுக் கியம்பலா முவமைமற் றியாதோ."

"தன்னைக்கு முவமை யல்லால்
றனையொக்கு முவமை யுண்டோ."

"நின்வாண்முகம் தானே யுவமை தனக்கு."

எடுத்துக்காட் டுவமை. — பிம்பப் பிரதி பிம்பத் தன்மையால் இரண்டு வாக்கியங்களாய் வருவது. உ-ம்.

"ஊசியை ஊசிக்காந்த மிழுக்கும்,
உத்தமனைச் சினேகம் இழுக்கும்."

"கடுங்காற்று மழைகூட்டும்,
கடுஞ்சினேகம் பகைகாட்டும்."

"முற்று நனைந்தவனுக் கீரமில்லை,
முழுதுங் கெட்டவனுக்குத் துக்கமில்லை."

"அகர முதல வெழுத்தெல்லாம்: ஆதி
பகவன் முதற்றே யுலகு."

சிலேடை யுவமை.— சிலேடை வகையால் பொதுத்தன்மை ஒன்றுபட்டிருப்பது.

"நாலு திசைமுகமு நண்ணுதலா லொண் கமலம்
மேலுறலால் வேதாவாம் வேங்கடமே."

3. **உருவகம்.**—உபமானத்தையும் உபமேயத்தையும் வேறுபாடில்லாமல் இருபெயரொட்டாக ஒற்றுமைப்படுத்தி உரைப்பது. அஃதாவது, உவமையைப் பொருளாகவும் பொருளை உவமையாகவும் கூறுவது, ஆகிய என்பது உருவக உருபு. அது விரிந்துவரின் விரியுருவகமும், மறைந்துவரின் தொகையுருவகமுமாம். உ—ம்.

முறையே, பாதமாகிய தாமரை, பாததாமரை.

இயைபுருவகம்.—ஒரு தொடர்பினுள் பலபொருளையும் உருவகஞ்செய்யுங்கால் தம்முள் காரண காரியம் இயைபுடைத்தாக வைத்து உருவகஞ்செய்வது. உ—ம்.

"நாற்குணமு நாற்படையா வைம்புலனு நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே யணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதனமதிக் குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு."

படை, அமைச்சு, முரசு முதலியன அரசின் அங்கமாதலின் இயைபுடையவாயின.

ஏகதேச உருவகம்.—ஒரு செய்யுளகத்து ஓரிடத் தொருபொருளை உருவகஞ் செய்யுங்கால் மாட்டேறு பெற உருவகஞ்செய்து, அப்பொருளொடு சம்பந்தமுறப் பிறிதோர் பொருளை அச்செய்யுளகத்துப் பிறிதோரிடத்து மாட்டேறுபெற உருவகஞ்செய்யாது, தொகைநிலை வாய்பாட்டாற் கூறுவது என்பர் மாறனலங்காரமுடையார்.

கருமமாவது கருவியாவது ஒன்றனை உருவஞ்செய்து ஒன்றனை வாளாது கூறுதல் என்றது இல்க்கணவிளக்கம். உ—ம்.

"அறியாமை யென்னும் அகவிருளைச் சீக்கப்
பிறியா தறிவிருக்கப் பெற்றும்—குறியாத
தீச்சொற் பயில்வரே செண்பகமா றன்பவள
வாய்ச்சொற் றிறம்பயிலா மல்."

அறியாமையென்னும் அகவிருளை என மாட்டேறுபெற உருவகஞ்செய்ததனோடும், எதிராகச் சம்பந்தமுற ஞானமாம் விளக்கு என மாட்டேறு பெற உருவகஞ் செய்யாது, தொகைநிலை வாய்பாட்டான் அறிவு எனக் கூறியிருக்கின்றது.

"அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது."

இதில் தாளைத் தெப்பமென்னுமையால் இதுவுமது.

"உரனென்னுங் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து."

இதில் உரனைத் தோட்டி என்றதற் கேற்ப, ஓரைந்தாகிய யானை என்னுமையால் இதுவுமது.

முற்றுருவகம்.—அவயவ அவயவிகள் எல்லாவற்றையும் உருவகப் படுத்துவது. உ–ம்.

"வட்ட வதன மதியு நுதற்பிறையும்
பெட்ட நகைநிலவும் பேர்த்தறியாக்—கட்டளகக்
கங்குலின்மேன் மாறன் கனவரைவண் டீரிருந்தால்
இங்கிவளுக் குண்டோ விடை."

"விழியே களிவண்டு மென்னகையே தாறு
மொழியே முருகுலாங் தேறல்—பொழிகின்ற
தேமருவு கோதைத் தெரிவை முகமே
தாமரையென் னுள்ளத் தடத்து."

4. **வேற்றுமை.** — உபமான உபமேயங்களுக்கு ஏதேனும் ஒரு வேற்றுமையைக் காட்டுவது. உ–ம்.

"அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்கும்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மன்—திங்கள்
மறுவாற்றும் சான்றோ ரஃதாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்."

5. **ஒட்டு** (பிறிது மொழிதல்). — குறித்த பொருளை மறைத்து, அதனைப் புலப்படுத்தும்பொருட்டு, அதனோடொத்த வேறொரு பொருளைக் கூறுவது. அஃதாவது, உபமானத்தினாலே உபமேயம் அறியும்படி சொல்வது என்பதாம்.

"நெடும்புனலுள் வெல்லு முதலை அடும்புனலின்
நீங்கி னதனைப் பிற;"

"கடலோடா கால்வ னெடுந்தோர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து;"

"காலாழ் களரி னரியடும் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு"

என வருங் குறள்கள், அரசர் தமக்குச் சாதகமும் பகைவர்க்குப் பாதகமுமான இடத்தில் நின்று சண்டைசெய்க என்னும் கருத்துடையனவாதலால் ஒட்டணியாம். எளியரென்று பலரோடு பகைகொள்வான் தான் வலியனேயாயினும், அவர் ஒருங்குசேர்ந்தவிடத்து வலியழிவான் என்னுங் கருத்து.

"பீலிபெய் சாகாடு மச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்."

என உரைத்திருக்கின்றது.

ஒருவனது குணத்துக்கு இணங்கி நடப்பவனுயிருந்தும் அவனைப் பகைவன் அழிப்பான் என்னும் பொருளை, "தண்ணீர் வெந்நீரானாலும் நெருப்பை அவிக்கும்" எனவும், பெரியோர் கோபித்தெழுந்தால் அவரைத் தடுப்பவர் எவருளர் (ஒருவருமில்லை) என்னுங் கருத்தை "கடல் கொதித்தால் விளாவ நீர் எங்கே," "கடல் பெருகினால் கரையேது" எனவும் இங்ஙனம் வருவனவும் ஒட்டணி.

6. ஒப்புமைக் கூட்டம். — உயர்வினாலேனும் இழிவினாலேனும் சிறந்தவைகளுடன், ஒரு பொருளைக் கூட்டி யுரைப்பது. சமத் தன்மை யுடையவைகளை ஒருங்கு கூட்டுதல் என்பது சொல் லின்படி பொருள்.

உ—ம். "ஆறு நேரான ஊரும், அரசனோ டெதிர்த்த குடியும், புருஷனோ டேறுமாறான பெண்ணும், நீறு நீறாகி விடும்."

"காட்டில் புதைத்த கனதனமும் பாவாணர்
பாட்டி லமைத்த பழம்பொருளும்—வீட்டின்
மனையாள் குணமும் மழைபெய்யு நாளும்
அறிவையே யாறு லறை."

நான்மணிக்கடிகை — இன்னாநாற்பது — இனியாநாற்பது முதலியவற்றின் பாக்களும் இதற்குதாரணமாகும்.

7. தற்குறிப் பேற்றம்.—அசையும் பொருள் அசையாப் பொருள் என்னும் இருவகைப் பொருளின் கண்ணும் இயல்பாக எய்திய தன்மைக் கூறுபாட்டை விலக்கிப், பிறிதொரு காரணத்தால் விளைந்ததெனக் கவியானவன் விதித்துக்கொண்டதனை, அதன் கண்ணதாக ஏற்றுவதாம். ஒரு விதமாய் இருக்கும் பொருளை வேறொரு விதமாய்ச் சிந்தித்துச் சொல்வது. கவி தன் குறிப்பை யேற்றுதல் என்பது சொற்பொருள். இவ்வணி அன்ன போல என்பன முதலிய உவமச்சொல் புணர்ந்து விளங்கும் தோற்றமும் உடைத்து. உ—ம்.

"வேனில் வெயிற்குலர்ந்த மெய்வறுமை கண்டிரங்கி
வானின் வளஞ்சுரந்த வண்புயற்குத்—தானுடைய
தாதுமே தக்க மதுவுந் தடஞ்சினையாற்
போதுமீ தேந்தும் பொழில்."

"பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்
தல்ல லுழப்ப தறிதிரேல்—தொல்சிறப்பின்
நாவின் கிழத்தி யுறைதலாற் சேரானே
பூவின் கிழத்தி புலந்து."

"மையறு மலரி னீங்கி யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவ ளிருந்தா ளென்று செழுமணிக் கொடிக ளென்னும்
கைகளை நீட்டி யந்தக் கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை யொல்லை வாவென் றழைப்பது போன்ற தம்மா."

8. ஐயவணி (சந்தேகம்).—ஒப்புமையினாலே ஒரு பொருளைக் கண்டு இதுவோ அதுவோ எனச் சந்தேகித்தலாம். உ—ம்.

"தாதளவி வண்டு தடுமாறுந் தாமரைகொல்
மாதர் விழியுலவும் வாண்முகங்கொல்—யாதென்
திருபாற் கவர்புற் றிடையூச லாடி
ஒருபாற் படாதென் னுளம்."

9. மயக்கவணி (பிராந்தி).—ஒப்புமையினாலே ஒரு பொருளை மற்றொரு பொருளாக அறிதலாம். உ—ம்.

"மழைக்கண் மங்கையர் பயிறர மரகத மணியின்
இழைத்த செய்குன்றின் பைங்கதிர் பொன்னிலத் தெய்தக்
குழைத்த பைந்தரு நீழலிற் குலவுமா னினங்கள்
தழைத்த புல்லென விரைவொடு தனித்தனி கறிக்கும்."

10. அதிசயம்.—கவியால் கருதப்பட்ட ஒரு பொருளது வனப்பை மிகுத்துச் சொல்லுங்கால் உலகநடை யிறவாத தன்மைத்தாகி உயர்ந்தோர் வியப்பத் தோன்றுவது. உ—ம்.

"பண்டு புரமெரிப்ப மேன்மேற் படர்ந்தின்றும்
அண்ட முகடு நெருப்பரு—தொண்டளிர்க்கை
வல்லி தழுவக் குழைந்த வடமேரு
வில்லி நுதன்மேல் விழி."

"உள்ளம் புகுந்தே யுலாவும் ஒருகாலென்
உள்ள முழுதும் உடன்பருகும்—ஒள்ளிழைநின்
கள்ளம் பெருகும் விழிபெரிய வோகவல்வேன்
உள்ளம் பெரிதோ வுரை."

11. உதாத்தம் (வீறுகோளணி).—உள்ளமிகுதி செல்வமிகுதி என்னும் இரண்டையும் விசேஷித்துரைப்பது (பெருமை சிறுமைகளை வியந்துரைப்பது அதிசயவணி.) உ—ம்.

உள்ளமிகுதி.

"மண்ணகன்று தன்கிளையி னீங்கி வனம்புகுந்து
பண்ணுந் தவத்திசைந்த பார்த்தன்றான்—எண்ணிறந்த
மீதண்டர் கோன்குலையும் வெய்யோர் குலந்தொலைத்தான்
கோதண்ட மேதுணையாக் கொண்டு."

செல்வமிகுதி.

"பொற்சிறு தேர்மிசைப் பைம்பொற் போதக
நற்சிறு ரூர்தவி னங்கை மார்வீஇ
உற்றனர் கோழிமே லெறிந்த வொண்குழை
மற்றத்தே ருருள்கொடா வளமை சான்றவே."

12. விசேடம்.—ஒருவன் செய்யுங் காரியத்தில் சிறப்புத்தோன்ற அதன் கருவிகளில் குறைபாடு கூறுவது. உ—ம்.

"தொல்லை மறைதேர் துணைவன்பால் யாண்டுவரை
எல்லை யிருநாழி நெற்கொண்டோர்—மெல்லியலாள்
ஓங்குலகில் வாழு முயிரனைத்து மூட்டுமால்
ஏங்கொவிநீர்க் காஞ்சி யிடை."

"யானை யிரதம் பரியா ளிவையில்லைத்
தானு மனங்கன் தனுக்கரும்பு—தேனர்
மலரைந்தால் வென்று வடுப்படுத்தான் மாரன்
உலகங்கண் மூன்று மொருங்கு."

"நறைத்துள வம்புனை நம்பெரு மாள்விற லுஞ்சொல்வதோ
மறைப்பரி பூட்டிய மாநிலத் தேரில்லை வாளெயிற்றின்
கறைப்பணி நாணுடை மேருவில் வில்லை கடும்பவளச்
சிறைத்தழ லம்பில்லை ஒன்று ரறுபுறஞ் செற்றதற்கே."

13. மேன்மே லுயர்ச்சியணி.—மேன்மேலும் ஒன்றற் கொன்று உயர் குணத்தாலேனும் இழிகுணத்தாலேனும் உயர்வாதலைச் சொல்லுவது. உ—ம்.

"தேன்மதுர மாமதனிற் றெள்ளமுத மேமதுர
மான்சொலதி னும்மதுர மாம்." இது உயர்வு.

"நீரினு நுண்ணிது நெய்யன்பர் நெய்யினும்
யாரு மறிவர் புகைநுட்பம்—தேரின்
நிரப்பிடும்பை யாளன் புகுமே புகையும்
புகற்கரிய பூழை நுழைந்து." இது இழிவு.

14. புகழாப்புகழ்ச்சி (வஞ்சப் புகழ்ச்சியணி).—ஒருபொருளைப் பழிப்பதுபோல் விளங்கிப் புகழைத் தரும்படி கூறுவதும், புகழ்வதுபோல விளங்கிப் பழிப்பைத் தரும்படி கூறுவது மாம். உ—ம்.

"வில்லா லடிக்கச் செருப்பா லுதைக்க வெகுண்டொருவன்
கல்லா லெறியப் பிரம்பா லடிக்கவிக் காசினியில்
அல்லார் பொழிற்றில்லை யம்பல வாணர்க்கோ ரன்னைபிதா
இல்லாத தாழ்வல்ல வோவிங்ங னேயெளி தானதுவே."

"தேவ ரனையர் கயவர் அவருந்தா
மேவன செய்தொழுக லான்."

"நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்."

15. வேற்றுப்பொருள் வைப்பு.—ஒரு வாக்கியப்பொருளைக் கூறி நாட்டி அதனை உறுதிப்படுத்தற்கு மற்றொரு வாக்கியப் பொருளைக் கூறி வைப்பது. இங்ஙனங் கூறப்பட்ட இரண்

டாவது பொருள் முந்தினதை நன்கு விளக்குவதாகும்; அதாவது பொதுப்பொருளால் சிறப்புப்பொருளையும், சிறப்புப்பொருளால் பொதுப்பொருளையும்,சாதிப்பதாகும். உ-ம்.

"புறந்தந் திருளிரியப் பொன்னேமி யுய்த்துச்
சிறந்த வொளிவளர்க்குந் தேரோன்—மறைந்தான்
புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்றார் யார்."

"சிற்றிடைச் சீதை யென்னு நாமமுஞ் சிந்தை தானும்
உற்றிரண் டொன்றாய் நின்றா லொன்றொழித் தொன்றையுள்ள
மற்றொரு மனமு முண்டோ மறக்கலாம் வழிமற் றியாதோ
கற்றனர் ஞான மின்றேற் காமத்தைக் கடக்க லாமோ."

16. **ஏது.**—இன்ன காரணத்தால் இது நிகழ்ந்ததென்று ஒருபொருளுக்குச் சாதனங் கூறுவது. உ-ம்.

"எல்லைநீர் வையகத் தெண்ணிறைந்த வெவ்வுயிர்க்கும்
சொல்லரிய பேரின்பந் தோற்றியதால்—முல்லைசேர்
தாதலைத்து வண்கொன்றைத் தாரலைத்து வண்டார்க்கப்
பூதலத்து வீழ்ந்த புயல்."

"காதலன் மேனூடல் கரையிறத்தல் காட்டுமால்
மாதர் நுதல்வெயர்ப்ப வாய்துடிப்ப—மீது
மருங்குவளை வின்முரிய வாளிடுக நீண்ட
கருங்குவளை சேந்த கருத்து."

17. **காரணமாலை.**—பின்பின்னாக வருவனவற்றிற்கு முன்முன்னாக வருவனவற்றைக் காரணமாகவேனும் காரியமாகவேனும் உரைப்பது. உ-ம்.

"நீதி யாற்செல்வ நிகழ்செல்வத் தாற்கொடைமற்
றோதுகொடை யாற்சீ ருள."

இதில் நீதி முதலியன செல்வ முதலியவற்றிற்குக் காரணமாதல் காண்க,

"படர்நரகம் பாவத்தாற் பாவ மிடியான்
மிடியீ விலாமையினா மே."

இதில் நரக முதலியன பாவ முதலியவற்றிற்குக் காரியமாகின்றன

"மழையின்றி மாநிலத்தார்க் கில்லை. மழையும்
தவமிலா ரில்வழி யில்லை. தவமும்
அரசிலா ரில்வழி யில்லை. அரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில்."

"கற்பக் கழிமட மஃகும். மடமஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகின் கோளுணரும். கோளுணர்ந்தால்
தத்துவ மான நெறிபடரும், அந்நெறி
இப்பா லுலகத் திசைநிறீஇ உப்பால்
உயர்ந்த வுலகம் புகும்."

18. **பரிவர்த்தனை.**—ஒருபொருளைக் கொடுத்து ஒருபொருளை மாற்றிக்கொண்டதாகக் கூறுவது. உ–ம்.

"சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையுந் தந்து."

"சிந்தனை யுனக்குத் தந்தேன், திருவரு ளெனக்குத் தந்தாய்.
வந்தனை யுனக்குத் தந்தேன் மலரடி யெனக்குத் தந்தாய்.
பைந்துண ருனக்குத் தந்தேன், பரகதி யெனக்குத் தந்தாய்
கந்தனைப் பயந்த நாதா! கருவையில் வாழுந் தேவே!

19. **விரோதம்.**—ஒன்றுக்கொன்று விரோதமான பொருள்களைச் சேர்த்துக் கூறுவது. உ–ம்.

"நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கம். தீயொழுக்கம்
என்று மிடும்பை தரும்."

"காலையு மாலையுங் கைகூப்பிக் காரேழுதால்
மேலை வினையெல்லாங் கீழவாம்.—கோலக்
கருமான்றோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தார்ப்
பெருமானைச் சிற்றம் பலத்து."

20. **பின்வருநிலை.**—ஒரு செய்யுளில் முன்வந்த சொல்லாவது பொருளாவது பலவிடத்துப் பின்னும் வருதல். உ–ம்.

சொற்பின் வருநிலை—

"வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்."

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."

பொருட்பின் வருநிலை.—

"அவிழ்ந்தன தோன்றி அலர்ந்தன காயா
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை—மகிழ்ந்திதழ்
விண்டன கொன்றை விரிந்த கருவிளை
கொண்டன காந்தள் குலை."

21. **சிலேடை.**—உச்சரிக்கும்போது ஒருவகையால் நின்ற சொற்றொடர் வெவ்வேறான பலபொருள் கொள்ள வருவது. அது, சொற்கள் நின்றநிலை குலையாமல் பல பொருள்படும் செம்மொழிச் சிலேடை யெனவும், தொடர்ந்து நின்ற சொற்களைப் பிரித்துத் தொகை வேறு படுத்திப் பல பொருள் கொள்வதான பிரிமொழிச் சிலேடை யெனவும் இரண்டு வகைப்படும். உ–ம்.

செம்மொழிச் சிலேடை.—

"நஞ்சிருக்குந் தோலுரிக்கு நாதன்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்துப் பற்பட்டான் மீளாது—விஞ்சுமலர்த்
தேம்பா யுஞ்சோலைத் திருமலைரா யன்வரையிற்
பாம்பாகும் வாழைப் பழம்."

பிரிமொழிச் சிலேடை.—

"கண்ணும் மொழியுங் கரும்பிணையாம்."

கரும்பிணை என்பது கண்ணொடு பொருத்துங்கால் கரியபிணை (மான்) என்றும், மொழிக்குப் பொருத்துங்கால் கரும்பு இணையாம் என்றும் கொள்ள நிற்கின்றது.

22. நிரனிறை.—வரிசையாக நிறுத்திய சொற்பொருள்களை அம்முறை நிறுத்திய சொற்பொருள்களோடு பொருந்தவைத்தல். வரிசையாக நிறுத்தப்படுவது என்பது சொற்பொருள்.

புல்லையும் புனலையுங்கொண்டு பிழைக்கும் மான் மீன்களுக்கு வேடனும் செம்படவனும் ஏதுவில்லாமலே பகையாகின்றனர்." இது நேர்நிரனிறை. எதிரெதிராக அடுக்கிவருவது எதிர் நிரனிறை. உ-ம்.

"ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்று னிருந்தான் கிடந்தா னிதுவன்றே
மன்றார் மதிற்கச்சி மாண்பு."

வெஃகாவில் கிடந்தான், பாடகத்தில் இருந்தான், ஊரகத்தில் நின்றான் எனக்கொள்ளக் கிடத்தலால் எதிர்நிரனிறையாம்.

23. புணர்நிலை. (Zeugma).—ஒரேதொழில் அல்லது ஒரேகுணம் இரண்டு பொருளுக்குப் பொருந்தக் கூறுவது. கூடி நிற்கும் வலியினால் இருபொருளுக்கும் முடிவு ஒரு வாசகமாக வருவது. இவ்வணியில் ஒடு—ஓடு—உடன் என்பன வருவது இயல்பு. உ—ம்.

"வேண்டுருவங் கொண்டு கருகி வெளிபரந்து
நீண்ட முகிலுடனே நீர்பொழிந்த—ஆண்டகையோர்
மேவல் விரும்பும் பெருநசையால் மெல்லாவி
காவல் புரிந்திருந்தோர் கண்."

கண் முகில் என்னும் இருபொருட்கும் உடனிகழ்ச்சிபற்றி 'நீர்பொழிந்த' என ஒரு வாசகம் புணர்ந்துநிற்கக் கூறியவாறு கண்டுகொள்வது.

"பூங்காவிற் புள்ளொடுங்கும் புன்மாலைப் போதுடனே
நீங்காத வெம்மையவாய் நீண்டனவால்—தாங்காதல்
வைக்குந் துணைவர் வருமவதி பார்த்தாவி
உய்க்குந் தமியோ ருயிர்ப்பு."

இங்கே தமியோருயிர் மாலைப்போது என்னும் இருபொருளையும் 'வெம்மையவாய் நீண்டன' என ஒரு வாசகத்தான் முடித்திருக்கின்றது.

24. மடக்கு.—எழுத்தின் கூட்டம் இடைவிட்டேனும் இடைவிடாதேனும் பொருள் வேறுபடுமாறு மீண்டும் வருவது.

உ—ம். "வேலையுலகிற் பிறக்கும்
வேலையொழிந்தோமில்லை"

"ஆரவாரத்தினோடு மருவியே
ஆரவாரத்தினோடு மருவியே."

ஆர—நிறைய, ஆரத்தினோடு — முத்தோடு, மருவி — சேர்ந்து, ஆரவாரத்தின்—பேரிரைச்சலோடு, அருவி ஓடும் — அருவி ஓடும்.

"சோலைத்—தருமாதரை நட்டான் றண்முல்லையாயர்
தருமாதரை நட்டான் சார்பு.

சோலைத்தருவை மா (பெரிய) தரையிலே நட்டான்: ஆயர் தரு (பெற்ற) மாதரை நட்டான் (நட்புக் கொண்டவன்.)

V. பொருள்.

பொருளாவது செய்யுளிற் கூறப்பட்ட விஷயம். அது அறம் பொருள் இன்பம் என மூன்று வகைப்படும். மனத்தால் நோக்குதற்கு எட்டாத வீடு, துறவறமாகிய காரணவகையால் கூறப்படுவதல்லது இலக்கணவகையால் கூறுதற்கு எட்டாமையின், நூல்கள் அதனை விரித்துரைப்பதில்லை. அங்ஙனம் அறம் பொருள் இன்பம் என விரித்துக் கூறப்படும் பொருளே, தொகுத்துக்கூறும் தமிழ் நடையான், அகப்பொருளும் புறப்பொருளுமென இருவகைத்தாம்.

பொருள்.
- அகப்பொருள்.— இன்பம்.
- புறப்பொருள்.
  - அறம்.
  - பொருள்.

அகப்பொருளாவது, இன்பமென்னும் பொருளாம். அது ஒத்த அன்பினல் ஒருவனும் ஒருத்தியும் கூடிய கூட்டத்திற் பிறந்து அவருள்ளத்தின் கண் நிகழ்வதாகலின் அகப்பொருள் எனப்பெறும். அது அகத்திணை எனவும் படும்.

அவ்வகப்பொருள் கைக்கிளைத்திணையும் ஐந்திணையும் பெருந்திணையும் என்னும் இவ்வேழிணையும்பற்றி நிகழும். இவற்றுள், கைக்கிளை என்பது ஒருதலைக் காமம்; ஐந்திணை என்பது அன்புடைக் காமம்; பெருந்திணை என்பது பொருந்தாக் காமம். ஐந்திணை என்றவற்றிற்குப் பொருந்திய பெயராவன குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் என்பனவாம்.

அகப்பொருள்.
- கைக்கிளை.
- ஐந்திணை.
  - குறிஞ்சி.
  - பாலை.
  - முல்லை.
  - மருதம்.
  - நெய்தல்.
- பெருந்திணை

அவற்றுள் குறிஞ்சியாவது, புணச்சியும் அதன் நிமித்தமும். பாலையாவது, பிரிதலும் அதன் நிமித்தமும். முல்லையாவது, இருத்தலும் அதன் நிமித்தமும். மருதமாவது ஊடலும் அதன் நிமித்தமும். நெய்தலாவது, இரங்கலும் அதன் நிமித்தமும். இவை அகப்பொருளிலக்கணத்தில் உரிப்பொருள் எனப்படும். இவ்வொழுக்கங்களுக்குரிய நிலமும் பொழுதும் முதற்பொருள் எனப்படும்.

இவ்வொழுக்கங்களில் குறிஞ்சிக்குரிய நிலம், மலையும் மலை சார்ந்த இடமும். பாலைக்குரிய நிலம், சுரமும் அதைச்சார்ந்த இடமும். முல்

லக்குரிய நிலம், காடும் அதைச்சார்ந்த இடமும். மருதத்துக்குரிய நிலம், பழனமும் அதைச்சார்ந்த இடமும். நெய்தலுக்குரிய நிலம், கடலும் அதைச்சார்ந்த இடமும்.

கார் கூதிர் முன்பனி பின்பனி இளவேனில் முதுவேனில் என்னும் பெரும்பொழுதாறிலும், மாலை யாமம் வைகறை காலை நண்பகல் எற்பாடு என்னும் சிறுபொழுதாறிலும், குறிஞ்சிக்குச்சிறந்தன கூதிரும் யாமமும் முன்பனியும்; பாலைக்குச் சிறந்தன வேனிலும் நண்பகலும் பின்பனியும்; முல்லைக்குக் காரும் மாலையும்; மருதத்துக்கு வைகறையும்; நெய்தலுக்கு எற்பாடுமாம். பெரும்பொழுதாறும் மருதத்துக்கும் நெய்தலுக்கும் சிறந்தனவாம்.

அவ்வந் நிலத்துக்குரிய தெய்வமும் உணவும் மாவும் மரமும் புள்ளும் பறையும் தொழிலும் யாழும் பண்ணும் ஊரும் நீரும் பூவும் தலைவரும் மக்களும் என்பன பதினான்கும் கருப்பொருளெனப்படும்.

ஐந்திணையும் முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என்னும் மூன்றாலும் உரைக்கப்படும். இவ்வைந்திணையிடமாகக் களவும் கற்பும் என இரண்டொழுக்கம் நிகழும். விதியின் வழியே ஒருவன் கந்தர்வ நெறியாலே ஒருத்தியை அடைவதே களவும், பின் அவளை முறையாக மணஞ்செய்துகொண்டு இல்லற நடத்தலே கற்புமாம். கைக்கிளை என்பது ஒருதலைக் காமமாதலாலும், பெருந்திணை என்பது பொருந்தாக் காமமாதலாலும், இவை யிரண்டும் அகப்புறம் எனப்படும்.

இங்ஙனம் தலைவனும் தலைவியும் உரிமைச் சுற்றத்தோடு கூடி நின்று மக்களைப்பெற்று இல்லற நடத்தி, பின் தாம் அதுகாறும் நுகர்ந்த காமத்தைத் தீதாகக்கொண்டு வெறுத்து, துறவற நிகழ்த்தி மெய்யுணர்ந்து வீடுபெறுவர். ஆகவே அகப்பொருளின் முடிந்த நோக்கமாவது வீடுபேறே.

புறப்பொருளாவது, அறமும் பொருளும் பற்றிப் புறம்பே நிகழும் ஒழுக்கமாம். அகம்போல ஒத்த அன்புடையார் தாமேயன்றி எல்லாரானும் அநுபவித்து உணரப்படுதலானும், இவ்வாறிருந்ததெனப் பிறருக்குக் கூறப்படுதலானும், இது புறமாயிற்று. அறமாவது, பெரியோர் நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். பொருளாவது, தரும மார்க்கத்திலே அரசநீதி துணைக் காரணமாக ஈட்டப்பட்ட மணி பொன் நெல் முதலாயின. பொருள் இம்மை மறுமை என்னும் இரண்டையும் பயக்கும். அறம் இம்மை மறுமையோடு வீட்டையும் பயக்கும்.

உயிர்க்குறுதியான நீதியும் உலகநிலையாமை முதலிய உண்மையும் வருணவொழுக்க முதலியனவும் உரைத்தலான அறமும், அவ்வருணத்தார் தமக்குரிய தொழில் வகைகளால் ஈட்டுதலான பொருளும்

கூறுவது புறப்பொருட்டிறனும். அரசனுக்கு வேற்றரசரை வெல்லுதலும் வேறு தேயங்களைக் கொள்ளுதலுமாகிய மறச்செய்கையே பொருளீட்டும் அறநெறியாதலின், அரசனுடைய போர்முறைகளையும் புறப்பொருள் விரித்துரைக்கின்றது. இவற்றையெல்லாம் வெட்சி வஞ்சி உழிஞை தும்பை வாகை காஞ்சி பாடாண் என்னும் எழுவகைத் திணைகளாக வகுத்துக் கூறுவதாகும் புறப்பொருளின் நோக்கம். வெட்சியாவது — பகைவருடைய பசுக்களைக் கவர்தல் வஞ்சி — பகைவர்மேற் செல்வது. உழிஞை — பகைவருடைய மதிலை முற்றல். தும்பை — மேற்சென்ற வேந்தரைப் பொருதழித்தல். வாகை—வெற்றி. காஞ்சி— நிலையாமை. பாடாண் — தேவரையும் மக்களையும் பரவலும் புகழ்தலும். காஞ்சியும் பாடாணும் புறப்புறம் எனப்படும். இத்திணைகளின் குறியீடுகள் பூக்களாற் போந்த காரணக்குறிகளாம்.

சங்கச்செய்யுள்களில் எட்டுத்தொகையில் அகப்பொருள் உரைப்பன நற்றிணை—குறுந்தொகை — ஐங்குறுநூறு — கலித்தொகை — அகநானூறு என்பன: புறப்பொருள் உரைப்பன பதிற்றுப்பத்து — புறநானூறு என்பன. பத்துப்பாட்டில் முல்லைப்பாட்டும் நெடுநல்வாடையும் குறிஞ்சிப்பாட்டும் பட்டினப்பாலையும் ஒருவாறு அகப்பொருள் உரைப்பன. பதினெண் கீழ்க்கணக்கில் கார்நாற்பதும் ஐந்திணை நான்கும் அகமே உரைப்பன: களவழி நாற்பது புறமே உரைப்பது. இன்னிலை இரண்டும் உரைக்கின்றது.

முற்காலத்துப் புலவர் இயற்றிய இலக்கியங்களில் உரைத்துள்ள பொருள்களை ஆராய்ச்சிசெய்து, அவற்றின் நியதியைக் கடைப்பிடித்துப் பாகுப்படுத்தி உரைப்பதே பொருளிலக்கணமாம். இந்நியதி காலப்போக்கிலே வேறுபடுதல் இயற்கையாதலின் பொருளிலக்கணத்துக்குப் பிற்கால இலக்கியங்களை உதாரணம் காட்டுவதும், பிற்கால இலக்கியங்களுக்குப் பொருளிலக்கணத்தை மேற்கோள் காட்டுவதும் வெகுவாய்ப் பொருந்துவதில்லை. தமிழ் நாட்டின் மிகப் பழையகால நிலைமையை அறிவதற்குப் பொருளிலக்கணம் சாதனமாகின்றது. சரித்திர வுணர்ச்சியில்லாத உரையாசிரியர்கள் பொருளிலக்கணத்தையும் வடமொழி மிருதிகளையும் மயங்க உணர்ந்து சிற்சில இடங்களில் ஒன்றை ஒன்றாக உரைப்பாராயினர். இயன்றமட்டில் அகத்திணை புறத்திணைகளையும் சங்க இலக்கியங்களையும் நுனித்துணர்வோர் முற்காலத்துத் தமிழ் நாட்டின் நாகரீக நிலைமையை நன்குணர்தல் கூடும். திருக்குறளை ஒருவாறு பொருளிலக்கணத்துக் கேற்பப் பிற்காலத்தில் பொதுவகையால் இயற்றிய இலக்கியமாகக் கொள்ளுதல் பொருந்தும்.

பிற்காலத்தில் வகுக்கப்பட்ட தொண்ணூற்றாறு பிரபந்தவகைகளில் ஒன்றான கோவை என வழங்கும் இலக்கியங்கள், பொருளி

லக்கணத்தில் அகப்பொருளில் பல கொண்டும், புதுவதாகச் சில கற்பித்தும், ஒரு தலைவனும் ஒரு தலைவியும் களவும் கற்பும் நிகழ்த்தியவாருகக் கோவைப்படுத்தி, வழிபடுகடவுளையோ வள்ளலொருவனையோ பாட்டுடைத் தலைவனாக வைத்து அவன் சிறப்பு விளங்க உரைப்பனவாயின. இன்ன இலக்கியங்கட்கு நாற்கவிராஜ நம்பியகப்பொருள் இலக்கணமாயிற்று.

பாயிரம்.

மூவகை நூல்.

முதல்வழி சார்பென நூல்மூன் றாகும். (5)

முதனூல்.

வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும். (6)

வழிநூல்.

முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
அழியா மரபினது வழிநூ லாகும். (7)

சார்புநூல்.

இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைநூ லாகும். (8)

நூலுக்குப் பத்துக் குற்றம்.

குன்றக் கூறல் மிகைப்படக் கூறல்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தல் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுதல் நின்றுபய னின்மை
என்றிவை ஈரைங் குற்றம் நூற்கே. (12)

நூலுக்குப் பத்தழகு.

சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை ஆழமுடைத் தாதல்
முறையின் வைப்பே உலக மலையாமை
விழுமியது பயத்தல் விளங்கு தாரணத்த
தாகுதல் நூலிற் கழகெனும் பத்தே. (13)

சூத்திரம்.

சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வ னாடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம். (18)

உரையின் பொதுலக்ஷணம்.

பாடங் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை யுதாரணம் வினாவிடை விசேடம்
விரிவதி காரம் துணிவு பயனோ
டாசிரிய வசனமென் றீரே முரையே. (21)

சிறப்புப்பாயிரத்தின் பொதுவிதி.

ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே. (47)

காலங் களனே காரண மென்றிம்
மூவகை யேற்றி மொழிநரு முளரே. (48)

நூற்பெயருக்குச் சிறப்புவிதி.

முதனூல் கருத்த னளவு மிகுதி
பொருள்செய் வித்தோன் றன்மை முதனிமித்தினும்
இடுகுறி யானுநூற் கெய்தும் பெயரே. (49)

பாயிரம் நூலுக்கு இன்றியமையாமை.

ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே. (54)

முக்கியமான இலக்கணங்கள்.

அகப்பொருள் (களவியல்)—இறையனார், உரை நக்கீரர் எழுதியது.

அகப்பொருளிலக்கணம்—நாற்கவிராச நம்பி.

இலக்கணக்கொத்து—சுவாமிநாத தேசிகர் (ஈசான தேசிகர்).

இலக்கண விளக்கம்—வைத்தியநாத நாவலர். உரை அவரே எழுதியது. இலக்கண விளக்கச் சூறாவளி என்று இதற்கு மறுப்பு எழுதினவர் சிவஞான முனிவர்.

ஐந்திலக்கணத் தொன்னூல்—தைரியநாத சுவாமிகள் (வீரமாமுனிவர்—Father Beschi).

குவலயானந்தம்—மாணிக்கவாசகத் தம்பிரான்.

சின்னூல் நேமிநாதம்—குணவீர பண்டிதர்.

தண்டியலங்காரம்—தண்டியாசிரியர். உரையெழுதினவர்-சுப்பிரமணிய தேசிகர்.

தொல்காப்பியம்—தொல்காப்பிய முனிவர், உரையெழுதினோர்—இளம்பூரணர் (உரையாசிரியர்), கல்லாடர், சேனாவரையர் (சொல்லதிகாரமாத்திரம்), பேராசிரியர், நச்சினார்க்கினியர். பாயிரவிருத்தியும் முதற் சூத்திர விருத்தியும் எழுதினவர் சிவஞானமுனிவர்.

நன்னூல்—பவணந்தி முனிவர்—முதலுரை எழுதினவர் மயிலைநாதர். அது காண்டிகையுரை. விருத்தியுரை எழுதினவர் சங்கர நமச்சிவாயப்புலவர்; இது சிவஞான முனிவரால் திருத்தப் பெற்றது. பிற்காலத்துக் காண்டிகையுரை எழுதினோர்—இராமாநுஜ கவிராயர்—சரவணபெருமாளையர்.

பிரயோக விவேகம்—சுப்பிரமணிய தீக்ஷிதர்.

மாறனகப்பொருள்
மாறனலங்காரம் } —திருக்குருகைப் பெருமாள் கவிராயர். அலங்காரத்துக்கு உரையெழுதினவர் கவிராஜகேசரி—திருமேனி இரத்தின கவிராயர்.

யாப்பருங்கலக்காரிகை — அமிர்தசாகரமுனிவர். உரையெழுதினவர் குணசாகர முனிவர்.

யாப்பருங்கலம்—அமிர்தசாகரமுனிவர்.

வீரசோழியம்—புத்தமித்திரர். உரையெழுதினர்—பெருந்தேவனார்.

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—B. 14748.



சிவஞான முனிவர்.